
குண்டூசி
செப்டம்பர் 83
தெய்வீகத்
திங்களிதழ்

பண்டிகை நாடகளில் நெஞ்சை அள்ளும் ராஜேஸ்வரியின்
புத்தாடைகளை அணிந்து உங்கள் மகிழசசியை இரட்டிப்பாக்குங்கள்
பட்டு
ஜவுளிகளுக்கு..
ஸ்ரீ ராஜேஸ்வரி
ஹால்
121 ராஜவீதி கோவை
நவநாகரீக ஜவுளிகளுக்கு...
உஷா
சாரிபாரடைஸ்
333, ராஜ வீதி
கோயமுததூா-641001
போன 33389
ANUREKHA
OSR

செப்டம்பர் — 1983

பிரதமரின் பொறுப்பு

இலங்கையில் இன்றைய இனவெறியின் எதிரொலி பாரதமெங்கும் ஏன், அகில உலகமே கவனிக்கும் அளவில உள்ளது;

காரணம், மனிதாபிமான அடிப்படையில் மக்கள் துயரம்தான் முக்கிய இலக்காக உள்ளது

இலங்கையில் ஏற்பட்டுள்ள நஷ்டமும், கஷ்டமும் தமிழர்களுக்கு மட்டும்தானே என்று இருக்கக்கூடாது. பலதேச, மொழி, இன மக்களும் அவதிக்கு ஆளாகி உள்ளார்கள்.

பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள்தான். மற்ற தென் மாநிலத்தவர்கள் நமக்கு என்ன என்று இருககமாட்டார்கள். அவர்களும் மனிதர்கள் தானே ?

வட்டமேஜை, பேச்சு வார்த்தைபோன்றவைகள் தற்சமய சூழ்நிலையைப் பார்த்தால் ஜெயவாத்தனேயின் பிடிவாதக் குணம் பயன் தருமா? என்பது கேள்விக் குறியாகத்தான் ஏற்படலாம் என பழுத்த அரசியல் வாதிகள் எண்ணுகிறார்கள்.

நம் தமிழக அரசும், முதலவர் மற்றும் எல்லா கட்சியாளர்களும் அதில் மாறுபட்டு இருக்க முடியாது. நம தமிழக அரசியல் கட்சிகளும், தலைவர்களும் பொறுப்புடன் நடக்காமல், அரசியல் லாபமும், விளம்பரமும் தேடிக் கொள்ளுவதாகத்தான் நினைக்க வேண்டியுள்ளது.

இதற்கு நெடுமாறனின் செயல் உதாரணமாய் கொள்ளலாமல்லவா?

பேச்சு வார்த்தையில் அடிப்படை கொள்கை ஈழ மக்களின் பிரதிபலிப்பை மையமாகக் கொண்டு பார்த்தால் எந்த அளவு வெற்றி பெறும் என்பதும் கேள்வி குறிதான்.

இந்த நிலையில நம் பாரத பிரதமரின் ராஜதந்திர முறை பாராட்டும்படி இருந்தாலும், இனிமேல்தான பெரிய பொறுப்பும், திடமான மன போக்கும எப்படி இருக்கும் என ஈழ-தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை நம் பிரதமர் கடைபிடித்து வந்த முறையை ஒரு சிலர் குற்றம சாட்டினாலும், அவர் நிதானத்துடன் பதட்டமில்லாமல் செயல்படுவதை பெரும்பாலானவர்கள் பாராட்டத்தான் செய்வார்கள.

இலங்கை அரசும், தமிழர்களிடம் விசுவாசமான மனப்பாங்குடன் சுமுகமான அமைதிக்கு வழிதேடி, நல்லவிதமான முடிவு ஏற்பட ஆண்டவன்தான் அருள்புரிய வேண்டும்.

—ஜெய்ஹிந்த்.

காஞ்சி காமகோடி பரமாச்சார்யாள் அருளியது

ஜீவனும் பிரம்மமும்

ஜீவனும் பிரம்மமும் ஒன்றுதான் என்கிறார் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள். அதாவது நாமேதான் ஸ்வாமி என்கிறார். 'நான்தான் ஸ்வாமி' என்று தான் ஹிரண்யகசிபுவும் சொன்னான். அவனை ஸ்வாமியே நரசிம்மமாக வந்து சம்ஹாரம் செய்யும்படி ஆயிற்று. ஆசாரியாள் நாம் தான் ஸ்வாமி என்று சொல்வது ஹிரண்யகசிபு சொன்னது போலவா ?

இல்லவே இல்லை. 'நான்தான் ஸ்வாமி' என்று ஹிரண்யகசிபு சொன்ன போது தன்னைத் தவிர வேறு ஸ்வாமியே கிடையாது என்ற அகங்காரத்தில் சொன்னான். பகவத்பாதர்களோ ஸ்வாமியைத் தவிர வேறு எதுவுமே கிடையாது என்பதால் நாமும் ஸ்வாமிதான் என்கிறார். ஜீவன் தனக்கு உள்ள அகங்காரத்தை அடியோடு விட்டு விட்டால் இவனே பிரம்மத்தில் கரைந்து பிரம்மமாகி விடுகிறான் என்கிறார். இப்பொழுது நாம் உத்தரணி ஜலத்தைப் போல் கொஞ்சம் சக்தியுடன் இருக்கிறோம். ஸ்வாமி அகண்ட சக்தியுடன் சமுத்திரமாக இருக்கிறார். அந்தச் சமுத்திரத்திலிருந்து தான் இந்த உத்தரணி ஜலம் வந்தது. இந்த உத்தரணி ஜலம் தான் தனி என்கிற அகங்காரத்தைக் கரைத்து, சமுத்திரத்தில் கலந்து சமுத்திரமே ஆகி விடவேண்டும்.

நாம் ஸ்வாமியாக இல்லாவிட்டால் ஸ்வாமியைத் தவிர வேறான ஒன்றாக இருக்க வேண்டும். அவ்வாறெனில், பரமாத்மாவுக்கு வேறான வஸ்துக்களும் உண்டு என்றாகிவிடும். அதாவது பல வஸ்துக்களில் பரமாத்மாவும் ஒன்று என்றாகிவிடும். அவருடைய சம்பந்தமில்லாமல் அந்தப் பல வஸ்துக்கள் உண்டாகி இருக்கின்றன என்றாகும். இப்படி இருப்பின் அவர் பரமாத்மா ஸ்வாமி என்பதே பொருந்தாதே! எல்லாமாக ஆன ஒரே சக்தியாக இருக்கிறவர் மட்டும் தானே அவர் ஸ்வாமி? எல்லாம் அவர் என்னும் போது நாம் மட்டும் வேறாக இருக்க முடியுமா? எனவே 'ஸ்வாமியே நாம்' என்று வெளிப்பார்வைக்கு அகங்காரமாகப் பேசுகிற அத்வைதிகள் ஸ்வாமியின் மகிமையைக் குறைக்கவில்லை. மாறாக 'ஜீவன் ஸ்வாமி அல்ல, இவன் அல்பன், அவர் மகா பெரியவஸ்து. இவன் வேறு, அவர் வேறு' என்று அடக்கமாகச் சொல்கிறவர்கள் தான் தாங்கள் அறியாமலே அவரைப் பல சாமான்களில் ஒன்றாக்கி அவருடைய மகிமையைக் குறைத்து விடுகிறார்கள். அவரே சகலமும என்றால் நாமும்

அவராகத்தான் இருந்தாக வேண்டும்.

சமுத்திரமாக இருக்கிற அவரே தான் ஆற்று ஜலம், குளத்து ஜலம், கிணற்று ஜலம், அண்டா ஜலம், ஜப்பு ஜலம், உத்தரணி ஜலம் போல் தம்சக்தியைச் சிறுசிறு ரூபங்களாகச் செய்து கொண்டு பலவித ஜீவஜந்துக்களாகியிருக்கிருர் இதில் மனிதனுக்கும் போது பாப புண்ணியத்தை அனுபவிக்கவும், பாப புண்ணியம் கடந்த நிலையில் தாமே ஆகி விடவும் வழி செய்திருக்கிருர். மனிதனுக்கும் போது மனசு என்ற ஒன்றைக் கொடுத்து அதைப் பாப புண்ணியங்களில் ஈடுபடுத்திப் பலனை அனுபவிக்கச் செய்கிருர்.

மனசு ஆடிக்கொண்டேயிருக்கிற நிலையில் உள்ள நாம் எடுத்த எடுப்பில் பாப புண்ணியமற்ற நிலையை அடைந்து, அவரே நாம் என்று உணர முடியாது. ஆகவே அவரே தாமாக இருந்தாலும், அதை நாம் அனுபவத்தில் உணருவதற்கு அவரது அருளைப் பிரார்த்திக்க வேண்டியவர்களாகவே இருக்கிருேம். அவர் மகா பெரிய ஸ்வாமி நாம் அல்ப ஜீவன். அவர் மகா சமுத்திரம் நாம் உத்தரணி ஜலம் என்கிற எண்ணத்தோடு ஆரம்பத்தில் பக்தியே செய்ய வேண்டியவர்களாக இருக்கிருேம்.

ஸ்வாமி கொடுத்துள்ள மனசு தான் இப்போது நம்மை அவரிடமிருந்து பேதப் படுத்துகிறது. இந்த மனசை எடுத்த எடுப்பில் போ என்ருல் போகாது ஆகவே ஒருத்தரை மட்டும் பற்றிக்கொள்ள வேண்டும். மனசை அவர் குரங்காகப் படைத்திருக்கிருர். அந்தக் குரங்கு இப்போது தேகத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஆனுல் ஸ்வாமி இந்தத் தேகத்தை நசிப்பதாக அல்லவா வைத்திருக்கிருர்? இந்த அழுகல் பழத்தை மனக்குரங்கு விட்டு விடவேண்டும். அழுகாத பழம் கிடைத்தால் அழுகல் பழத்தைக் குரங்கு போட்டுவிடும் அழுகாத மதுரமான பழம் பரமாத்மாதான். அதை மனத்தால் பிடித்துக் கொண்டு சரீரப் பிரக்ஞையை விட்டுவிட அப்பியசிக்க வேண்டும். இதற்குத்தான் பக்தி, பூஜை, க்ஷேத்திராடனம் எல்லாம் வைத்திருக்கிறது. இவற்றில் மேலும் மேலும் பக்குவமடைந்து சரீரப் பிரக்ஞை, அகங்காரம் அடியோடு போய்விட்டால். அவர் பரமாத்மா, நாம் ஜீவாத்மா என்கிற பேதமே போய் அவரே நாமாக அத்வைதமாக ஆகிவிடுவோம்! நீ வேருெனுதிருக்க, நான் வெறெனுதிருக்க என்று அருணகிரிநாதர் பாடிய அநுபவத்தை அடைவோம்.

தொகுப்பு . ஏ.எஸ்.எம், சென்னை.

பத்மாவதி - சௌந்தரராஜன் திருமணம்

சுமார் நாற்பதாண்டுகளுக்கும் மேலாக மதுரையில பத்திரிகை விற்பனை ஏஜென்ஸியாக தொண்டாற்றி வருபவரும், பிரபல ஆனந்தவிகடன் ஏஜண்டும் என் அன்பு நண்பருமான திரு. டி. ஜி. 'கோபாலன் அவர்களின் அன்புச்செல்வி சௌபாக்யவதி பத்மாவதியின் திருமணம் 21-8-83 அன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் நல்ல முறையில நடைபெற்றது.

மணமகன் சிரஞ்சீவி எஸ். சௌந்திரராஜன் பி.எஸஸி., மதுரை பொதுப் பணித்துறையில் பணியாற்றுகிருர். நல்ல பொருத்தமான தம்பதிகள்.

திருமண விழாவிற்கு வந்திருந்த உறவினர்கள், பத்திரிகை சம்பந்தப்பட்டவர்கள் புதுமண தம்பதிகளை வாழத்திச் சென்ருர்கள்.

கால் நூற்ருண்டுக்கும் மேலாக குண்டூசிக்கு மதுரையில் விற்பனையாளராக இருநது நல்ல முறையில் உதவிவரும் என் அருமை நணபர் கோபால் அவர்களுக்கு நன்றி கூறி, இளமபுதுமண தம்பதிகட்கு வேலாயுத பெருமான் திருவருளை வேணடி நலஆசி கூறி வாழ்க்துகிறேன்.

—ஆசிரியர்.

பக்தி ரத்னாவளி

மகான் விஷ்ணு பூரி அருளியது

நவ வித பக்தியின் லட்சணங்களைக் கூறும் வகையில் ஸ்ரீவிஷ்ணு பூரி பாகவததத்தில் ஸ்ரீநாரதர் கூறும் ஒன்பதுவித பக்தி நிலைகளைக் குறிக்கிருர் இங்கு :

> ச்ரவணம் கீர்த்தனம் சாஸ்ய ஸ்மரணம் மஹதாம் கதே :
> ஸே வேஜ்யாவனதி—ர்தாஸ்யம் ஸக்யம் ஆத்ம ஸமர்ப்பணம் 6

பகவானைப்பற்றி சதா பெரியோர் சொல்ல காது கொடுத்து கேட்டல், அவன் புகழ் பாடுவது, சதா பகவானை சிந்தித்திருப்பது, பகவானுக்கு உபசரணைகள் செய்வது, அவனைப் பூஜிப்பது, பகவானை நமஸ்கரிப்பது, பகவானுக்கு தொண்டு செய்யும் மனப்பானையை வளர்ப்பது. அவனோடு இணக்கம் பெற முயல்வது, அவனையே சரணடைவது என இவை ஒன்பதும் பகவத் பக்தி விசேஷங்கள் ஆகும், இவை மகான்கள் எல்லாம் தேடும் அந்த ப்ரம்மத்தை அடைய உதவும், என்று கூறுகிருர் நாரதர் இங்கு.

இத்தகைய பக்தியைப் பயிலுவதால் ஏற்படும் விசேஷம் பற்றி ஸ்ரீ சுகமகரிஷி கூறுவது ;

> ச்ருத : ஸங்கீர்த்திதோ த்யாத: பூஜிதச்ராத்ரு அபி வா
> ந்ருணும் துனேதி பகவான் ஹ்ருத்ஸ்தோ ஜன்மாயுதாசுபம் 7

பகவானைப்பற்றி பெரியோர்களால் சொல்ல கேட்பதாலும், அவனைத் துதிப்பதாலும், அவனைப் பற்றி தியானிப்பதாலும், பூஜிப்பதாலும், தன்னை அவனது சேவைக்கு உட்படுத்திக் கொள்வதாலும், பக்தனின் உள்ளத்தே உறையும் அந்த பகவான், தனது பக்தனின் கடந்த பல ஜன்மங்களில் செய்த பாபங்களையெல்லாம் நீக்குகிருர். பக்தன் அதனுல் பல தீவ தளைகளின்று விடுபடுகிருன் என்பது சுகமகரிஷியின் வாக்கு.

குந்திதேவி (பாண்டவர்களின் தாய்) பக்தி செய்தால் ஏற்படும் பலன் பற்றி அறிவுறுத்தல்:

பி. எஸ். பரமேசுவரன், பி.ஏ., பி.எல்., சென்னை.

ச்ருண்வந்தி காயந்தி க்ருணந்த்யபீக்ஷ்ண: ஸ்மரந்தி நந்தந்தி தவேஹிதம் ஜனா :
த ஏவ பச்யந்த்யசிரேண தாவகம் பவப்ரவா ஹோபரம் பதாம்புஜம் 8

ஹே கிருஷ்ணா! உன் குணகணங்களைக் கேள்வியுறும் பக்தர்கள், உன் புகழை எடுத்து பாடுபவர், உன்னைப்பற்றி கூறுபவர், உன்னை ஞாபகத்தில் கொண்டுள்ளவர், உன்னில் ஆனந்தம் கொள்பவர் இவர்கள் எல்லோரும் உனது பாதாம்புஜத்தை அதிவிரைவில் அடைகின்றனர். அந்த நிலையில் லாத வாழ்விலிருந்து விடுபட்டவராக.

விருத்ராசுரன் உண்மை பக்தனின் மனநிலை பற்றிக் கூறுகிறார் :

அஹம் ஹரே தவ பாதைக மூல—தாஸானுதாஸோ பவிதாஸ்மிபூய :
மன : ஸ்மரேதாஸுபதேர்குணாம்ஸ்தே வாக் கர்ம கரோத் காய : 9

ஹே பகவன்! நான் பிரார்த்திப்பதெல்லாம் என்னை மறுபடியும் மறுபடியும் பிறக்க அருள் புரியுங்கள். ஆனால் உமது பக்தர்களுக்கு சேவை செய்யும் தொண்டனாகப் பிறக்கச் செய்யுங்கள்; என் மனம் வாழ்வின் சக்திக்கெல்லாம் காரணமாகிய தங்களையே சதா எண்ணும் படியும், என் வார்த்தைகள் எல்லாம் உமது புகழ் பாடும்படியும், என் உடல் உமக்குச் சேவை புரியும் வகையிலும், எனக்குப் பிறவி அருளுங்கள் என்கிறான் விருத்ராஸுரன்.

உலக வாழ்வின் துக்கங்கள் துன்புறுத்துவதில்லை என்பது மைத்ரேய மஹரிஷியின் கூற்று :

அசேஷஸம் க்லேசசம் விதத்தே குணானுவாத ச்ரவணம் முராரே :
குத : புன—ஸ்தச்சரணாரவிந்த—பராகஸேவாரதி—ராத்மலப்தா 10

பகவானுடைய குணகணங்களைப் பற்றிச் சொல்லக் கேட்பதிலேயே இந்நிலையற்ற வாழ்வின் துக்கங்களை நீக்கும் அப்படியிருக்க தன் உள்ளில் இருக்கும் ஹிருதயத்தினுள் பகவானின் புனிதமான பாதங்களைப் பற்றி சதா சிந்தித்திருக்கும் ஒருவருக்கு எத்தகைய சிறப்பான பலன் ஏற்படும் என்று ஆச்சரியப்படுகிறார் மைத்ரேயர்.

சூதர் பக்தி மரண பயத்தைப் போக்கும் என்கிறார் :

கோத்த மச்லோக வார்த்தானாம் ஜுஷதாம் தத்கதா ம்ருதம்
ஸ்யாத ஸம்ப்ரமோ அந்த காலேபி ஸ்மரதாம் தத்பதாம்புஜம் 11

சதா தன் மனதில் பகவானை சித்திக்கும் பக்தன்; அதாவது தனது பக்திபாடல்களாலும், துதிகளாலும், சதா பகவானைச் சிந்தித்து செயல்படும் பக்தன், தனது அந்திகாலத்தில் யம பயம் நீங்கி சஞ்சலமற்று விளங்குவான். மரணபயம் அவனை அண்டாது என்கிறார் ஸூதபுராணிகர்.

கலியுக வரதனின் காருண்ய வீக்ஷம்

ஆதிகாலங்களில் பக்தி மார்க்கத்திலும், பண்பாட்டிலும்' தூய நெறி வாழ்க்கை முறையிலும் மிளிர்ந்து நின்ற பலர் இறைவனின் தரிசனத்தை நேரில் காணும் பாக்யத்தையும், இறைவனுடன் கலந்து பேசும் பேற்றையும் பெற்றிருந்தனர்.

மகாபாரதத்திலும் பார்த்தனுக்குத் தேரோட்டியாகவே விளங்கியும், பகவத் கீதையை அருளிச் செய்தும் உகந்தனன் ஸ்ரீ கண்ண பிரான்.

ஏன்? கலியுகத்திலும் இதன் தொடர்ச்சியை நாம் காணமுடிகிறது. பூவிருந்த வல்லியில் வாழ்ந்து வந்த திருக்கச்சி நம்பிகள் காஞ்சியில் உறையும் தேவப் பெருமாளான ஸ்ரீ வரதராஜருக்கு ஆலவட்டகைங்கர்யம் செய்யும் நாளில் அவருடன் உரையாடும் பெருமை பெற்றிருந்தார். திருக்கச்சி நம்பிகள் மூலமாகவே ஸ்ரீ ராமானுஜரும் தனக்கு ஏற்பட்ட ஆறு சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட்டு ஆறு வார்த்தைகள் உரைக்கப் பெற்றுர். இதனை திருக்கச்சி நம்பி தனக்கொரு கச்சி மண்டபத்தில் பெருக்கவே ஆறுவார்த்தை உரைத்த பெருமாள் என்று திருமஞ்சன காலத்தில் கட்டியம் ஸேவிப்பதன் மூலம் அறியலாம்.

ஆனுல், தற்காலங்களில் அதர்மம் அதிகரித்து விட்டபடியாலும், அநாகரீகங்கள், மத ஒழுக்கக் கட்டுப்பாடற்ற தன்மைகளினுலும் இறைவனை நேரில் காணும் பாக்யத்தை இழந்துவிட்டோம். இருப்பினும் இக்காலங்களில் தைவே மானுஷ ரூப: என்ற ப்ரமாணத்தின் படி தூய நெறி மனிதர்களின் மூலமும், சிலருக்குக் கனவுகளில் தோன்றியும் தன் காருண்யத்தைக் காட்டுகின்றுன் இறைவன் இதனை ப்ரத்யக்ஷயமாக ஒரு கோவில் அர்ச்சகர் உணர்ந்த நிகழ்ச்சியினை மெய் சிலிர்க்க அவர் கூறியதை கீழே காண்போம்.

ஆமைத்தகரையில் கோயில் கொண்டிருக்கும் பெருமானின் திருநாமம் ஸ்ரீ ப்ரசன்ன வரதராஜப் பெருமாள். பக்தர்கள் வேண்டும் வரங்களை அள்ளித்தரும் அருளாளனுதலால் அங்கு பக்தர்களின் கூட்டத்திற்குக் .குறைவேயில்லை. இவ்வாறிருக்கும் வேளையில், ஒரு நாள் காலை அக்கோயில் அர்ச்சகர் அங்கு வருபவர்களுக்கு தீர்த்தப்ரஸாத விநியோகங்களை வழங்கிவிட்டு ஏதோ ஒரு காரியமாக வெளியே வந்து மீண்டும் கர்ப்பக்ருஹத்திற்குள் நுழையும்போது பேரதிர்ச்சி அடைந்து விட்டார், காரணம்; அங்கு சுவாமிக்கு முன்பு வைத்திருந்த வெள்ளியிலான பெரிய வட்டிலும் ஸ்ரீ சடாரியும் காணவில்லை.

செய்வதறியாது திகைத்து நின்ற அவர் உடனடியாக கோயில் நிர்வாகிகளை வரவழைத்து அவர்களிடம் இது பற்றி விவரமாக வினவினுர். ஆனுலும், எடுத்தவர் யார் என்பதறியாது எப்படி யார் மீது குற்றம் சாட்டமுடியும்? நாட்கள் சில கடந்தன அர்ச்சகரோ தன்னுடைய கடமையுணர்விற்கு பங்கம் ஏற்பட்டு விட்டதே இறைவன் இச்சோதனையை அளித்து விட்டானே, என மனம் புழுங்கிக் கிடந்தார்.

அப்போது தான் அந்த அதிசயம் நடந்தது. அன்றிரவு அர்ச்சகர் இறைவனை மனதார எண்ணி உறங்கும் வேளையில் பொழுது புலரும்

இலவசம்!
கவர்ச்சியான
ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல்
கிண்ணம், 2 டின் :.பாரெக்ஸ்
வாங்கும்போது.
சில தேர்ந்தெடுத்த ஊர்களில்
மட்டுமே வழங்கப்படுகிறது.
ஸ்டாக் உள்ளவரை.
FAREX
க்ளாக்ஸோ வழங்கும் :.பாரெக்ஸ்®
வளரும் குழந்தைகளுக்கான விசேஷ திட உணவு.
CASGLF-44-183 TAM

நேரத்தில் அவர் கனவில் ஸ்ரீ ப்ரசன்ன வரதராஜப் பெருமாள், தோன்றி 'நீ திருவல்லிக்கேணி செல்' என்பது போன்றும், ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் நீ என்னை வந்து சேவி என்று விடுப்பது போன்றும் கண்டு திடுக்கிட்டு எழுந்தார்.

மறுநாள் காலை, முதல் காரியமாக நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு திருவல்லிக்கேணி நோக்கிச் சென்றார். பேருந்தை விட்டு இறங்கியதும் கோவில் வாசல் வழியாகச் செல்ல வேண்டியவர், ஏதோ காரணம் புரியாது தன் கால் போன போக்கில் கோவில் பின்புறமாக நடக்க ஆரம்பித்தார்.

மீண்டும் ஓர் அதிர்ச்சி! ஒருவிதமான மயக்க நிலை, அங்கு அவர் எதிரில் அன்றொரு நாள் கடைசியாக தீர்த்தப்ரசாதம் வாங்கிய ஒரு ஆசாமி நிற்கக் கண்டார். உடனே அங்கிருந்த ஒரு அன்பரிடம் அந்த ஆசாமியைக் காண்பித்து அவனை உடனடியாக காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லும்படியும், மற்ற விவரங்களைப் பின் கூறுவதாகவும் கூறினார்.

இதனை க்ஷணத்தில் அறிந்து கொண்ட ஆசாமி வேகமாக ஓட ஆரம்பிக்க, அங்கிருந்தவர்கள் எப்படியோ அவனைப் பிடித்து ஒரு வழியாக காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். காவல் நிலையத்தில் அவனைத்தீர விசாரித்ததில் அவன் திருடன் என்பதும் வெளிப்பட கோயில் வெள்ளி வட்டிலையும் ஸ்ரீ சடாரியையும் எடுத்தது தான் தான் என்றும், அதனை உருக்கி ஓர் அடகுக் கடையில் வைத்து விட்டதையும் ஒப்புக்ககாண்டு விட்டான்.

அர்ச்சகரின் மன மகிழ்ச்சிக்கு அன்று எல்லையே இல்லை. ஒரு சோதனையை அளித்து அதன் மூலம் தனக்கு ப்ரத்யக்ஷமாகி தன்னையும் ஒரு பொருட்டாக இறைவன் மதித்தானே என்று அவர் உணர்ச்சி பொங்கக் கூறிய போது நம் மெய்சிலிர்த்துக் கண்களும் குளமாயின இறைவனின் பெருங் கருணையை எண்ணி நம் கைகள் நம்மையும் அறியாமலே உயர்ந்து கூப்பும் நிலையை அடைகிறது

—டி. டி. வரதராஜன்.

கடவுள திருநாமத்தை நெஞ்சில ஒரு விநாடி நினைத்தாலும் போதும். அது அறுபத்தெட்டுப புண்ணிய க்ஷேத்திரங்களுககு யாத்திரை சென்று வருவதறகுச சமமாகும்.

—கபீர்தாசர்

∴ • •

கடலில் இருக்கும் மீன நீரை நாடி எங்கும்போக வேண்டியதில்லை அதன் உள்ளும் புறமும் நீரே நிறைநதிருக்கிறது. இது போலவே கடவுள் நம உளளத்தில் நீககமற நிறைந்திருககிறார். அவர் சாந்நித்தியத்தை உணர்வதே நல்ல அர்ச்சனையாகும்.

—ஔவையார்.

நவரத்தினங்கள் பிறந்த கதையை (பக்கம் 18) திருவிளையாடற் புராணத்தில் கீழ்க்கண்ட பாடலின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

அத்தகைய ஆவின் சோரி மாணிக்க மாம்பல முத்தம்
பித்த வைடூரியம் என்பு வச்சிரம் பித்தம் பச்சை
நெய்த்த வெண்ணிணங்கோ மேதம் தசைதுகிர் நெடுங்கண் நீலம்
எய்த்தவை புருடராகம் இவை நவமணியின் தோற்றம்.

கம்பரின் நகைச்சுவை

கம்ப ராமாயண காவியத்தில் கம்பர் நவரசங்களையும் வாரிச் சொரிந்துள்ளார் ஆனால், நகைச் சுவையை மிக உயர்ந்த முறையில் கையாண்டுள்ள கம்பரின் நகைச் சுவை அனுபவிக்கத் தெரியாதவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் இன்பத்தைக் காணவில்லை என்றே சொல்லலாம்.

சூர்ப்பனகை காட்டில் திரிபவள். அவள் இராவணன் தங்கை. அவள் கண்கள் காட்டில் வாழும் இராமனைக் கண்டுவிட்டன. அந்த வடிவழகில் வைத்த கண்களை எடுக்க முடியவில்லை. அந்த திருமேனியழகை முழுதும் பருகிக் களிக்க கருதினாள்.

அவளுக்கு அவனுடைய அழகில் அறிவில், உருவத்தில், குணத்தில் மற்ற பொருத்தங்கள் எவ்வளவு என்பதை ஆராயவே அவளுக்கு நேரமில்லை, தோன்றவில்லை. கண்டாள் இராமனை. கொண்டாள் காதல் அவ்வளவே. ராட்சதபெருங் காதலல்லவா? சூர்ப்பனகை தன் ஆசையை உடனே நிறைவேற்றிக் கொள்ள நினைத்தாள்.

தன்னுடைய இராட்சத திருவுருவத்தை மாற்றிக் கொண்டு நல்ல வடிவழகி காமவல்லியானாள் சூர்ப்பனகை இராகவனைத் தன்னுடைய சாதுர்யமான பேச்சால் மயக்க முயன்றாள். அப்பொழுது இராமன்:

திருந்தாம் அருளும் பெற்றேன்
நின்னலம் பெற்றேன்
நின்னோடு ஒருவரும் செல்வந்து
யாண்டும்
உறையவும் பெற்றேன், ஒன்றோ
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்று
வரிசிலை வடித்த தோளான்
வாளெயிறு இல்வக நக்கான்

நான் பாக்கியசாலிதான்
நான் செய்த தவம் நகரத்தைவிட்டு
நகர்ந்த பின்னரே பலித்தது
பேரழகியான உன்னை அடையவும்
பெற்றேன்

என்று சொல்லி சிரித்தான் இராமன்.

இந்த சந்தர்ப்பத்தில் உள்ளேயிருந்து ஒரு மின்னல் பளிச்சென்று தெரிந்தது. அவள் தோன்றினாள்-மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல வந்தாள். ஜானகி ராமனுடன் இருக்கும் பெண்ணைத் தொலைக்கும் வரை அவள் தன்னை விரும்பமாட்டான். அதனால் சூர்ப்பனகை சீதையை சமயம் பார்த்து அவளைக் கடத்திச் செல்ல முற்பட்டாள்.

கண்டான் இலக்குமணன்
அவளுடைய கூந்தலை பிடித்துக்
கொண்டு
மூக்கும் காதும் வெம் முரண்முலைத்
தடங்களும் முறையால்
போக்கிப் போக்கிய சினத்தொடும்
புலிகுழல விட்டான்

இராமன் தம்பியின் வாளால் மூக்கு முதலியன அறுபட்ட சூர்ப்பனகை இராமனை வழிமறித்து அவனடியில் வீழ்ந்து,

"மேக்குயரும் நெடுமூக்கு
மிகையன்றோ மடத்தையர்க்கு"

மூக்கு நீட்டிக் கொண்டிருப்பது அநாவசியம் என்ற காரணத்தினால் தான் நீங்கள் இப்படி செய்திருக்கின்றீர்கள் என்று பூமியில்புரண்டு புலம்பினான். அது மட்டுமா?

மூக்கு முதலியவற்றை அறுத்து விட்டால் இவன் வேறு எங்கும் நம்மை விட்டுப் போகமாட்டான். என்னால் உங்களுக்கு மற்றவர்களாலேற்படும் சிரமமும் இருக்காது என்றுதான் செய்தீர்கள்.

இது எனக்குத் தெரியாதா? நான் என்ன அறிவில்லாதவனா? மூக்கு அறுபட்ட பின்னரும் சூர்ப்பனகை தன்னுடைய ஆசையை விடாமல் சாதுர்யமாகப் பேசியதை கம்பர் தன்னுடைய பாட்டில் காட்டியிருப்பது பெரிய நகைச்சுவை.

பொன்னுருவ பொரு கழலீர் புழை
காண
மூக்கு அரிவான் பொருள் வேறு
உண்டோ ?
இன்னுருவம் இதுகொண்டு
இங்கு இருத்தொழியும்
நம்மருங்கே ஏகாள் அப்பால்
பின் இவனை அயல் ஒருவர் பாரா
ரென்றே
அரிந்தீர் பிழை செய்தீரோ?
அன்னதனை அறிந்தன்றோ அன்
பிராட்டி
பூண்டது நான் அறிவிலேனோ ?

கம்பர் தமது காவியத்தில் பல இடங்களில் நகைச்சுவையை அமைத்திருக்கிறாரென்றாலும், நகைச்சுவை நம்மை முழுக்க முழுக்க களிக்க வைத்த இடம் இராமன் காட்டில் வாழ்ந்த சமயத்தில் சூர்ப்பனகை என்ற அரக்கியை சந்தித்த கட்டம்தான்.

—பி. ஆர். சேஷாத்திரி.

அன்றும்......இன்றும்......

சத்தியம் என்பது வாய்மை மட்டுமன்று. உள்ளத்தின் உண்மையொளியையும் அது குறிக்கும். சத்திய வஸ்துவும் நித்திய தத்துவமான இறைவனைக் குறிக்கும். —காந்தியடிகள்.

*

அழுக்கடைந்த உடைகளிலோ, ஆடம்பரங்களிலோ, திருநீற்றிலோ தலையை மொட்டை அடித்துக்கொள்வதிலோ, கொம்புத் தம்பட்டைமுழக்குவதிலோ பக்தி இல்லை. உள்ளத் தூய்மையே பக்திக்கு அடையாளம்.

—குரு நானக்.

★

திருமண பந்தம் என்பது இரு உயிர்கள் பங்கு கொள்ளும் தோழமை தொடர்பு. அதில் உயர்வு தாழ்வுக்கு இடமில்லை. லட்சிய மணவாழ்வு எனில் அதில் இரு பாலரிடையே பரஸ்பர அன்பு இருந்தால் மட்டும் போதாது. பரஸ்பர மதிப்பும் இருக்க வேண்டும்,

ஆர். சூடாமணி.

*

பிறந்தவுடன் நீ அழுகின்றாய். இறக்கும்பொழுது மற்றவர்கள் அழுகின்றார்கள். உன் இந்த இடைவெளிப் பயணத்தின்போது நீ ஆண்டு அனுபவித்த சொத்து சுகங்கள் எதுவுமே உன்னுடன் வரப் போவதில்லை. சிலருக்குத் தேவைக்கு மேல் வசதிகளை ஆண்டவன் தருகின்றான்.

அவன் தந்ததுதான் எல்லாம் என்று அவனை வணங்கி மற்றவர்களுக்காகவும், நறபணிகளுக்காகவும் நீயும், உன்னிடமுள்ள வசதிகளும் உள்ளபோதே செலவு செய். இவைகள்தான் உன் கடைவழி பயணத்தின்போது தொடர்ந்து வரும். —குகதாசர்.

திருவேங்கடவன் திருப்பள்ளியெழுச்சி

திருமகளொடு முயர்சேணுறு வரையாம்
திருமலை தனிதெழுந்தருளிய பரனே
கருதுமுண்டியவர் துயர் களைந்துய்ய
கடலலை துயில்கொளுங்கரிய நன்மணியே
உருள் பெருந்தேரினைக் கடவியன்றமரில்
உத்தமர்க் குதவிய வொரு பரம்பொருளே
அருள் புரிந் தடியாரையாட் கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே.

பகலவன் கீழ்த்திலசப் பாயிருள் மாய்த்துப்
பனிக்கட லெழுந்தனன் பாரெலா மொளிர
அகலிரு விசும்பிடைத் தாரகைக் கணங்கள்
அழுங்கின வொளியெலா மகிழ்ந்திடத் தத்தம்
புகலிடம் நீங்கிய புள்ளினமெல்லாம்
புதிய நல்லிசை மழைப் பொழிந்தனவெங்கும்
இகலிலா வேங்கடமேவிய யெந்தாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

வெள்ளியும் விண்மிசைத் தோன்றினன் வியாழன்
விரைந்துடன் மறைந்தனன் விளங்கின திசைகள்
கள்ளுடை மரைமலர் மலர்ந்தன கயத்துள்
கடிதுவந்துன திரு திருவடி தொழுவான்
தள்ளரும் வானவர் சாரணர் சூழ்ந்துன்
தாரகமந்திரம் ஓதினர் மகிழ்ந்து
விள்ளரும் புகழுடை விழுப்பொருளே திரு
வேங்கடவா பள்ளி எழுந்தருளாயே.

குமுதமென் மலரெலாங் குவிந்தன கயத்துள்
கூம்பிய தாமரை மலர்ந்தன வாங்கே
கமுகொடு கதலியுங் கலந்துயர் சோலைக்
களிமயி லெங்கணுங் களிநடம் புரிந்த
அமுதினு மினியதான் மறைகளையோதும்
அந்தணர் சூழ்ந்தன ரகவிடமெங்கும்
இமிழ்கடலுலகினில் எமக்கருள் புரிய
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

பிலைமதி சூடிய பரமனும் ஏனைப்
    பிரமருத் திரரொடு மகபதிதானும்
மறையவர் இருடிகள் மாகதர் முதலோர்
    வந்தனர் சிரமிசை மலர்க்கரங் குவித்தே
சிறைபடு மன்னையாம் சீதையை மீட்ட
    சேவக! சேனுயர் திருமலை வாழ்வே
மரைமலர் சேவடி தந்தெமை யாண்ட
    வடமலையாய்! பள்ளி எழுந்தருளாயே.

விண்ணுறை வானவர் வசுக்கள் வித்யாதரர்
    வேறுள முனிவரும் மாந்தருங்கூடிப்
பண்ணொடு பரதமும் பயின்றனருவந்துப்
    பதமலர் தொழுதெழப் பரந்தனரெங்கும்
மண்ணுறு மடியவர் வாழ்ந்திட வந்த
    மாமலை வேங்கடமேவிய தேவே!
எண்ணரு மெமதிடர் களைந்திடவல்ல
    ஏழுமலையாய் பள்ளி எழுந்தருளாயே

வானினுமுயரிய வடமலைப் பாங்கற்
    வந்துநின் திருவடியடைய முற்படுவார்
தேனினுமினிய நற்கீதங்கள் பாடித்
    தேடினராடினர் திசையெலாம் மயங்க
கானுறு கறவையின் கணங்களன்றுய்யக்
    கருதியோர் வரையினை யெடுத்தனை குடையாய்
தேனுக னெனுமொரு சூரனைக்காய்ந்த
    திருமலையாய்! பள்ளி எழுந்தருளாயே

திசைதொறும் பரந்தநின் திருமலைநாடித்
    தேடுநர், ஆடுநர், பாடுநரொடு சார்
இசைமிகு இருக்கெனு மந்திரமொலிக்க
    இருந்தனர் இயக்கரும் முனிவருமொருசார்
வாயிலாப் புகழுடை மருத்துவர் சாரணர்
    வந்தனர் சிரமிசைக் கரங்குவித் தொருசார்
விசையுடைச் சக்கரப் படையுடையாய் திரு
    வேங்கடவா பள்ளி எழுந்தருளாயே.

ஆயர்கள் திருவெனும் ஆநிரை காத்து
    அருச்சுனற்குதவிய அமரர்தம் கோவே
மாயமான் என வருதான வனழிய
    வர்ளியை ஏவிய வானவரேறே.

தீயவன் இலங்கையர்கோன் முடிசிந்தச்
சிலைவனைத் தொருசரம் தொடுத்த எம்மரசே
தூய நீள் அரவணைத்துறந்தெமைக் காக்கத்
திருமலையாய் பள்ளி எழுந்தருளாயே

சந்ததம் உன்திருமலையினை நாடிச்
சார்ந்திடு மடியவர்க்கருள் புரி வள்ளால்
செந்திரு மகளொடு சேர்புவி மகள்தொழத்
திருமலைதனி லெழுந்தருளிய செல்வா
முந்துற வந்து நின் மலரடி தொழுதோம்
முழுமுதற் பொருளென மொழிபரம் பொருளே
வந்தெமையாளு தினமாட் கொளவருந்திரு
வேங்கடவா பள்ளி எழுந்தருளாயே,

—வித்துவான் கடுகனூர், ஆ. மார்க்கபந்து

திருச்செந்தூர் முருகன்

திருச்செந்தூரில் முருகப்பெருமான் திருநாள் கொண்டாட்டம்—தங்கத்
தேரில் முருகன் பவனியைக் காணத் தினமும் பெருங்கூட்டம்

வருவோர் கோடி கடல்நீராடி வாழ்த்தித் துதிபாடி—முருகன்
வள்ளிமணாளன் தெய்வானை கணவன் வடிவேல் அருள்நாடி

முருகா! முருகா! முருகா! எனும் துதி மூவுலகும் கேட்கும்—குமரன்
முருகன்கோயில் அறுபடை வீடு முழுவதும் எதிரொலிக்கும்

செந்தில்கடலில் நீராடிவந்தால் தீரும் மனக்கவலை!—நாம்
தியானம்செய்து உபவாசம் இருந்தால் தினம் தருவான் பொருளை

கந்தன் கடம்பன் கார்த்திகைபாலன் கண்கண்ட தெய்வமகன்—திருக்
கயிலாத நாதன் உமாதேவி மைந்தன் கலியுகம் காக்கும் குகன்

கொடுமைகள் செய்த சூரனை முன்பு கொன்று வதம் செய்தான்—சேவல்
கொடியும் பாம்பும் சின்னங்களாகக் கொண்டு அருள்செய்தான்

உடல் பொருள்ஆவி யாவையும் முருகா! உன்னருள் எனச் சொல்
வோம்—நாம்

ஒவ்வொருநாளும் அவனருள் பெறுவோம்! ஊழ்வினையை!
வெல்வோம்.

— நெல்லை ஆ. கணபதி.

அருட்பிரகாச வள்ளலார் அருளிய

— ஆன்மீகன் —

தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்து உள்வளர் குமாரப் பெருமான் வள்ளி தெய்வயானை உடனுறை ஸ்ரீ முத்துகுமார சுவாமியின் அருளாசியுடன் வடலூர் வள்ளலார அவர்களால தனது ஒன்பதாவது வயதில் பாடப் பெற்ற தெய்வமணிமாலை என்னும் முபபத்தோறு பாடல்களின் விளக்கவுரை இம்மாதம் முருகன் திருவருளுடன் நிறைவு பெறுகிறது.

இதனைப் படித்த ஆனமீக உள்ளம் கொண்ட எனது அன்பு நேயர்கள் அனைவருக்கும் ஆறுமுகப பெருமான் அருளால எல்லா நன்மைகளும், நோயற்ற வாழ்வும், குறைவறற செல்வங்களுடனும் வளமான வாழ்வு பெறவேண்டி என் அன்பு வாழ்த்துக்களையும சமர்பபிக்கிறேன. —ஆன்மீகன்.

எத்திக்கும் என் உளம் தித்திக்கும் இன்பமே
என் உயிர்க்கு உயிர் ஆகும் — ஓர்
ஏகமே ஆனந்த போகமே யோகமே
என் பெருஞ் செல்வமே—நன்
முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவு இலாத முருகனே
நெடிய மால் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமை மகனே
பக்திக்கு உவந்து அருள் பரிந்து அருளும்
நின் அடிப்பற்று அருளி என்னை—இந்த
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவானாய்
பண்ணமல் ஆண்டு அருள்வாய்
சத்திக்கு நீர்ச் சென்னை கந்தகோட்டத்து உள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 30

உலக இன்பங்கள் யாவும் எல்லாம் அழியப் போகும் நாம் நம்மதென்று உள்ளவை நிலையற்றன. எதுவும் நம்மூடன் வராது. முருகா! உன் திருவடியைப் பற்றி பெறும் இன்பம்தான் நிலைபெற்றவை. முத்தியை அளிக்கும் முருகா! எனக்கு பிறவா நிலை அருள வேண்டும் என இப்பாடலில் வேண்டுகிறார் வடலூர் பிள்ளையவர்கள்.

செல்லும் திசைகளிலெல்லாம் என் உள்ளம் இனிக்கும்படிகாணும் இன்பப் பொருளே, என் உயிர்க்கு மேலான என்னுடன் இணைந்த பொருளே, மகிழ்ச்சியுடன் அநுபவிக்கும் இன்பமே, தியானத்தினாலும், சித்திகளாலும் அடையப்படும் யோகத்தையளிக்கும் பொருளே, என் அளவிலாத செல்வமே, எல்லா ஜீவராசிகளிலும் கலந்துள்ள பேரின்ப வீட்டை தருகின்ற முதற் பொருளே, உண்மை அறிவால் தெளிவு பெறும் மூர்த்தியே, முடிவில்லாத இளமையையுடைய முருகப் பெருமானே. திருமாலின் மருமகப் பிள்ளையே, சர்வேஸ்வரனான சிவபெருமான் முத்தமிட்டு விளையாடும் குழந்தை தெய்வமே எனப் போற்றுகிறார்.

உன்னைப் பக்தியுடன் போற்றும் அடியார்களுக்கு விரும்பி அருளை அருளும், உன் திருவடிப் பற்றை எனக்கு உண்டாக்கித், திரும்பத் திரும்ப இப்பூவுலகில் பிறவிஎடுத்து உழல்கின்றவனாய் பண்ணாமல் என்னை ஆட்கொண்டு காப்பாற்றுவாய். தண்ணீருக்கு பஞ்சமே ஏற்படாமல், கடல்நீர் கரையை மோதுகின்ற சென்னை மாநகரில், கந்த கோட்டத்தில் அமர்ந்து பக்தர்களை காத்து ரக்ஷிக்கும் சண்முகப் பெருமானே என பணிவுடன் வேண்டுகிறார் வள்ளல் பெருமான்.

நாமும் அவர் காட்டும் வழியில் முருகன் திருவடியைப் பற்றி பிறவி பற்றைப் போக்கிக் கொள்ளலாமல்லவா?

நான்கொண்ட விரதம் நின்அடி அலால்
பிறர் தம்மை நாடாமை ஆகும்—இந்த
நல்விரத மாங்கனியை இன்மை எனும்
ஒரு துட்ட நாய் வந்து கவ்வி—அந்தோ
நான் கொண்டுபோவது இனி என் செய்வேன்
என்செய்வேன் தளராமை என்னும்—ஒரு
கைத்தடி கொண்டு அடிக்கவோ வலிஇலேன்
சிறியேன் தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தென் அமுத வாரியே—மிகு
கருணை மழையே மழை கொண்டலே
வள்ளலே என் இரு கண்மணியே
இன்பமே மயிலேறும் மாணிக்கமே
தான் கொண்ட சென்னையில் கந்தகோட்டத்து உள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே 31

அருட்பிரகாச வள்ளலார் அருளிய இப்புனித தெய்வமணி மாலையில் கடைசிப் பாடலான இதில் கந்த பெருமானின் திருவடியை திடமான வைராக்யத்துடன் பற்றியுள்ள என்னை வறுமை முதலிய கொடுமைகள் கெடுக்கின்றன. அவைகளைப் போக்கி வள்ளலாகிய நீ எனக்கு உன் திருவடிப் பற்றுதலையாக இருக்க அருள் புரிய வேண்டும் என்கிறார் தன் ஒன்பதாவது வயதில் வள்ளல்பெருமான்.

உன் திருவடிப் பற்றைத் தவிர மற்ற எந்த ஒரு சக்தியையும் நாடிச் செல்லாமல் நான் கொண்டுள்ள விரதம் என்னும் மாம்பழத்தை இல்லாமை என்னும் ஒரு கொடிய நாய் ஒன்று வந்து தன் வாயில் கவ்விக் கொண்டு போகின்றதே! நான் என்ன செய்வேன்! அதை மனத் தளர்ச்சியில்லாமல் ஒரு கைத்தடியால் அடித்துவிரட்டும் வலிமை அற்றவனாய உள்ளேனே!

சிறியனாகிய என் முகத்தைப் பார்த்து கருணை முகம் காட்டியருள் புரிவாய் என்று போற்றி மேலும் முருகனை புகழ்ந்து பாடுவதையும் படியுங்கள்.

வானுலகத்தவரால் போற்றிப் பருகும் அமுதக் கடலே, கருணைப் பொழியும் மழையே, உயிர்களுக்கு அருள் புரியும் மேகம் போன்றவரே வள்ளலே, என் இரு கண்மணியே, நான் பெறும் இன்பமே, மயில் மீது ஏறிவரும் மாணிக்கம் போன்ற பெருமானே!

வேறு எந்த நகரத்திற்கும் இல்லாத பெருமையும், சிறப்பும் உடைய சென்னை நகர் கந்த கோட்டத்தில் அமர்ந்து அருளாட்சி புரிந்துவரும் ஆறுமுகப் பெருமானே! வள்ளி தெய்வயானையுடன் காட்சிதரும் கந்தசுவாமியே என்று வேண்டுகிறார் வடலூர் அருட்பிரகாச வள்ளலார்.

ஒரு வருடத்திற்கு மேலாக தொடர்ந்து படித்து வரும் முருக பக்தர்களுக்கு, மாணிக்கம் போன்ற பிரகாசமான தெய்வ வழிபாட்டுடன் கூடிய நல்வாழ்வை அருள அவன் தாள் பணிந்து அவனருள் பெறுவோம்.

கோவை சாரதா வீட்டுத் திருமணம்

கோவை ராஜ வீதியில் மக்கள் ஆதரவு பெற்ற சாரதா ஜவுளிக் கடை, சாரதா சில்க் ஸ்தாபனத்தின் அதிபர் என் அருமை நண்பர் திரு. என். எஸ். நடராசன் அவர்களின் அன்பு மகள் சௌபாக்யவதி சாரதாதேவியின் திருமணம் கோவையில் 21-8-1983 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மணமகன், கோவை திரு. கே. வி. வீரபத்திர செட்டியார் அவர்களின் அன்பு மகன் சிரஞ்சீவி வி. விஸ்வநாதன். மணமக்கள் இருவருமே பட்டதாரிகள். மணவிழாவிற்கு ஏராளமான வணிகத் துறை பெருமக்களும், நண்பர்களும் வந்திருந்து மண விழாவினைச் சிறப்பித்து தம்பதிகளை வாழ்த்தினார்கள்.

எனது அன்பு நண்பர் திரு. நடராஜன் தம்பதிகளுக்கு நன்றி கூறி, புது மண தம்பதிகட்கு முருகப் பெருமான் திருவருளை வேண்டி நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்

—ஆசிரியர்



தியாகராஜ வைபவம்

நாத உபாசனை செய்யும் புண்ணிய சிலரான தியாகராஜர் தமது சங்கீத ஞானத்தை மக்களது உள்ள வளர்ச்சி, ஆன்மீக உணர்வு ஆகியவற்றுக்கே அர்ப்பணித்தார். ஸ்ரீராம பக்தி மிகுந்த அவர் ராமனிடம் நேரிலேயே பேசுவது போன்று அமைந்த கீர்த்தனங்கள் நம்மைப் பரவசமடையச் செய்கின்றன. பின் வரும் தோடிராகக் கீர்த்தனையைப் பார்ப்போம்.

ராகம் : தோடி   தாளம் : ஆதி

பல்லவி

ஏமனி மாடாதி திவோ ? ராமா !
எவரி மனஸு யேவிதமோ தெலிஸி

அனுபல்லவி

மாம, மரதுலனுஜுலு தலிதண்டரேலு
பாமலு பரிஜனுலு ஸ்வவசாமெளட (ஏமனி)

சரணம்

ராஜுலு, முனுலு, ஸிராஸிருலு, வர
திக்ராஜுலு மரிசுருலு, சசதரதின
ராஜுலு லோபடி நடவனு த்யாகராஜ
விநுத நய பயமுக முஹு க (ஏமனி)

ஸ்ரீராமனின் திவ்விய வாக்குகளின் விசேஷத்தைக் கூறுகிறது இப்பாடல். ஹேராம! மதுரமான உனது வாக்குகளின் மகிமையை என்னென்பது? அவரவர் குணத்திற்குத் தக்கபடியாக மிக இனிமையாகப் பேசுகிறாய். ம்ருது வாகவும், கண்டிப்பாகவும் அதே சமயம் கேட்பவரைக் கட்டுப்படுத்தும் விதமாகவும் உள்ள உனது வாக்குகளைக் கேட்டு, பெற்றோர்கள். பெண்கள், அரசர்கள், ரிஷிகள், எண்திக்குகளுக்கும் அதிபதிகளும், சூரியன், சந்திரன் முதலிய தேவர்களும், மற்றோரும் தாமாகக் கட்டுண்டு உன் ஆணைக்கு உட்படுகின்றனர்.

இவ்வளவு மக்களையும் உன் வார்த்தைகளால் ஆகர்ஷித்து அவரவர்கள் உமது கட்டளைக்குப் பாத்திரமாக்கும் திறனை என்ன என்பது என்று வியந்து தியாகராஜ ஸ்வாமிகள் தனது தெய்வத்தைக் கொண்டாடுகிறார்.

உலக வாழ்வில் நிலையற்ற மன நிலைகளைக் கொண்ட மக்கள் ஒவ்வொருவருடனும் அவரவர் நிலைக் கேற்பப் பேசி மனதைக் கவரும் ஸ்ரீராமசந்திரரின் வாக்குவன்மையை இங்கு ஸ்வாமிகள் உயர்த்திக் கூறுகிறார். வேறொரு வரும் செய்ய முடியாத அரியதொரு செயல் இது என்பது ஸ்வாமிகளின் துணிவு

விளக்கம் :- பி. எஸ். பரமேஸவரன், பி.ஏ.,பி.எல்., சென்னை

குமாரி அருணா

கலா மந்திர், சங்கராபரணமும் சேர்ந்து வழங்கும் பரத நாட்டியக் கலைவிழாவில் முதல் நாள் ஆடிய குமாரி அருணாவின் நாட்டியம்அலாரிப்பிலேயே ஆட்டம் களைகட்டி விட்டது. மேலும் நாட்டக் குறிஞ்சி வர்ணத்தை ஆடியபோது திருப்பதியிலுள்ள வெங்கடாசலபதியை நேரில் கண்டதுபோல இயல்பாக இருந்தது.

ஊத்துக்காடு வெங்கடசுப்ப ஐயர் பதமான இப்படியும் ஒரு பிள்ளை மிகவும் நன்றாகயிருந்தது.

திருமதி வனஜா நாராயணனின் நட்டுவாங்கமும், பின்னணியில் கிரிஜா சம்பத்தின் இனிய இசையும், மற்றும் பக்க வாத்தியங்களும் முன்னணியில் நின்று அன்றைய நிகழ்ச்சியை மிகவும் சிறப்பாக அமைத்தது.

கலாமந்திர், சங்கராபரணம் போன்றவர்களின் புரட்சிகரமான செயலை மற்றவர்களும் பின்பற்றி இளம் கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

—ஆசிரியர்.

நவரத்தினங்கள் பிறந்த கதை

வலன் என்ற அசுரன்பேராற்றல் படைத்தவன். இவன் விசேஷமான சிவபூசைகள் செய்து பகவானிடம், தான் இறந்தால் தன்னுடைய உடல் நவமணிகளாக வேண்டும் என்று வரம் பெற்றான்.

இந்திரன் இவனுடன் போர் புரிந்து தோல்வி யடைந்தான். தோல்வியுற்ற இந்திரன் வலன் என்ற அசுரனை பார்த்து, உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள் தருகிறேன் என்றான்.

வலன் சிரித்தவண்ணம், என்னிடம் தோல்விகண்ட நீ எனக்கு வரம் தருவதா? உனக்கு வேண்டிய வரத்தைக் கேள், நான் தருகிறேன் என ஆணவமாகக் கூறினான்.

அப்படியானால் நீ யாகப் பசுவாக வரவேண்டும் என யாசித்தான்.

அசுரனாக இருந்தாலும் தெய்வ பக்தியுள்ள அவன், வாக்களித்தபடியே யாகப் பசுவாக வந்தான்.

அதுசமயம் வலனை இந்திரன் கொன்றான். அசுரன் முன்பு பெற்றிருந்த வரத்தின்படி அவனது உடல் விலைமதிப்பற்ற நவரத்தினங்களாக வெளிப்பட்டது,

அசுரனது
உதிரம்—மாணிக்கம்,
பற்கள்—முத்துகள்,
மயிர்கள்—வைடூர்யம்,
எலும்புகள்—வைரம்,
பித்தம்—மரகதம்,
நிணம்—(கொழுப்பு)—
கோமேதகம்,
தசைகள்—பவளம்,
கண்கள்—நீலம்,
கபம்—புஷ்பராகம்,

இம்மாதிரி நவ ரத்தினங்களாக ஏற்பட்டது.

—தொகுப்பு : குகதாசர்

சிவலிங்க உபாசனை

கவியோகி. சுத்தானந்த பாரதியார்

நமது நாட்டு கோயில்களிலெல்லாம் கருவறையில் இலிங்கம் இருக்கும். இலிங்கமே மூலவர். ஆறுயிரம் ஆண்டுகட்கு முன்னே முகிஞ்சதரை-அரப்பா என்ற இடிநிலங்களில் இலிங்க உருக்கள் காண்கின்றன. அக்காலத்தவர் சிவலிங்க வழிபாடு செய்தனர். இந்தியாவின் வடக்கே கைலைநாதர், கிழக்கே விசுவநாதர், மேற்கே சோமநாதர். தெற்கே இராமநாதர்வடிவாக நிலவுகின்றனர்.

மதுரை சுந்தரேசர், அண்ணாமலை அருணாசலலேசர் எல்லாம் இலிங்க வடிவே. லிம்—கம்—லிங்கம். லிம் என்பது உலக முடிவில் அண்டசராசரங்கள் லயித்துப் போவது. கம் என்றால் அவை வெளிப்பட்டு வாழ்வது எனப் பொருளாகும்.

இலிங்கத்தின் அடிப்பகுதி நாற்கோணம். அதுபிரம்மா. நடுப்பகுதி எட்டுக்கோணம், அது விஷ்ணு. அதற்குமேல் நீண்டது சிவமாகும். ஆகம சாஸ்திரத்தில் இலிங்கம் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது:

ஜோதிர் மந்த்ரஸ்வருபாய
நிர்மலஞ்ஞான சக்ஷுஷே
நம: சிவாய சாந்தாய
ப்ரஹ்மணே லிங்க மூர்த்தயே

சுடரோங்கும் மந்திர வடிவு; ஞானக் கண்ணைத் திறப்பது; நம: சிவாய என்ற பெயருடன் பரம சாந்த மயமான பரப்பிரம சொருபமே லிங்கமாகும்.

வேதம் இலிங்கத்தை ஜோதி என்றே வணங்கும் — ஜோதியே சுடரே சூழொளி விளக்கே—அருட்பெரும் ஜோதி, தனிப் பெருங் கருணை—ஜோதியாய் நின்ற உருவமே'' என்று பாசுரம் பாடுவர் அருளன்பர்.

திருமூலர் விளக்குகிறார்.

பூவினிற் கந்தம்
பொருந்தியவாறு
சீவனுக்குள்ளே
சிவமணம் பூத்தது
ஓவியம் போலே
உணர்ந்திட வல்லார்க்கு
நாவி யணைய
நடுத்தரியாமே

நடுத்தரி என்றால் மேரு தண்டம், அதில் சிவசக்தி மணக்கும் அதை உணர மனம் அடங்கி தியானத்தில் ஆழ்ந்திருக்க வேண்டும். பஞ்சாட்சரி ஜபிக்கவேண்டும்.

நம:சிவாய என்ற ஐந்தெழுத்தே சிவ மந்திரம், இது தூல பஞ்சாட்சரி. ந—கட்டு, ம—ஆணவம, கன்மம், மாயை மலம், சி—சிவம், வா—வாலை சக்தி, ய—ஆத்மரூபம்.

சித்தமலம் அறுவித்துச்சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் — என்பார் மணிவாசகர்.

சிவாய நம: இது சூக்ஷ்ம பஞ்சாக்ஷரி.

நானேயோ தவம் செய்தேன்? சிவாய நம எனப் பெற்றேன். (மாணிக்கவாசகர்) அப்பர் பெருமான்—மன மணி இலிங்கமாக என்பார்.

நெஞ்சகக் கோவில்கொண்டு
நிலவிடும் சீவலிங்கம்
செஞ்சுடர் வீசுகின்ற
சிகரமாம் ஜோதிலிங்கம்
பஞ்சகோசம் கடந்த
பசுபதியான லிங்கம்
அஞ்சலென் றபயமீயும்
அற்புத லிங்கமாமே.

மகேந்திரவாடி - உமாசங்கரன்

37. ஆழ்வார் திருநகர்

ஆண்டவன் சர்வவியாபி. அன்றாடம் தொழுகின்ற ஆத்திகர்கள் மனதில் மட்டும் இல்லை. தினமும் வசை பாடுகின்றன நாத்திகர் நினைவிலும் அவர் இருக்கிறார்.

இன்னும் சொல்லப் போனால் நாத்திகர்களிடம் தான் கடவுளுக்கு அன்பு அதிகம்.

பரம நாத்திகர் ஒருவரை இறைவன் தன்னுடைய பக்தராக ஏற்றுக் கொண்டு, அவாாலேயே தனக்கு ஒரு அழகிய கோயிலையும் கட்டிக் கொண்டிருக்கிறார் என்றால் வியப்பில்லையா?

இது ஏதோ புராண காலத்தில் நடைபெற்ற சம்பவமில்லை. சமீபத்தில் உண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சி.

சென்னை வடபழனி பேருர்ச்சாலையில் விருகம் பாக்கத்தைத் தாண்டியவுடன் 'ஆழ்வார் திருநகர்' என்ற குடியிருப்புப் பகுதி உள்ளது.

சில வருடங்களுக்கு முன்பு தான் இப்பகுதியில் நிலம் செப்பனிடப் பட்டு வீடுகட்ட மனைகள் பிரிக்கப் பட்டன. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆழ்வார் திருநகரியை நினைவுகூறும் வகையில் இப்பகுதிக்கு ஆழ்வார் திருநகர் என்ற பெயர் சூட்டப்பட்டது.

இப்பகுதியில் வீடு கட்டிக் கொண்டு குடியேறியவர்களில் திரு. எஸ். பன்னீர் செல்வம் என்பவரும் ஒருவர்.

புதியதாக வீடு கட்டியவர்கள் எல்லோரும் சேர்ந்து இப்பகுதியின் முன்னேற்றத்திற்காக ஒரு சமூக நல சங்கம் ஆரம்பித்தார்கள்.

பல வளர்ச்சி திட்டங்களுக்கு அடிகோலிய இச்சங்கம் இப்பகுதியில் ஒரு பிள்ளையார் கோயில் கட்டத் தீர்மானித்து அதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றினார்கள்.

இந்தத் தீர்மானம் நிறைவேறும் போது திரு. எஸ். பன்னீர்செல்வம் கடுமையான ஜுரம் காரணமாக கூட்டத்தில் கலந்து கொள்ள இயலவில்லை.

சங்க நிர்வாகிகள் அவரது இல்லத்திற்குச் சென்று பிள்ளையார் கோயில் கட்டத் தீர்மானித்திருப்பது பற்றியும், அதற்காக ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டிருப்பதாயும், அக்குழுவில் இவரை காரியதரிசியாக நியமித்திருப்பதாகவும் எடுத்துச் சென்றார்கள்.

கடவுள் நம்பிக்கையே இல்லாத தன்னை திருப்பணிக் குழுவிற்கு காரியதரிசியாக நியமித்ததைக் கேட்டதும் அவர் அதிர்ச்சியடைந்தார்.

சிறிய வயதிலே ஏற்பட்ட சில நிகழ்ச்சிகள் அவரது எண்ணத்தில் பிரதிபலித்தன அவரது குடும்பத்தில் இவரைப் போல் இவரது தந்தையும் பெரியாரின் கொள்கைகளில் பற்றுக் கொண்டவர் தனது மகனுக்கு பெரியோர்கள் வைத்த வைத்தியநாதன் என்ற பெயரை மாற்றி ஜஸ்டிஸ் கட்சி பிரமுகரின் நினைவாக 'பன்னீர் செல்வம்' என்ற பெயரை இவரது தந்தைவைத்தார்.

பெரியாரின் பிள்ளையார் உடைப்பு இயக்கம் தமிழ்நாடெங்கும் தீவிரமாக செயலாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் இவரும் தன் பங்கிற்கு ஒரு பிள்ளையாரைப் போட்டு உடைத்தார்.

இவர்களது குடும்பப் பொறுப்பில் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. அங்கும் இவர் சென்று கருவறையில் வீற்றிருந்த பிள்ளையாரை தரையில் சாய்த்தார். அந்நேரத்தில் இதைக் கண்ணுற்ற இவர்கள் வீட்டு வேலைக்காரி வேதம் கோபம் கொண்டு, எந்தக் கையால் பிள்ளையாரைப் போட்டுஉடைத்தீர்களோ, அதே கையால் பிள்ளையார் கோவில் கட்டுவீர்கள் என்று சாபமும் கொடுத்தாள். வேதம் வாக்கு வேத வாக்கானது பிள்ளையார் கோவில் கட்டும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் நண்பர்களின் வற்புறுத்தலால் தயக்கத்துடன் அப்பதவியை ஏற்றுக் கொண்டாலும், அவரது உள்மனதில் தான் அப்பதவிக்கு ஏற்றவர் இல்லை என்று சஞ்சலங்கள் எழுந்தது.

பிள்ளையார் கோயிலில் முருகனுக்கும் ஒரு சந்நிதி ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

கோவில் கட்ட நிதி திரட்ட பல பிரமுகர்களைச் சந்தித்தார். அருளாசி பெற பல மஹான்களைச் சந்தித்தார் ''வடபழனிக்கருகில் மற்றொரு முருகன் கோவிலா?'' என்று சிலர் இவரது முயற்சிக்கு தளர்ச்சி ஏற்படுத்தினர்.

அப்பொழுது ஏற்பட்ட சில சம்பவங்கள் இவரது மனதில் ஒரு வைராக்கியத்தை ஏற்படுத்தி. கோவில் கட்டாமல் விடுவதில்லை என்ற திட சித்தத்தை ஏற்படுத்தியது.

கோவில் கட்டுவதற்கு அருளாசி வாங்க காஞ்சி பெரியவரை தரிசிக்க வேண்டும் என்று நினைத்திருந்த நேரத்தில், ஒரு நாள் காஞ்சி பரமாசார்யாளை ஒரு குளத்தங்கரையில் தரிசிப்பது போலவும். அங்கிருந்து ஸ்ரீ முகம் பெறுவதற்காக வேறு இடத்தில் தங்கியிருந்த பெரியவாளை (ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்) தரிசிப்பது போலவும் ஒரு கனவை இவர் கண்டாராம்.

சில தினங்களில் காஞ்சி சென்ற போது தான் கனவில் கண்ட அத்தனை நிகழ்ச்சிகளும் அமைந்திருந்ததை எண்ணி இவர் வியப்படைந்தாராம். இவர் கனவு காண்பதற்கு முன்பு பெரியவர்களை நேரில் தரிசித்ததே இல்லை என்பது ஒரு முக்கிய விஷயமாகும்

இதேபோன்று மற்றொரு முறை ஒரு ஆற்றங்கரையில் பெரியவர்களை தரிசிப்பது போன்று ஒரு கனவு கண்டிருக்கிறார், கனவில் கண்ட அதே சூழ்நிலையில் பிறகு ஒரு முறை வாரணாசியில் பரமாசாரியாளை தரிசித்திருக்கிறார்.

இத்தகைய சம்பவங்களால் காஞ்சி காமகோடி மடத்திடம் இவருக்கு ஒரு பிடிப்பும், பிணைப்பும் ஏற்பட்டது.

கோவில் திருப்பணியும் செவ்வனே நடைபெற்று குடமுழுக்கும்

இனிது நடைபெற்றது. கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாய கருக்கும், சிந்தாமணி விநாயகர் என்று காஞ்சி பெரியவர்களால் பெயர் சூட்டப்பட்டது.

சிந்தாமணி விநாயகர் கோவில் அழகிய ராஜ கோபுரத்துடன் காட்சியளிக்கிறது. விநாயகர் சந்நிதியும், வள்ளி தெய்வயானையுடன் கூடிய சிவசுப்பிரமணிய சுவாமி சந்நிதியும் கிழக்குப் பார்த்து அமைந்திருக்கிறது.

அந்த ஞானசக்திதரனுன் முருகன் மயிலோடு காட்சி தருகிருன். அவனுக்கு சந்தனகாப்பு செய்து பாருங்கள், நிச்சயம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவான்.

முருகன் சந்நிதிக்கு கோஷ்ட மூர்த்திகளாக விநாயகர், தக்ஷிணு மூர்த்தி, மஹாவிஷ்ணு, பிரம்மா, துர்கை ஆகியோர் உள்ளனர்.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் ராகுகால நேரத்தில் எலுமிச்சை பழ மூடியில் நெய் விளக்கேற்றி தங்கள் குறைதீர, வேண்டும் பெண்கள் கூட்டம் இங்கு அதிகம்.

நவக்கிரக சந்நிதிக்கருகில் நாகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது

இக்கோயில் பலரது நன்கொடையால் எழுப்பப்பட்டிருந்தாலும், யாருடைய பெயரும் கல்வெட்டில் பொறிக்கப்படவில்லை. கோயிலை இயற்கைச் சூழ்நிலையில் வைத்திருப்பதற்கு நிர்வாகத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சிறந்த முறையில் நிர்வகிக்கப் படும் இக்கோயிலில் சிவாச்சாரிகுடைய அப்பழுக்கற்ற பணியைப் பற்றி பாராட்டாமல் இருக்க முடியாது.

தெய்வ சாந்நித்யம் எங்கு பரிபூரணமாக நிரம்பியிருக்கிறதோ, அங்கு நம்முடைய வேண்டுதல்களுக்குப் பலன் உண்டு. நம்முடைய சிந்தையை மகிழ்விக்கும் மணியாக வீற்றிருக்கும் சிந்தாமணிவிநாயகர், அடியேன் வாழ்விலும் சோதனை நேரங்களில் துணையாக வந்து என் சோர்வைப் போக்கியிருக்கிருர்.

நீங்களும் இக்கோயிலுக்கு வந்து, தும்பிக்கையானை நம்பிக்கையோடு துதித்துப் பாருங்கள்.

கவலைகள் போக்கிடும் கணநாதனை என் மனதிலிறுத்தி, அடியேன் எழுதிய பாடலைக் கீழே படியுங்கள்.

பல்லவி

சிந்தாமணி விநாயகா—என்
சிந்தையிலே வீற்றிருக்கும் நாயகா (சிந்)

அனுபல்லவி

ஆழ்வார் திருநகர் வாழும்
ஆதிசக்தியின் பாலகா (சிந்)

சரணம்

நாடி வந்தால் நலம் கிடைக்கும்—உன்னைத்
தேடி வந்தால் வினை பறக்கும்
கூடி வந்து இன்பம் யாவும்
குலம் செழிக்க துணையிருக்கும் (சிந்)

அகமும் புறமும்

சிருங்கேரி சாரதாபீட மகாசன்னிதானம் அவர்கள்

ஒருவன் தன்னிடம் கோடி ரூபாய் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால், அவன் குடிசையில் வசித்துக் கொண்டிருந்தால் அதை நாம் நம்ப முடியுமா? கோடீச்வரன் என்றால் அதற்குத் தகுந்தாற்போல் மிகப்பெரிய பங்களாவில், பலவசதிகளுடன் வாழ்ந்தால் தான் நாம் நம்புவோம். அது போல் தியானம் செய்கிற விஷயத்திலும் 'யமம், நியமம்' என்ற இரண்டும் இல்லாமல் ஒருவன் நான் எப்போதும் தியானத்திலேயே இருக்கிறேன் என்று சொன்னால் அது உண்மையாகாது. யமம் மற்றும் நியமம் என்றால் என்ன என்று பார்ப்போம்.

அஹிம்ஸா ஸத்யம ஸ்தேய
ப்ரஹ்ம சர்யா பரிக்ரஹா யமா:

எனறு சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. என்னுடைய வாழ்க்கையில் தவிர்க்க முடியாத நேரம் தவிர, மற்ற எந்தக் காலத்திலும் பிறருக்கு இம்சை செய்ய மாட்டேன் என்பதே அஹிம்சை இத்தகைய அஹிம்சை என்பதும் அஹிம்சை பிரதிஷ்டை என்பதும் வெவ்வேறு.

அஹிம்சையில் ஒருவன் பிரதிஷ்டை அடைந்து விட்டான். என்றால், எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் யாருக்கும் அவனால் தீங்கு ஏற்படாது என்பது தீர்மானம். அப்படித் தீர்மானம் வைத்துக் கொள்வதோடு மட்டுமின்றி, அவன் வாழ்க்கையிலும் அவ்வாறே நடப்பான். அதுவே அஹிம்ஸை பிரதிஷ்டை எனப்படும்.

நம் மகரிஷிகள் பலர் அஹிம்சைப் பிரதிஷ்டையைக் கடைப்பிடித்து வந்தார்கள் அவர்கள் வசித்து வந்த ஆசிரமங்களில் இயற்கை விரோதிகளான மிருகங்களும், தங்களது முன் விரோதத்தை விட்டு மிகவும் நட்புடன் பழகி வந்தன, இதை நாம் புராணக் கதைகளில் படிக்கிறோம். இது எப்படி முடியும்? இவ்வாறு அஹிம்சை பிரதிஷ்டையைக் கடைப் பிடிப்பவர்களின் உள்ளத்தில் அப்படியொரு சக்தி ஏற்பட்டு விடுகிறது. நாம் எல்லாம் அப்படி இருப்பதில்லை.

நமக்குக் காரியம் ஆகவேண்டுமானால் யாரை வேண்டுமானாலும் ஹிம்சிக்கத் தயங்குவதில்லை. மருந்து சாப்பிடுவதோடு பத்தியமாகவும் இருக்க வேண்டும் என்று மருத்துவர் கூறுவார் மருந்து மட்டும் போதுமே, பத்தியம் எதற்கு? அந்த மருந்து பத்தியம் காக்காவிட்டால் சரிவர வேலை செய்யாது இது போல பரம்பொருளை அடைவதற்கு நாம் செய்யும் முயற்சிகள் பலன் அளிக்க வேண்டுமானால் அதற்கு அஹிம்சை என்பது மிக அவசியம்,

அடுத்தது சத்தியம் உண்மையே பேச வேண்டும் என்று நாம் எல்லாரும் சொல்லிக் கொண்டிருப்போம். ஆனால்,நடைமுறையில் அவ்வாறு இருப்பது மிகவும் கடினம். இதற்கு ஒரு வேடிக்கையான கதை உண்டு.

சாட்சி சொல்ல வந்த ஒருவன் நீதிபதியிடம் என் கையில் ஜீவன் இருக்கும் வரை நான் பொய்பேச மாட்டேன் என்று கூறினான். ஆனால் சாட்சியில் அவன் கூறியது அவ்வளவு பொய் அவனிடம் பொய் சொல்ல மாட்டேன். உயிருள்ள வரை என்று கூறிவிட்டுப் பின் பொய் சொன்னாயே? என்றுஒருவர்

கேட்டபோது, அவன் ஐயா என்னுடைய கையில் ஒரு புழுவை வைத்துக் கொண்டிருந்தேன். பொய் சொல்ல வேண்டிய சமயத்தின் போது புழுவைக் கீழே போட்டு விட்டேன். அதாவது, என் கையில் ஜீவன் இருக்கும் வரையில் நான் பொய்யே கூறவில்லை என்ருனும். இதுசத்தியம் ஆகுமா? ஆகவே ஆகாது.

உள்ளதை உள்ளவாறே, மறைக்காமல் கூறுவதே சத்தியமாகும். ஆகவே சத்தியம் என்பதும் அவசியம் வேண்டும்.

அடுத்ததாக, அஸ்தேயத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அஸ்தேயம் என்பது. திருடாமை ஒரு பொருளைத் திருட வேண்டும் என்று மனசால் நினைத்தால் அதுகூடத் திருட்டுத் தான். திருடவேண்டும் என்று வாயினுல் கூறினுலும் அது வாயினுல் செய்யப்படும் திருட்டு எனப்படும்.

ஒரு சிறிய கைக்குட்டை கீழே கிடந்தால் அதை யாரும் திருட மாட்டார்கள். அதுவே ஒரு மோதிரமானுல் விஷயமே வேருகிவிடும் ஆகவே, கைக்குட்டை விஷயத்தில் எந்த ஒரு மனப்பாங்கைக் கொண்டுள்ளோமோ, அதையே மோதிரம் விஷயத்திலும் வைத்திருந்தால் அது தான் அஸ்தேயமாகும்.

பிரம்மசர்யம் என்ருல் புலனடக்கம்.

கடைசியாக வருவது அபரிக்ரஹம்.

மற்றவர்களுடைய பொருளுக்கு என்றுமே ஆசைப்படாமல் இருப்பது மற்றவர்கள் பொருள் நமக்குக் கிடைத்தால் நன்ருக இருக்குமே என்ற ஆசை நமக்கெல்லாம் உண்டு. வெளியில் அதைச் சொன்னுல் அவர்கள் கொடுப்பாரோ மாட்டாரோ என்று சந்தேகம். அதனுல், அவர்கள் கொடுத்தால் உடனே அதை வாங்கிக் கொள்ளத் தயாராயிருப்போம். இது அபரிக்ரஹம் ஆகாது.

ஒருவரின் பெயர் அயாசித பட்டாசாரியர் என்று இருந்தது. அவர் யாரிடமும் எதையும் யாசிக்கவே மாட்டார். ஆனுல், யார் எது கொடுத்தாலும் வாங்கிக் கொள்வார். அவரிடம் ஒருவர் வந்து 'ஐயா! நீங்கள் அபரிக்ரஹ பட்டாசார்யர் ஆக வேண்டும்' என்று கூறினுராம்.

அபரிக்ரஹம் என்பது சந்நியாசிகளால் விரதமாக அனுஷ்டிக்கப்படவேண்டும். துறவியானவர் தம் வாழ்க்கைக்குத் தேவையான கமண்டலு, காஷாயவஸ்திரம், ஆஸனம் போன்றவற்றை மட்டும் வைத்துக் கொள்ளலாம்.

சிலருக்கு இந்த உலகில் உள்ள அவ்வளவு பொருள்களும் தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று ஆசை. ஆனுல் அந்த ஆசை கடைசியில் அழிவில் தான் கொண்டுவிடும்.

பரிக்ரஹம் என்ருல் தானம் வாங்குவது. யார் எதைக் கொடுத்தாலும் விரும்பிப் பெறுவது. அபரிக்ரஹம் இதற்கு நேர்மாருனது. எந்தப் பொருள் மீதும் ஆசையின்றி எளிய துறவி வாழ்க்கை வாழ்வது.

இதுவரை யமம் என்பதைப் பற்றிப் பார்த்தோம். அடுத்ததாக நியமம் என்பது.

சௌச ஸந்தோஷ தப : ஸ்வாத்ய யேச்வரப்ரணி தானனி நியமா:

என்று நியமத்துக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. தூய்மை (சௌசம்) என்பது ஒரு நியமம். அது இரு வகைப்படும்.

ஒன்று புறத்தூய்மை, மற்ருென்று அகத்தூய்மை. மண் முதலியவை

களால் சுத்தம் செய்வது புறத் தூய்மை.

இறை உணர்வின் உதவியால் உள்ளத்திலுள்ள வேண்டாத எண்ணங்களை அகற்றுவது அகத்தூய்மையாகும்.

அடுத்தது ஸந்தோஷம் என்பது ஸந்தோஷம் இல்லாத மனிதன் எந்த செயலையும் சரிவரச் செய்ய மாட்டான். எல்லாச் செல்வங்களிலும் திருப்தி என்பதே பெரிய செல்வம். அந்தச் செல்வம் கிடைத்து விட்டால், மனம் ஒரு நிலை பெற்று, அமைதியைத் தரும்.

தபஸ் என்பது பலவிதம். ஏகாதசி நாளன்று சாப்பிடாமல் இருந்தால் அதுவும் ஒரு தபஸ். இவ்வாறு தவத்தினால் ஒருவன் தன் பாவங்களைப் போக்கிக் கொள்ளலாம்.

கடைசி நியமமாகச் சொல்லப்பட்டிருப்பது ஈச்வர ப்ரணிதானம். இதன் பொருள் ஈச்வரனை நம் மனத்தில் வைத்துச் சிந்தனை செய்ய வேண்டும் என்பது. இவ்வாறு யமம், நியமம் என்ற இரண்டும் சேர்த்து ஒருவன் ஈச்வரனை ஆராதித்தால் அது மிகவும் விசேஷமானது.

இதையே தியானம் செய்தால் அது உபாஸனை எனப்படும். இதை விட்டு விட்டு எனக்குப் பஞ்சாட்சரி மந்த்ர ஜபம் உபதேசம் ஆகியிருக்கிறது என்று வெறும் ஜபமாலையைக் கையில் உருட்டிக் கொண்டிருந்தால் அது உபாஸனையே ஆகாது.

ஆகவே, யம நியமங்களோடு கூடிய தியானம், அல்லது உபாஸனை செய்து வந்தால் அது நமக்கு நற்கதியை நிச்சயம் அளிக்கும்.

—தொகுப்பு : சேது சென்னை

கௌரி

தேன்கூடு
சிறு சேமிப்பு திட்டம்

இத்திட்டத்தில் எல்லோரும் சேரலாம். ரூ. 10, 25, 50 என்று மாதாமாதம் சேமிப்பதன் மூலம் சிறந்த நகைகளைப் பெறலாம் ஒருவர் எத்தனை சீட்டுக்கள் வேண்டுமென்றாலும் சேரலாம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்றவர்கள் :

கௌரி ஜுவல்லரி மார்ட்

72-85, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.

உரிமையாளர் : K. ராமலிங்கம் போன் : 842594

பக்த விஜயம்

ஸ்ரீ லாடு பாவா

49

அஹிம்சை என்பது ஒரு பெரிய தர்மம், பெரிய உயர்ந்த கொள்கை என்பதை புத்தர் முதல், வள்ளுவர், காந்தி வரை பலர் கூறியுள்ளார்கள். ஊனைத்தின்று ஊனை வளர்ப்பது மஹாபாவம், மகா கேவலம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். வள்ளலாரும்கூட உயிர் பலியிடுவதைத் தடுக்க வேண்டி, தமிழ்நாடு முழுவதும் பிரசாரம் செய்திருக்கிறார். அப்படியிருந்தும் இந்த ஜீவ வதை இன்னும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. உயிர்பலியை திருத்த வேண்டுமென்று அந்தக் காலத்திலும் பலர் கூறியுள்ளார்கள். அப்படிப்பட்ட பெரியோர்களில் ஒருவர் லாடுபாவா.

ஜோதிபூர் என்ற அழகிய கிராமத்தில் வாழ்ந்து வந்தார். பிற உயிர்களைத் தன் உயிர்போல் பாவிப்பார். எப்போதும் இறைவனது புகழ்பாடியே மகிழ்ந்திருப்பார். அவர் மனம் எப்போதும் கருணை நிரம்பியிருக்கும். உழவர் மாட்டை அடித்தால், இவருக்கு மனம் நோகும் அவர்களிடம் நல்ல வார்த்தை சொல்லி மாடுகளை அடிக்காமல் விரட்டியே வேலை வாங்க வேண்டுமென்பார். அவர் ஒரு சமயம் தீர்த்த யாத்திரை புறப்பட்டார்

அந்தக் காலத்தில சாக்தர்கள் அதிகம். இவர்கள் மிருகங்களையும் சில சமயம் மனிதர்களையும்கூட பலியிடுவதுண்டு. ஆதிசங்கரரையே இந்த சாக்தர்கள் பலியிட முயற்சித்த சரித்திரம் அனைவருக்கும் தெரியும். இப்படிப்பட்ட சாக்தர்கள் நிறைந்த காவூர் என்ற ஊருக்குப் போனார் லாடுபாவா. லாடுபாவாவின் முகப் பொலிவையும், பொன்மேனியையும் கண்ட சாக்தர்கள், தமது தேவிக்கு பலியாக வந்து வாய்த்திருக்கிறான் என்று நினைத்து சந்தோஷப்பட்டார்கள். உடனே அவரை உபசரித்து அருகில் இருந்த கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். சூது தெரியாத இவரும் அவரைப் பின் தொடர்ந்தார். கோயிலுக்குள் நுழைந்தார்.

உடனே இருவர் இவரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சந்நிதி முன் நிறுத்தி பூமாலை போட்டார்கள். மஞ்சள் நீரைக் கொட்டினார்கள். பின்னர் பலியிடுவதங்குமுன் தேவிக்குச் செய்ய வேண்டிய அபிஷேகங்களைச் செய்தார்கள்.

லாடுபாவாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. "ஏ பகவானே! நான் உயிரைக் கொடுக்க அஞ்சவில்லை, இந்த நீசர்களின் கொடுமையை ஒழிக்க வல்லமையைக் கொடு என்று பிரார்த்தித்தார், இதற்குள் அபிஷேகம் அலங்காரம் முடிந்து கற்பூரம் ஆரத்தியும் நடந்தது. ஒருவன் நீண்டதொரு வாளை எடுத்து இவர் பக்கத்தில் வந்து

லாவை ஓங்கினான். லாடுபாபா, ''ஏ கிருஷ்ணா, மாதவா, மது சூதனா'' என்று கூவினார்.

திடீரென்று ஒரு மின் ஒளி! பீடம் அசைந்து வெடித்தது. அதி லிருந்து சூலமும் கத்தியும் பலவித ஆயுதங்களுடன் தேவி பிரசன்ன மாகி, அடாபாதகர்களே! இப்படி அநியாயமாக கொலைகளைச் செய்து என் சந்நிதியை ரத்தமும் பிணமு மாகச் செய்கிறீர்களே! உங்களை அழித்து விடுகிறேன் என்று ஆவேசமாகக் கூறினாள்.

இந்த உருவத்தையும் கூச்சலை யும் கேட்ட அவர்கள் அப்படியே கீழே சாய்ந்தார்கள். பிறகு எழுந் திருக்கவேயில்லை, தேவி, லாடுபாவா வைப் பார்த்து, கனிவுடன் அன் பரே! உமது வருகையினால் எனது ஆலயம் புனிதமாயிற்று, உமக்கு வேண்டியவரம் தருகிறேன், கேள் என்றாள்.

லாடு பாவாவின் மனம் ஆனந் தத்தில் மிதந்தது. தாயே! உம் தரி சனம் கிடைத்த பிறகு எனக்கு வேறு என்ன வரம் வேண்டும்? இன்று முதல் இவ்வூரில் ஜீவ ஹிம் சையே நடைபெறாமலிருக்க வேண் டும். இதுவே நான் வேண்டும் வரம் என்றார் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி தேவி மறைந்தாள்.

அன்றிரவு அவ்வூர் அரசனின் கனவில் அழகிய உருவில் தோன் றினாள் தேவி. அரசன் ஆச்சரியப் பட்டு, அம்மா! தாங்கள் யார்? நான் என்ன செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டான்.

ராம நாமம்

ராவண சம்ஹாரம் முடிந்து பல யுகங்கள் கழிந்தன.

ஆனால் ராம நாமம் நிலைத்திருப் பதன் காரணம்? மனித ஜென்மா ப்ரளய முடிவு வரை இருககும். பிரளய கால பரியந்தம் மனிதருள ராவணன் போன்ற அசுர குணங்களும் எழும்.

அதை அகற்றவே ராம நாமம் சூரிய, சந்திர, பூமி உளளவரை நிலவி இருக்கும் ஆதலால அந்தகரணம் சுத்தம் செய்யவும், இக சுகததிற்கும் பர சுகத்திற்கும் ராம நாமம் - ஜீவர் களுக்கு ஜீவாதாரம் ஆகும

—திண்டுக்கல் ராமகிருஷ்ண சுவாமிகள்

அரசே! நான் தான் அடுத்துள்ள வனத்தில் உறையும் காளிதேவி இனி உன் ஆட்சிக்கு உட்பட்ட பூமியில் உயிர்பலியே நடைபெறக் கூடாது. பால் பொங்கலும் பழமும் வைத்து நிவேதனம் செய்யச்சொல் ஹரிபக்தர் ஒருவர் என் ஆலயத் துக்கு வந்திருக்கிறார். அவரையும் கூடவைத்துக் கொண்டு உயிர் பலியை நிறுத்தி தெய்வ பக்தியை பரவச்செய். நன்மைகளை வளர்த்து தீமைகளை மாய்த்துவாழக்கடவாய். பலியை நிறுத்தாவிடில் என் கோபத் துக்காளாவாய் என்று சொல்லி மறைந்தாள்.

அரசன் காலையில் எழுந்தான். நீராடிவிட்டு ஆலயத்தை அடைந்து லாடுபாவாவை வணங்கி அவரை தன் குருவாகக் கொண்டு சிறந்த தெய்வ பக்தனாகி, பலியை நிறுத்தி நல்ல முறையில் ஆண்டு நற்கதியடைந்தான் லாடுபாவாவும் மகான்கள் வரிசையில் இடம் பெற் றார். —வைரம்



ரகுவம்சம் கட்டுரை சுமார் நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து சென்ற இதழில்நிறைவு பெற்றுள்ளது. திரு சுந்தரராமன் அவர்கள் சூர்ய வம்சத்தையே. வம்சாவளியுடன் மிக அழகாக, சலிப்பு தட்டாமல் எழுதியுள்ளமைக்கு என் அன்பு வாழ்த்துக்கள்

கே. எஸ் மங்கலம் —தஞ்சாவூர், கரும்பேஸ்வரன்-திருச்செந்தூர், கே. லலிதா தேவி, கன்யாகுமாரி, மற்றும் ஏராளமான ஆன்மீக அன்பர்கள் பாராட்டியுள்ளார்கள்.
—ஆசிரியர்

கவிசேரியாரின் வியாசபாகவதம் வருடக்கணக்கில் தொடர்ந்து வந்தாலும், சுவையுடன் பக்தி மணம் கமழ எழுதிவரும் பெரியவருக்கு என் அன்பு பாராட்டுக்கள். நீலகண்ட சர்மா—திருவாரூர்

கற்பா? கணவனா? என்ற குகதாசரின் படைப்பு, நடைமுறையில் ஏற்படும், தரக்குறைவான சம்பவங்களை முன்னணியாக கொண்டு அறி உரையாக எழுதியுள்ளது. படிப்பவர்களின் மனதில் நன்கு படுகிறது. ஸத்தியம், தர்மம், நேர்மை இவைகளுக்கு எடுத்துக்காட்டாக கற்பிற்கு பெருமை அளிக்கிறது. மைதிலி-ராஜகோபால்—கோவை

குணசீலம் பெருமாள் அட்டைப்படம் மிகவும் நேர்த்தியாக உள்ளது. திரு. ராஜகோபால அய்யங்கார் சுவாமிகள் எழுதியுள்ள எம்பெருமானைப் பற்றிய விளக்கமும் பயனுள்ளதாக உள்ளது

ஆர். நரசிம்மன்—ஸ்ரீரங்கம்

சென்ற இதழில் எங்கே சுதந்திரம்? தலையங்கம், இலங்கையில் நடக்கும் வன்முறையைப்பற்றி மிகவும் தெளிவாய் உள்ளது. அத்துடன் எம். ஜி ஆர். சென்ற காரை மடக்கி வன்முறையில் ஈடுபட்டவர்களைப் பற்றியும் புத்திமதி பாணியில் குறிப்பிடப்பட்டுள்ளதும் பாராட்டும்படி உள்ளது. சரோஜா-ராமன்—சேலம்

ஸ்ரீ ஸூக்தம் நல்லதொரு பயனுள்ள பொக்கிஷம். திரு. ரெட்டியார் அவர்கள் மிகவும் தெளிவாக சுலோகத்தின் தரம் குறையாமல் அப்படியே அமுதமாய் அளித்துள்ளனார்.

எஸ். கோவிந்தராஜயங்கார்—திருமலை

விபூதியைப் பற்றி சென்ற இதழில் குறிப்பிட்டுள்ள விளக்கமும், கிடைக்கும் இடமும் பற்றிய உங்கள் குறிப்பு மிகவும் முக்கியமான விஷயம், இம்மாதிரி முறைப்படி ஹோமம் செய்து இந்த காலத்திலும் கிடைக்க வழி செய்துள்ள வடகுடி ஜெயராதா அவர்களை பாராட்டுகிறேன். சாம்பசிவ சிவாச்சாரியார்—திருச்சி

கவிஸேரி சுப்பிரமணிய சாஸ்திரிகள்

91

அநிருத்தனின் சித்திரத்தைக் கண்ட உஷை தலைகுனிந்து நிற்கக் கண்ட சித்திரலேகை,கனவில் வந்த புருஷன் அநிருத்தன் என்பதை யறிந்துகொண்டாள்.மேலும் தனது யோகமாயையால் அவன் ஸ்ரீகிருஷ்ணரின் பேரன் என்பதையறிந்து ஆகாய மார்க்கமாக துவாரகையை அடைந்த சித்ரலேகை தனது மாயையால் படுத்துறங்கியிருந்த அநிருத்தனை யோக மகிமையால் சோணி புரத்திலுள்ள உஷையின் அந்த புரத்துக்கு அழைத்து வந்தாள். கனவில் கண்ட அநிருத்தனைப் பார்த்த உஷை மதிமயங்கி அவன முகில்மெய்மறந்து அவனுக்குவேண்டிய பணிவிடைகள்புரிந்து பலநாள் அவனுடன் சுகித்து இருந்தாள். உஷையால்பூஜிக்கப்பட்ட அநிருத்தனும் நாட்கள் சென்றறியாது அந்தப்புரத்திலேயே கழித்தான்.

உஷை புருஷனுடைய சம்பந்தம் பெற்றுள்ளாள் என்பதை அந்தப் புரக் காவலாளர்கள் அறிந்தனர் உடனே அவர்கள் பாணாசுரனிடம் சென்று நாங்கள் நன்குகாவல் புரிந்து வந்திருப்பினும் உஷைக்கு புருஷ சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது எங்களுக்கு விளங்காத புதிராக இருக்கிறது என்றனர். இதனைக் கேட்ட பாணாசுரன் மிக்கவருத்தின வனாக உடனேயே அந்தப்புரத்தை அடைந்தான். அங்கு பிரத்யும்னனின் புத்திரனாகிய அநிருத்தனைக் கண்டான்.

மிக அழகனும், சிரித்த பார்வையுடையவனும், தாமரைமலர் போன்ற கண்களுடையவனும் கருத்த திருமேனியுடையவனும் தன் பெண்ணுடன் சொக்கட்டான் ஆடும் அவனைக் கண்ட பாணன் அதிசயித்தான்.

ஆயுதம் தரித்த வீரர்களுடன் ஆயிரம் கைகளுடனும் வந்த பாணனைக்கண்ட அநிருத்தன் பரிசமென்ற ஆயுதத்தை ஏந்தி யமன் போன்று எழுந்து நின்றான். தன்னைப் பிடிக்க நெருங்கிய வீரர்களை சின்னாபின்னமாக்கி அவர்களை ஓடச் செய்தான். அப்போது பாணாசுரன் நாகபாசத்தினால் அநிருத்தனை கட்டினான் உஷை மிகுந்த துக்கப் பெருக்கினால் கண்ணீர் உகுத்தாள்.

துவாரகையில் அநிருத்தனைக் காணாது அவனுடைய பந்துக்கள் வருந்தினர். பின் நாரதமுனிவர் அங்குசென்று அநிருத்தன் இருப்பிடத்தையும் அவனுடைய நிலையையும்விளக்கினார்.

ராமகிருஷ்ணர்கள் மற்றும் சுற்றத்தாரும் வெகுவான சைன்னியங்களுடன் சோணிதபுரத்தை முற்றுகையிட்டார்கள். அங்குள்ள

தோட்டங்கள், கோபுரங்கள் எல்லாவற்றையும் நாசம் செய்தார்கள்.

இதைக் கண்ட பாணன் மிகக் கோபத்துடன் பட்டிணத்தை விட்டுப் பெரும் படையுடன் கோட்டைக்கு வெளியில் வந்தான். ராம கிருஷ்ணர்களுடன் போரிட பரமேஸ்வரனும் தனது புத்திரர்கள் மற்றும் கணங்கள் ஆகியவர்களுடன் வந்து யுத்தம் செய்தார்.

ஸ்ரீ கிருஷ்ணனுக்கும், பரமசிவனுக்கும் யுத்தம் நடந்தது பிரத்யும்னன் சுப்ரமணியரை எதிர்த்தான் பலராமன் கூம்பாண்டன், கூபகர்ணன் இவர்களை எதிர்த்தான் சாம்பன் பாணபுத்திரனுடன் யுத்தம் செய்தான். பாணன் சாத்தகியை எதிர்த்தான்.

இந்த யுத்தத்தைக் காணபிரம்மா முதலிய தேவர்களும் மகரிஷிகளும் சித்த சாரணாதிகளும் விமானத்தில் ஏறி ஆகாயமார்க்கமாக வந்தார்கள் பூதங்கள் வேதாளங்கள் பூத மாதாக்கள், பிசாசங்கள் பிரம்ம ராக்ஷஸர்கள் இவர்களையெல்லாம் ஸ்ரீகிருஷ்ணன் தனது பாணங்களால் அடித்தார்.

அப்போது, பரமேஸ்வரன் ஸ்ரீ கிருஷ்ணன் மேல் பலவித அஸ்திரங்களை அனாயாசமாக அடித்தார். அந்த அஸ்திரங்களையெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணர் அதி விரைவுடன் தடுத்தார், கடைசியாக ஜிரம்பணாம் என்ற அஸ்திரத்தைப் பிரயோகித்தபோது பரமேஸ்வரன் மோகித்து நின்றார்.

அப்போது, பாண ஸைன்னியத்தைச் சின்னா பின்னப்படுத்திய ஸ்ரீ கிருஷ்ணர் அவற்றை ஓடச் செய்து விட்டார் பிரத்யும்னனின் பாணத்தால் அடிப்பட்ட சுப்பிரமணியர் தனது மயில்வாகனத்தில் ஏறி ஓடினார். தனதுசைனியங்கள் ஓடகண்ட பாணன், சாத்தகியை விட்டு விட்டு ஸ்ரீ கிருஷ்ணரை எதிர்த்தான். ஒரே காலத்தில் ஐநூறு வில்களை நாணேற்றி இரண்டு அம்புகளை ஒவ்வொரு வில்லிலும் பொருத்திக் கிருஷ்ணன் மீது பாய்ச்சினான்.

இதனைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ணன் அந்த வில்களை எல்லாம் வெட்டி விழ்த்தினர். பாண சாரதியையும் குதிரைகளையும் விழவடித்தார். அப்போது தனது புத்திரனின் நிலையைக்கண்டு பாணனின் தாயாராகிய கோடரா வஸ்திரமில்லாமல் ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்து தன் புத்திரனைக் காப்பாற்ற வேண்டினாள். ஸ்ரீ கிருஷ்ணன் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றார். அந்த சமயம் பார்த்து பாணன் தன் பட்டணத்தில் பிரவேசித்தான்.

மகேஸ்வரனால் ஏவப்பட்ட ஜ்வரம், மூன்று தலைகள் மூன்று கால்கள் கூடிய ஸ்வரூபத்துடன் வந்து கிருஷ்ணனை எதிர்த்தது அப்போது ஸ்ரீகிருஷ்ணன் வைஷ்ணவ ஜ்வரத்தைத் தூண்டி மகேஸ்வர ஜ்வரத்தை அழித்தார். அப்போது அது பகவானைச் சரணடைந்தது. சரணடைந்த அந்த ஜ்வரம் ஸ்ரீகிருஷ்ணனைப் புகழ்ந்து நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர், அதிபதி, சைதன்ய ஸ்வரூபி, இந்த ஜகத்தைப் படைத்துக் காப்பவர். அதனை அழிக்கவும் செய்கிறீர். வேதங்களால் அறியக் கூடிய பரப்பிரும்மம் நீர்.

கர்மாவினால் தேகமும், தேகத்தால் கர்மமும் என்று இப்படி மாறி மாறி வந்து கொண்டிருக்கும் நிலை. உமது மாயையின் நிலை, அப்படிப்பட்ட மாயைக்கு வசப்படாதவர் நீர் ஒருவர்தான். ஆதலால், உம்மை வணங்குகிறேன்.

துஷ்டர்களை அழித்துப் பூமியின் சுமையைக் குறைக்க அவதரிக்கிறீர் நீர் புலன்களின் சுகத்திற்காக உம்மைச் சரணடையாதவரை, நீர் கஷ்

டத்துக்கு உட்படுத்துகிறீர். உம்மைச் சரணடைந்தோரைக் காப்பாற்றுகிறீர். ஆகவே, என்னைக் காப்பாற்றும் எனவேண்ட ஸ்ரீகிருஷ்ணனும் அவ்வாறே அனுக்ரகித்தார்.

மறுபடியும் பாணாசுரன் ரதத்தின் மீது ஏறி ஸ்ரீ கிருஷ்ணனிடம் போருக்கு வந்தான். தனது ஆயிரம் கைகளிலும் ஆயுதங்களை ஏந்திப் பகவானுடன் போருக்கு வந்தான். தனது கூரிய சக்ரத்தால் பாணனது கைகளை வெட்டினார் பகவான்.

பாணனது நிலையைக் கண்ட பரமேஸ்வரன் தனது பக்தனுக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு வருந்தி ஸ்ரீ கிருஷ்ணனிடம் வந்து அவரை ஸ்துதிக்கலானார். நீர் பரப்ரும்மம். வேதங்களால் அறியக் கூடியவர். உமது ஸ்வரூபத்தை அறியாத பாணனும் உம்முடன் யுத்தம் செய்தான்.

உமக்கு ஆகாயம் தொப்புளாகவும், அக்னி முகமும், ஜலம் வீர்யமாயும், த்யுலோகம் தலையாகவும், திக்குகள் காதுகளாகவும், பூமி பாதமாகவும், சந்திரன் மனதாகவும், சூரியன் கண்ணாகவும், நான் அகங்காரமாகவும், சமுத்திரம் குக்ஷியாகவும், இந்திரன் முதலிய லோகபாலகர்கள் கைகளாகவும், ஒஷதிகள் ரோமங்களாகவும், மேகங்கள் தலைமுடியாகவும், பிரம்மதேவர் புத்தியாகவும், தர்மம் ஹ்ருதயமாகவும் இருக்கின்றனர்.

ஜகத்தினுடைய க்ஷேமத்தைக் காக்கவும், தர்மத்திற்காக அவ்வப்

இருமல் நோயாளிகள் கவனிக்கவும்

இருமலா? இளைப்பா? தும்மலா?

பித்தத்தினால் ஏற்படும் மயக்கம், இருதயம் படபடப்பு, நெஞ்சு வலி - பிடரி வலி - உடல் வலி - மலச்சிக்கல்- பசி மந்தம், ருசியின்மை-அடிக்கடி ஜலதோஷம்-ஓயா தும்மல் - நீர்வடிதல் தலைபாரம் - இருமல் - கோழைக் கட்டு - மேல் மூச்சு - இளைப்பு காமூரெனறு இழுப்பு - உடல் பலஹீனம் - உடம்பு தேருமை அசதி - சோர்வு- களைப்பு - ஆஸ்துமாவின் ஆரம்ப நிலை

இவைகளிலிருந்து நிவாரணம் பெற, ஆரோக்கியம் பெற உங்களுக்கு பெரிதும் பயனளிக்கிறது

'சிவராஜ்' நெல்லிக்காய் லேகியம்

பவள சத்து, சிலா சத்து, சிருங்கி சத்து சேர்ந்தது 250 கிராம் புட்டி ரூ. 30-00

வெள்ளி ரேக் – பவள சத்து – பஸ்பம் கலந்தது 250 கிராம் புட்டி ரூ. 40-00

(போஸ்டேஜ் இலவசம்)

தேவையானவர்கள் V. P. பார்சல் மூலம் பெறலாம்.

— ஏஜெண்டுகள் தேவை —

தயாரிப்பு: **சிவராஜ் சித்த வைத்தியசாலை**

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறம் எதிரில்)

காந்தி ஸ்டேடியம் சமீபம், சேலம் – 636 007

போது அவதரிக்கிறீர். உமக்கு ஈடு யாரும் இல்லை தாமாகவே பிரகாசிக்கும் ஞானஸ்வரூபி நீர். எல்லாவற்றுக்கும் காரணகர்த்தா. அக்கினியிலிருந்து அற்பமான நெருப்புப் பொறிகள் ஏற்படுவது போல், உம்மிடமிருந்து சகல ஜீவாதமாக்களும் உண்டாகிறார்கள்.

உம்முடைய மாயையினால் ஜனங்கள் புத்திரர், பௌத்திரர், களத்திரம் ஆகியவர்களிடம் ஆசை கொண்டு துக்கமாகிய சமுத்திரத்தில் அழுந்திவிடுகிறார்கள். சில வேளைகளில் மேன்மையான தேவ ஜன்மத்தை அடைகிறார்கள். உம்மால் அளிக்கப்பட்ட மனித சரீரத்தைப் பெற்ற ஒருவன், புலன்களை வென்று உம்முடைய பாதங்களை சேவிக்கவில்லையேல் அவன் ஆத்ம வஞ்சகன் ஆவான்.

ஆகவே, அவன் துக்கத்தில் மூழ்கி விடுகிறான். எங்களைப் போன்ற மூன்று தேவர்களும் உம்மைச் சரணடைகின்றோம். நீர் எல்லோரையும் ரக்ஷிப்பவர், சாந்த குணமும், சமபுத்தியும் உடையவர், ஆத்மாவுக்கெல்லாம் அதிபதி.

இந்தப் பாணன் எனது அந்தரங்க பக்தன் இவனுக்கு நான் அபயம் அளித்திருக்கின்றேன். பலிச் சக்கரவர்த்திக்கு அளித்தாற்போல் இவனுக்கும் அருள் புரிய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதனைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணன் நீர் சொல்வதுபோல் பலி புத்திரனாகிய இவனைக் கொல்வது சரியல்ல. பிரகலாதனுக்கு நான் வரமளித்துள்ளேன். இவனுக்கு நான்கு கைகள் வெட்டப்படாமல் உள்ளன. அவற்றை வைத்துக்கொண்டு இவன் பயமற்றுச் சஞ்சரிக்கட்டும் என்று பாணனுக்கு அனுக்கிரகம் செய்தார் பகவான்.

இதன்பின் பாணாசுரன் அனிருத்தனையும், உஷையையும் ரதத்தில் ஏறச் செய்து ஸ்ரீகிருஷ்ணரிடம் அனுப்பிவைத்தான்.

ஸ்ரீ கிருஷ்ணரும் அவர்களுடன், ருத்திரனிடம் விடைபெற்றுத் தம்முடைய நகரம் சென்றார்.

—தொடரும்

ஆணவம் இருக்கும் வரை ஆத்மா பிரகாசிக்காது. — வள்ளலார்.

குடும்பத்திற்கு தேவையான எல்லாவித எவர்சில்வர், பித்தளை பாத்திரங்கள் பிரஷர் குக்கர், முதலிய சாமான்கள் யாவும் நம்பிக்கையான விலையில் எங்களிடம் கிடைக்கும்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

எஸ். ராமசாமி நாடார் & பிரதர்

49, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காட்சி சாலைகள் :

22, பைக்ராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

5, ராமகிருஷ்ண மடம் சாலை, (லஸ்) சென்னை-4

தொழிற்சாலை :

38, V. R. பிள்ளை தெரு, சென்னை-5.

பக்த மீரா அருளிய

கிரிதர கோபாலா

(ஸ்ரீனிவாஸ ஜகந்நாராயணன்)

பாடல் 25 :

கண்ணன் என் பக்கத்தில் இல்லாமல், இரவு வீணாகக் கழிந்து போகிறது. ஆனால் அவர் வந்த பாடில்லை. எனக்குத் தூக்கம் வரவில்லை. பிரியதமர் இல்லாதபடியால், நான் படுக்கையில் உருண்டு கொண்டு அவரைத் தேடியும், அவரைக் காணாமல், மனம் நொந்து போகிறேன். அவரை நான் எவ்விதம் அடையக்கூடும்? என் உயிர் போய்க் கொண்டிருக்கிறது? ஆனால் அவர் வந்த பாடில்லை.

பாடல் 26 :

தோழி! நான் எப்பொழுதும் கண்ணனை எதிர்பார்த்துக் கொண்டு, வழிமேல் விழிவைத்து, என் கண்கள் நோவு பட்டன. ஏ பிரபு! நீர் பிரிந்து போனதிலிருந்து கவலை அதிகமாகிவிட்டது. ஏதாவது சிறிய ஒலி கேட்டாலும் நீர் வந்து விட்டதாக எண்ணி ஏமாந்து போகிறேன். என் இதயம் வெடித்து விடும் போல் இருக்கிறது. யாருடைய இனிப்பான வார்த்தைகளைக் கேட்டாலும், எனக்கு மனத்தில் ஒரே எண்ணம் தான் தோன்றுகிறது. அன்பரே! என்னுடைய விரகதாபங்களை யாரிடம் சொல்வேன்! இவற்றைக் கேட்பதற்கு யாருமில்லை. நான் அரியை எதிர்பார்த்துப் பார்த்து, மனவருத்தத்தை அடைந்தேன் ஒரு கணம் கூட மனநிம்மதி இல்லாமல் தவித்தேன், ஜூதனால் இரவு வளர்ந்து கொண்டு போகிறது மீராதேவி சொல்லுகிறாள். 'ஏ பிரபு, எனக்கு உம் காட்சியை எப்போது தருவீர்? நீர் சுகத்தை அளிப்பதிலும் மிக்க சாமர்த்தியமுள்ளவர் உம்முடைய எண்ணம் தான் என்ன?'

பாடல் 27 :

என் பிரார்த்தனையைக் கேளும் என் சித்தத்தை நீர் கவர்ந்து கொண்டீர். ஆனால் இப்போது என்னிடம் வராமல், மற்ற கோபிகா வனிதைகளுடன் இராச லீலைகளைச் செய்கிறீர் உம்மைத் தவிர எனக்குக் கதியார்? புகலடைந்தவர்களுக்குக் காப்பாளவரே! இவ்விதம் உம்முடைய விரதத்தைக் காவாமல் சும்மா இருக்கலாமா? இதுவரை உமது முகக்காட்சியை அளிக்கவில்லையே! காலம் இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது. மீராதேவி சொல்லுகிறாள் 'ஏ பிரபு! எப்பொழுது நீர் காட்சி கொடுத்து, என்னை ஆட்கொள்வீர்? கைகள் கூப்பி வணங்கி வழிபாடு செய்கிறேன். என் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்க வேண்டும்.

பாடல் 28 :

பிரிய, யாராவது என் மன வருத்தங்களை என் பிரபுவினிடம் போய் சொன்னால், நான் அந்த உதவியை என்றும் மறவேன். அவரை நினைந்து, நினைந்து, சாப்பாடு, தூக்கம் எல்லாவற்றையும் துறந்து விட்டேன். என் இரு கண்களும் கண்ணீர்த் தாரைகளினால் நிரம்பியிருக்கின்றன. நான் அடிக்கடி கைகூப்பி வணங்குகிறேன் இரவு, பகல் என்றுகூடப் பாராமல், எப்போதும் அரற்றிக் கூவிக்கொண்

டிருக்கின்றன. ஆனால், என் பிரிய தாமோதரா என் கண்களுக்குப் புலப்படுகிறவராக இல்லை. மீரா தேவி சொல்லுகிறாள். 'ஏ பிரபு, எனக்கு விரைவில் காட்சி அளிப்பீர். என் உயிர் சிறிது சிறிதாகச் செலவழிந்து போய்க் கொண்டிருக்கின்றது.'

பாடல் : 29

ஏ ரசிக சிரோன் மணிக்கண்ணா! நீர் என் வணக்கத்தைப் பெற்றுக் கொள்வீர். இன்னொரு தடவை உம்மை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். மயில் இறகுகள் முகுடமாகவும் கஸ்தூரி திலகம் நெற்றியிலும் ஒளிசெய்து கொண்டு இருக்கிறது. இரு காது குண்டலங்களும் காதுப் பக்கங்களில் படிந்திருக்கும் சுருள் அலகாவளிகளும் கேசங்களும் மிக நேர்த்தியாக இருக்கின்றன. நீர் எப்போது உதட்டில் புல்லாங்குழலை வைத்து இனிய இசையை உண்டு பண்ணுகிறீரோ அப்போது நான் உம்மிடம் வயப்பட்டு விடுகின்றேன். ஏன் நான் மட்டுமா? உலகில் உள்ள தாவர சங்கமப் பொருள்கள் எல்லாமும் வசப்பட்டு விடுகின்றன. என் மனத்தை மோகிக்கச் செய்யும் பிரபு இந்த நிகழ்ச்சிகளை நினைத்து நினைத்து, கிரிதரதாரிக் கண்ணா! நான் உன்னைக் காண மிக்க ஆசையால் வாடுகின்றேன்.

பாடல் : 30

ஏ கண்ணா! நீர் எப்பொழுதும் என் கண்களில் வசித்து கொண்டிருக்கிறீர் உம் தலையின் மீது மயில் இறகுகள் முகுடமாகப் பிரகாசிக்கின்றன. நெற்றியில் சிவப்புத் திலகம் பிரகாசிக்கின்றன. உம்முடைய புனிதத் திருவுருவமோ எவரையும் கவரக்கூடிய தன்மையில் விளங்குகிறது. உம்முடைய சியாமை நிறமும் யாவருடைய மனத்தையும் வசீகரிக்கும்படி இருக்கிறது. உம்முடைய கருவிழிகள் விசாலமாகவும் மனோகரமாகவும் இருக்கின்றன. உம்முடைய உதடுகளில் அமுதம் போலப் (ஸுதாரசம்) புல்லாங்குழல் இனிமையையும் இறந்த உயிர்களுக்கும் புத்துயிரை அளிக்க வல்லதாக இருக்கிறது. உமது மார்பில் வைசயந்திமாலை பிரகாசிக்கிறது. மீரா சொல்கிறாள். 'பிரபு, எப்பொழுதும் சாதுக்களுக்குச் சுகத்தை அளிப்பீர் இதனால் உம்மை எல்லாரும் 'பக்தவத்சலன்' என்று புகழ்கிறார்கள்'

தொகுப்பு : மூர்த்தி - சென்னை

உங்களுக்கு தேவை

வியாபார அபிவிருத்திக்கு குபேர தன ஆகர்ஷணம், நகை வியாபாரிகட்கு ஸ்வர்ண கர்ஷண பைரவர், சித்தபிரமைக்கு உன்மத்த பைரவர், ஆபிசாரம் அகல ப்ரத்யங்கிராஸ்திரம், சத்ரு பாதைக்கு அகோராஸ்திரம், இழந்த பொருளோ பதவியோ திரும்பப்பெற கார்த்த வீர்யம், கல்வியில் மேன்மைக்கு மனோன்மணி, விவாஹத் தடை நீங்க ஸ்வயம்வரா பார்வதி, காத்யாயனி, மற்றும் பலவகை ஹோமங்கள், கேரள மாந்த்ரீக உபாஸனா கிரமத்தில் செய்து ரக்ஷை அல்லது யந்த்ரம் பெற கீழ்க்கண்ட முகவரிக்கு 75 பைசா தபால் தலை இணைத்து எழுதவும்.

ஸ்கந்த மேருவும் விசேஷ ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்

பகவான் கிருஷ்ணர், ராமர் ஜாதகங்கள் இலவசமாய் பெற 45 பைசா தபால் தலை இணைத்து எழுதவும்.

முகவரி :— மந்த்ரசாஸ்த்ர ரஹஸ்யஞ, ஜ்யோதிஷ கல்பதரு

ஸ்ரீ குருவாயூரப்பதாஸன் - B. சந்திரராமன், M.A., B.Ed.,

பழமார்னேரி P.O., வழி - திருக்காட்டுப்பள்ளி-613104.

தஞ்சை மாவட்டம்

பாபா சொன்ன கதைகள்

17

அகங்காரம் கூடாது

இங்கிலாந்து தேசத்தில் நடந்த ஓர் மகா நாட்டிற்கு, மகாத்மா காந்திஜீ அவர்கள் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் கப்பலில் ஓரிடத்தில் அமைதியாக, உட்கார்ந்து சில கடிதங்களை எழுதிக் கொண்டிருந்தார், அப்போது அதே கப்பலில் பிரயாணம் செய்த ஓர் ஐரோப்பாதேச வெள்ளையன். மகாத்மா காந்தியைப் பார்த்து, மிகப் பரிகாசமாய்ச் சிரித்தான். அவர் தரித்திருந்த உடைகள் அவனுக்கு, வேடிக்கையாகவும், ஏளனமாகவும் தோன்றியதே! சிரிப்பிற்கு காரணம்

அகங்காரத்துடன் கூடிய அந்த வெள்ளையன் தன் இருப்பிடமான, அந்த கப்பலில் இருந்த தன் ரூமிற்குள் சென்று சில வெள்ளைக் காகிதங்களில் பற்பல கெட்ட வார்த்தைகள் பலவற்றை (அதை படிப்பவர்கள் மனம் நோகும்படியாக) எழுதி அவற்றையெல்லாம் ஒரு குண்டூசியினால் குத்தி. அதை மகாத்மா காந்திஜியிடம் கொடுத்து அவருக்கு கோபமும், அழுகையும் வரச்செய்து வேடிக்கையை பார்க்கவும். மறுபடி இந்த கிழவன் பஞ்சக்கோல உடையுடன் இங்கிலாந்து தேச பிரயாணம் எதன் பொருட்டு? அவர் உத்தேசமென்ன? வெளி நாட்டிற்குச் செல்லும் பைத்யத்தை விட்டு இந்தியாவிற்கே திரும்பு என, எழுதிய பல துண்டு காகிதங்களும் குண்டூசியால் குத்தப்பட்டதை கர்வத்துடன் காந்திஜீயிடம் எடுத்துக் கொண்டு வந்தான்.

அடக்க முடியாத சிரிப்புடன் அந்த காகிதக்கட்டை, மகாத்மா காந்தி மீது வீசி எறிந்தான். மறுபடி அவரிடம் ஆங்கில பாஷையில் அவற்றைப் படித்து ஆனந்தப்படு அவற்றில் எழுதியுள்ள யாவும் உனக்கு-பயன்படும் என கூறி, கொஞ்ச தூரம் சென்று, நின்று தான் செய்த காரியத்தை எண்ணிக் கொண்டே மகாத்மாஜீயின் கோபத்தைக் கண்டு ஆனந்தப்பட வேணும் என நினைத்து காத்திருந்தான.

மகாத்மா காந்திஜீ அந்தக் காகிதங்களை ஒவ்வொன்றாய் படித்தார். மிக அமைதியாக, அந்த வெள்ளையன் நின்ற பக்கம் பார்த்தார். மெதுவாக அந்தக் காகிதங்களைக் குத்தியிருந்து, குண்டூசியை மட்டும் எடுத்துக் கொண்டு, அந்த காகிதங்கள் யாவற்றையும். அந்தக் கப்பலில் இருந்த குப்பை கூளங்களைப் போடும் வேஸ்ட் பாக்ஸில் போட்டார். நிதானமாய் அந்த வெள்ளையனை மிக சாந்தமான பாவனையுடன் கூடிய புன்னகையுடன் அப்பா! நீ எழுதியிருந்தபடியே செய்து விட்டேன். எனக்கு உபயோகப்படும் இந்த குண்டூசியை

ம்ட்டும் என்னிடம் வைத்துக் கொண்டேன் என சாந்தமாய் கூறினார்.

அவர் கூறிய சமாதானத்தைக் கேட்ட ஐரேசப்பா வாசிக்கு பேசுவதற்கே வாய் அசையவில்லை. அவனுடைய அகங்காரத்திற்கு சரியான அடி அவன் கன்னத்தில் பட்டதாக உணர்ந்தான் அவன் எழுதியிருந்த பல தகாத வார்த்தைகளை காந்திஜீ யடித்து ஆக்ரோஷமாய் கோபப்படுவார், அதைப் பார்த்து ஆனந்தப்படலாமென எண்ணினான். ஆனால், தான் பல காகிதங்களை தகாத வார்த்தைகள் எழுதி குத்திய குண்டூசி அவர் தன் கையில் வைத்திருப்பதைப் பார்த்தான். அந்த குண்டூசி தன் உள்ளத்தைக் குத்தி அவனுடைய அகங்காரத்தை விரட்டியடித்தது.

மிக மேன்மையான பெருந்தன்மையும், அறிவும், விவேகமுள்ள மகாத்மாஜியை கண்குளிர தான். அவருடைய உடையை, உருவத்தை மறந்தான் அவர் உள்ளத்தை விரித்துக் காட்டியதை அவருடைய செயலால் கண்டு கொண்டான். நினைத்து-நினைத்து ஆச்சரியப்பட்டான். காந்திஜியிடமிருந்து அந்த நற்பண்பாட்டையும், புத்திமதியையும், பின்பற்றி தன் வாழ்க்கையை மேன்மையடைய செய்து கொள்ள, பயன்பட்டது.

அதைப்போன்றே நாமும் சிறியவர் முதல் பெரியவர் வரை, பொறுமையுடன் சாந்தமாய், அகங்காரம் ஆக்ரோஷங்களுக்கு அடிமையாகாமல் செயல் பட்டால் மேன்மையடையலாம்.

தொகுப்பு: R. பாலபட்டாபி,
உடுமலைப்பேட்டை.

பழனியம்பதியில் கலியுக வரதனாக
அவதரித்த
ஸ்ரீபழனி ஆண்டவரை தரிசிக்கும்
பக்தகோடிகள் அனைவரும்
விரும்புவது

பழனி

S. சித்தனுதன்

ஸ்பெஷல் ஜவ்வாது
வாசனை விபூதி
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

★

பரிமள விலாஸ்
S. சித்தனுதன் சன்ஸ், விபூதி ஸ்டோர்,
அடிவாரம், பழனி-624601.
போன்: கடை 405 வீடு & ஸ்டோர்: 406

பிள்ளையார்

C. S. வெங்கடேசன்

பிள்ளையாரப்பன் இம்மாத இதழ் முகப்பில் சித்தி-புத்தி கணபதியாய் காட்சியளித்து அருளாசி புரிகின்றார். இம்மாதம நாடெங்கும் கணபதியை விசேஷமாகக கொண்டாடுவார்கள். முக்கியமாக மகாராஷ்டிரர்கள் குல தெய்வமே கஜானன்தான். ஒவ்வொரு வீட்டிலும மேளதாளத்துடன் கணபதியை அழைத்து வருவார்கள்

ஆன்மீக அன்பர்கள் கணேசப பெருமானைப போற்றி பணிந்து நலலாசி பெற்று, நல்வாழ்வு பெற வேண்டுகிறேன். அன்பர் திரு வெங்கடேசன் அவர்கள் எழுதியுள்ள பிள்ளையாரப்பனின் இப்புனிதக் கட்டுரையைப் படியுங்கள்.

—ஆசிரியர்.

பிள்ளையார் என்று ஆனைமுகக் கடவுளை மிக அன்பு கலந்த பக்தியுடன் தமிழகத்தில் எல்லோரும் அழைப்பது வழக்கம் - இவருக்கு இன்னும் எத்தனையோ நாமங்கள் உண்டு. அவைகளில் முக்கியமானவை கணபதி, கணேசன், மஹாகணபதி, விநாயகர் என்பனவாகும் பிள்ளையார் வழிபாடு நம் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி பர்மா, ஜாவா, சீனு, ஜப்பான் முதலிய நாடுகளிலும் பரவி இருந்தது.

ஒவ்வொரு ஆண்டும் ஆவணி மாதம் வளர் பிறை சதுர்த்தி தான் பிள்ளையாரை வழிபடுத்துவதற்கு மிகவும் முக்கியமானது அதை 'பிள்ளையார் சதுர்த்தி' என்று அழைக்கிறோம். இது தவிர, மாதந்தோறும் வளர்பிறை நாளில் வரும் சதுர்த்தியும், விநாயக சஷ்டியும், ஒவ்வொரு வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமையும் பிள்ளையாரை பூஜிப்பது விசேஷமானது.

பிள்ளையார் சதுர்த்தியன்று சாதாரணமாக களிமண்ணால் அவர் உருவத்தை செய்து வழிபடுவது சகஜமாக காணலாம். இது அல்லாமல் இவருடைய விக்ரஹம் கருங்கல், சலவைக்கல், படிககல், பவழம் போன்ற கற்களிலும் வெள்ளருக்கன் கட்டையிலும், தாமிரம், வெள்ளி, போன்ற தங்கம் உலோகங்களிலும் பக்தர்கள் தங்கள் சௌகர்யம் போல் செய்து அவரை வணங்குவார்கள்.

பிள்ளையாரை வழிபடுவதற்கு கடினமான விதிமுறைகள் கிடையாது. முழு அன்புடனும், பக்தியும், பூர்ண நம்பிக்கையும், பரிசுத்தமான மனதுடனும் எவ்விடத்திலிருந்தும் எந்த வகையிலும் அவரை தியானம் செய்யலாம்.

காலையில் எழுந்ததும் சர்வசக்தி கணபதியை ஓங்கார வடிவமாக மனதில் நிறுத்தி தியானம் செய்தால் எல்லா சித்திகளையும் பெறலாம்."ஓம் கம் கணேசாய நம" என்ற விநாயக ஷடாக்ஷரத்தை சதா ஓதிக் கொண்டிருந்தாலே போதும்.

அருகு, எருக்கு, வன்னி, அலரி முதலிய மலர்கள் பிள்ளையார் பூஜைக்கு மிகவும் சிரேஷ்டமானவை.

பிள்ளையாரை வழிபட்டால் நமக்கு என்ன பலன் கிடைக்கும் என்பது கீழ்கண்ட சுலோகங்களிலிருந்து நன்கு விளங்கும்.

அல்லல் போம் வல்வினை போம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லை போம் போகா துயரம் போம்—நல்ல
குணமதிகமாம் அருணைக் கோபுரத் துண்மேவும்
கணபதியைக் கை தொழுதக்கால்.

—விவேக சிந்தாமணி

பெருட் பொருட் கிடனும் பிரணவ வடிவிற்
பிறங்கியவொரு தனிப் பேறே
அரும்பொருளாகி மறை முடிக்கண்ணே
அமர்ந்த பேரானந்த நிறைவே
தரும் பர போக சித்தியுஞ் சுத்த
தருமமு முத்தியுஞ் சார்ந்து
விரும்பினோர்க் களிக்கும் வள்ளலே சித்தி
விநாயக விக்கினேச்சுரனே.

—வள்ளலார்.

ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம்

(ஸ்ரீ லீலாசுகர் அருளியது)

புன்சிரிப்பு துலங்கும் முக காந்தியும், அயர்விலாத விளையாட்டினால் பிரகாசிக்கின்ற சோபையோடு கூடியவனும் ஆன மோகன கிருஷ்ணனின் ரூபத்தில் மயங்கியவராகிய லீலாசுகர், மேலும் மூன்று கவிதைகளில் தமது ரஸானுபவத்தைக் கூறுகிறார்.

அஹி மகர கரநிகர ம்ருது முதித லக்ஷ்மி
ஸரஸ தரஸரஸிருஹ ஸ்ரஸ த்ருசிதேவே
வ்ரஜ யுவதி ரதிகலஹ விஜய நிஜலீலா
மதமு தித வதன சசி மதுரி மணி லீயே 51

இளம் சூரியனின் கதிர்களால் ஒளி பொருந்தி விளங்கும் தாமரைப் பூவின் இதழ்களைப் போலுள்ள சிவந்த கண்களை உடையவனும் கோபிகாஸ்திரீகளோடு உல்லாசமாக விளையாடியதால் உண்டான வெற்றிப்புன்னகையும் அந்த லீலானுபவத்தால் உண்டான மந்தஹாஸத்தையும் வெளிப்படுத்தும் மனோகரமான ம்ருதுவான முகபாவத்தையும் நான் எண்ணி எண்ணி ஆனந்தமாகிற அனுபூதியை (லயத்வைத) அடைகிறேன்.

இங்கு லீயே என்பது கவியின் கற்பனையோடு கூடிய பக்தியை வெளிப் படுத்துகிறது. ஒரு மித்த மனத்துடன் இறைவனைத் தியானிக்கும் போது ஏற்படும் புளகித நிலையே லீயே என்று குறிக்கப்படுகிறது. இதனையே 'ஸமாதி' என்றும் கூறுகிறோம். லீலாசுகர் கண்ணனை எண்ணியெண்ணித் தன்னையே மறந்து பாடுகிறார் அடுத்து வரும் கவிதையிலே.

கர கமல தளதளித லலித தாவம்சீ
கள நினத களதம்ருத கன ஸரஸிதேவே
ஸஹஜ ரஸ பரபரித தரஹஸித வீசி
ஸதத வஹத தரமணி மதுர மணி லீயே 52

தாமரை யொத்த கைகளின் ஸப்த ஜாலங்களை வெளிப்படுத்தும் வேலைப்பாடுகளால் பற்பல இனிய குழலின் தீஞ்சுவையோடு கூடிய

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ., பி.எல்., சென்னை.

வனும், அம்ருத தாரை போன்ற அந்த நாமமே, நாதமாகிற தேன் தன் வாயில் வைத்து ஊதும் குழலினின்றும் வெளிப்படுத்துபவனும், நாத இன்பத்தில் திளைத்து எப்போதும் இயற்கையாக உள்ள புன்சிரிப்பினால் அலங்கரிக்கப்பட்ட அதரங்களை உடையவனுமாகிய அந்தக்கண்ணனை என் கண்களால் எப்போதும் கண்டு அவனில் நான் மூழ்கி விடுகிறேன்.

இனி, காயாம் பூமேனிக் கண்ணனின் சிவந்த மார்புத் தடங்களுக்குக் கவி கூறும் அற்புதமான விளக்கம் இதோ!

குஸுமசரசரஸ மர குபித மதகோபீ
குச கலச குஸ்ருண ரஸலஸ துரஸிதேவே
மதலுளித ம்ருது ஹஸித முஷித சசிசோபா
முஹுரதிக முககமல மதுரி மணி லீயே 53

மன்மதனின் பாணங்களால் தாக்கப்பட்டு அதனால் கோபமடைந்த கோபிகைகளின் மார்புகளில் பூசப்பட்ட செஞ்சாந்துக் குழம்பு தன் மார்பில் இடம் பெற்றிருப்பவனும், மதம் பொருந்திய யௌவனத்தின் சோபை மேலும் மேலும் அதிகரிக்க, தன் முகத்தாமரை பூர்ணசந்திரன் போல் பிரகாசிக்கும் படி இருப்பவனுமான அந்தத் தேவனின் ரூபத்தை எண்ணியெண்ணி ஆனந்திக்கிறேன்.

இந்த மூன்று ஸ்லோகங்களும் உரத்துச் சொல்லி அனுபவிக்க வேண்டியவை. கவி தனது இதயத்தையே இவைகளால் திறந்து வெளிப்படுத்துகிறார். சமாதி நிலையின் அனுபவத்தை இவை கூறுகின்றன. பக்தன் ஒருவன் இறைவனை எந்தக் கோலத்திலும் அகத்தே கண்டு இன்புற முடியும் என்பது கவியின் துணிவு.

ஆனம்ரா மஸிதப்ருவோ ருபசிதா மக்ஷீண பக்ஷ்மாங்குரே —
ஷ்வாலோலாம் அநுராகிணோ நிர்யனயோ ரார்த்ராம் ம்ருதௌ ஜல்பிதே
ஆதாம்ரா மதுராம்ருதே மதகலா மம்லான வம்சீரவே
ஷ்வாசாஸ்தே மமலோசனம் வ்ரஜ—சிசோ மூர்த்திம் ஜகன்மோகினீம் 54

கண்ணனைக் குழந்தைக் கண்ணனைத் தாம் அனுபவிக்கும் போது அவனது கோலத்தை வருணிக்கின்றார். நான் மாடுமேய்க்கும் கோலத்தில் அவனை ரஸிக்கும் சமயம் கண்ணனது புருவங்களிரண்டும் கறுத்து அனுராகமாக வளைந்திருந்தன, கண்ணிமைகள் அடர்ந்திருந்தன கருணை சிந்தும் நயனங்கள் பிரேமை மிகுந்து சஞ்சரித்தன ம்ருதுவான சொற்களும் சிருங்கார ரஸமான அமுதினும் இனிய பேச்சுக்களும் வெளிப்படும் சிவந்த உதட்டில் மதுரமிக்க நாதத்தை இழைக்கும் வேய்ங்குழலை வைத்து கண்ணன் இசைக்கும் போது உதடுகள் மேலும் சிவக்கின்றன. அப்பேர்ப்பட்ட மூன்று உலகங்களையும் மயக்கும் ஆயர்பாடிச் சிறுவனை என் கண்கள் காண விழைகின்றன எனக் கூறுகிறார்.

குழந்தைக் கண்ணனை மேலும் மேலும் வியக்கின்றார் லீலாசுகர்.

தத் கைசோரம் தச்ச வக்த்ராரவிந்தம்
தத் காருண்யம் தேச லீலா கடாக்ஷா:
தத் ஸௌந்தர்யம் ஸா ச மந்தஸ்மிதஶ்ரீ:
ஸத்யம் ஸத்யம் துர்லபம் தைவதேஷு 55

அந்த அதிசயமான குழந்தைக் கண்ணனுடைய தாமரை போன்ற முகமும் அவனது கருணையும் ப்ரேமையும் ததும்பும் கடைக்கண் பார்வையும், அவனது மோகனப் புன் சிரிப்பின் சோபையும், வேறெந்த தெய்வங்களிடத்தும் காணப்படாதது. அதன் மேன்மையை, அதன் வசீகரத்தை வருணிக்க அந்த ஸர்வேச்வரனாலேயே முடியாது என்கிறார்.

மேலும் முரனை வென்று முராரி என்ற பேர்பெற்ற கிருஷ்ணனின் அனுக்ரகிக்கும் தன்மையை அடுத்த ஸ்லோகத்தில் கூறுகிறார்.

விச்வோ பப்லவ சமனைக பத்ததீக்ஷம்
விச்வாசஸ்தப கித சேதஸாம் ஜனானாம்
பச்யாம: ப்ரதி நவகாந்தி கந்தளார்த்ரம்
பச்யாம: பதிபதி சைசவம் முராரே: 56

தன்னையே உறுதியான பக்தியுடன் நம்பிச் சரணமடையும் பக்தர்களது சகலவிதமான துன்பங்களையும் துடைக்கும் அந்த பால கோபாலனது புதிது புதிதான அழகானது காணும்தோறும் ஆனந்தத்தை விளைவிக்கிறது என வியக்கின்றார்.

தன் அன்பின் விசேஷத்தால் தன் மனக்கண்முன் எப்போதும் கண்ணன் மதுராபுரியில் நடமாடு வதுபோலக் காண்கிறார் லீலாசுகர்.

மௌலீ சந்த்ரக பூஷணா மரகத ஸ்தம்பாபிராமம் வபுர்
வக்த்ரம் சித்ரா விமுக்தஹாஸ மதுரம் பாலே விலோலே த்ருசௌ
வாசஸ் சைவ சீதளா மதகஜஸ்லாக்யா விலாஸஸ்திதிர்
மந்தம் மந்தமயே! க ஏஷ மதுராவீதி மிதோ காஹதே 57

மெள்ள மெள்ள நடக்கும் கண்ணன் திருமுடி மயில் பீலியால் அலங்கரிக்கப்பட்டுள்ளது; அவனது காயாம் பூமேனி மரகதக் கல்லினால் ஆன தூண்போலத் தன்னுள்ளே நிழலையளித்து நின்றது. அவனுடைய திருமுகம் கல்நெஞ்சர்களாயினும் கண்டாரைத் தன்பால் கவரும் மோகனப் புன்முறுவலையுடையதாயிருந்தது. அவனது கண்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. அவனது வார்த்தைகள் குழந்தைப் பருவத்தின் முழு இனிமையையும் பெற்றுள்ளன. குழந்தையாக இருந்த போதிலும் அவனது தோற்றம் மதயானையை ஒத்திருந்தது. இங்ஙனம் மதுராபுரியில் சஞ்சாரம் செய்யும் மோகன ரூபனான கண்ணனைக் கண்டு அதிசயத்துடன் வியக்கின்றார் லீலாசுகர். —தொடரும்.

நாடகமே உலகம்

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றாள் ஔவையார். பக்தர்களின் பெருமை மிகப் பெரியது. பக்தர்களுக்காக பகவான் என்ன வேண்டுமானாலும் செய்கிறார். கிருஷ்ணாவதாரத்தின் நோக்கம் துஷ்டர்களை வதைத்து பக்தர்களை ரக்ஷிப்பதாகும். இந்த அவதாரத்தில் பகவான் செய்த காரியங்கள்; லீலைகள், அனுகிரகங்கள் யாவும் ஆச்சர்யகரமானவை. உயர்ந்த ஸ்தானத்தில் உள்ள பகவான் பக்தர்களுக்காக கீழே இறங்கி வருகிறான். அவர்களுக்காக எதையும் செய்கிறான். பக்தனும், தோழனுமான அர்ஜுனனுக்காக பாரதப் போரில் அர்ஜுனனுடைய ரதசாரதியாக இருந்தான். அதுமட்டுமல்ல. சரியான நேரங்களில் அர்ஜுனனைக் காப்பாற்றினான்.

பாண்டவர்களுக்கு ராஜ்யம் கேட்பதற்காக துர்யோதனனிடம் தூது போனான். ஒரு தூதன் செய்ய வேண்டிய வேலையை பகவான் செய்தான். எதற்காக? பாண்டவர்களின் குடும்பம் தன்னை நம்பியுள்ள குடும்பம். அந்தக் குடும்பத்தை ரக்ஷிக்க வேண்டியது தன் கடமை என்று கருதினான்.

பாரதப்போரில் பாண்டவர்களுக்கு எத்தனையோ விதமான ஆபத்துகள் வந்தபோது, அவைகளை எப்படியெல்லாமோ தடுத்து அவர்களைக் காப்பாற்றினான். அந்த கிருஷ்ணாவதாரத்தின் நோக்கம் என்னவோ அதையும் நிறைவேற்றிக் கொண்டான்.

பாரதப்போர் நடக்க வேண்டும். அதில் பீஷ்மர், துரோணர் போன்றவர்களும், துர்யோதனாதியர், கர்ணன் போன்றவர்களும் மடிய வேண்டும் என்பது பகவானின் சங்கல்பம். யுத்தம் நடப்பதற்கான சூழ்நிலையும் உருவாகி விட்டது. இரு தரப்பு சைன்யங்களும் போர்க்களத்தில் நின்றார்கள். இனி யுத்தம் ஆரம்பிக்க வேண்டியதுதான்

ஆனால், அந்த சமயம் பார்த்து அர்ஜுனன் ஒரு முட்டுக்கட்டை போட்டான். கிருஷ்ணா! இங்கே உள்ள ஆசார்யன், பந்து மித்திரர்களைக் கொன்று இந்த ராஜ்யத்தை அடைந்து நான் என்ன சுகம் காணப்போகிறேன்? இந்த யுத்தமே வேண்டாம் அவர்கள் என்னைக் கொன்றாலும் நல்லது. நான் இவர்களோடு யுத்தம் செய்ய மாட்டேன் என்று சொல்லி விட்டான்.

இது பகவானுடைய சங்கல்பத்துக்கு நேர் எதிரிடையானது. பகவான் என்ன செய்வார்? உடனே அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தார். உலகம் புகழும் 'பகவத்கீதை' அப்போது தான் உண்டாயிற்று. உபதேசம் முழுவதும் தர்மநியாயங்கள் நிறைந்தது. இதை பகவான் அர்ஜுனன் மூலமாக உலகமக்களுக்குச் செய்த உபதேசம் என்று மகான்கள் கூறுவர்.



வாழவைத்து வாழும் பாரத கலாசாரம்

ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஸ்ரீ.ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள்

உலகத்திலே பல நாடுகள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனித் தனிக்கலாசாரம் உள்ளது உடை உடுத்துதல், உணவு உட்கொள்ளுதல், பொழுதுபோக்கு மற்றும் பழக்கவழக்கங்கள் இவை எல்லாம் மாறுகின்றன. உலகம் தோன்றிய நாள் முதல் இந்திய கலாசாரம் உள்ளது. அவ்வளவு பழமை யானது.

நம் பாரதம் எப்போது தோன்றியது என்று உறுதியாகக் கூறமுடியாது. அதுபோல, நம் கலாசாரமும் பழமையானது. ஒரு காலத்தில் உலகம் முழுவதும் நம் கலாசாரம் பரவியிருந்ததாகத் தெரிகிறது. பழக்க வழக்கங்கள் மாறியிருந்தாலும், ஆன்மீக வாழ்க்கை மூலம் ஒருமைப்பாடு உடையது நம்நாடு

வழிபாட்டிலே ஒற்றுமையைக் காண்கிறோம். அதனால்தான் ராமேசுவரத்துக்கு மற்ற இடங்களிலிருந்து மக்கள் வருகிறார்கள். அதுபோல் இங்கே இருப்பவர்கள் காசி செல்கிறார்கள். இரண்டுஇடத்திலும் இருப்பவர் ஒரே மூர்த்திதான் லிங்க வடிவில் ஈசுவரன் இருக்கிறான். நூற்றுக்கணக்கான அரசர்கள் ஆண்டாலும் ஆட்சிமாறினாலும் இந்தக் கலாசாரம் மாறாமல் இருந்து வருகிறது.

அந்நியர் ஆக்கிரமிப்பிலும் கூட நம் கலாசாரம் அழியாமல் இருந்து வந்திருக்கிறது. நம் சமயம் ஆதி முதல் பிறரையும் வாழ வைத்துத் தானும் வாழ்கிறது. இதற்குச் சகிப்புத் தன்மை தான் காரணம் அது தான் நம் மதத்தின் சிறப்பு அரசன் எவ்வழியோ, அவ்வழி மக்கள் என்பார்கள்.

சில சமயம் அரசர்களே பிற சமயங்களைத் தழுவிப் பிரசாரம் செய்யும் போது நாம் நம் சமயத்தைக் காப்பாற்றவேண்டி நேர்ந்திருக்கிறது. நாம் செய்வதெல்லாம் மற்ற

இவ்வளவு உபதேசமும் செய்து விட்டு 'அர்ஜுனா! நான் சொல்ல வேண்டியதைச் 'சொல்லி விட்டேன் இனி உனக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ. அதைசெய்' என்றார்.

அர்ஜுனன் நிமிர்ந்து எழுந்தான். கிருஷ்ணா! என் மனக்கலக்கமும் சந்தேகமும் தீர்ந்தது. நான் யுத்தத்துக்குத் தயாராகி விட்டேன். யுத்தத்தை ஆரம்பிக்கலாம் என்றான். பகவானுக்கு பரம திருப்தி. தான் நினைத்தபடியே காரியங்கள், நடக்கிறது என்று எண்ணிக் கொண்டார்.

பின்னர், பாரதப்போர் முதல் இன்னும் எவ்வளவோ காரியங்கள் நடைபெற்றன எல்லாம் அவன் ஏற்பாடு செய்திருந்தபடியே தான் நடந்தது. எல்லாமே பக்தர்களின் நன்மைக்காகவே நடைபெற்றது.

அர்ஜுனனின் தேரை மட்டுமா அவன் ஓட்டிச் செல்கிறான்? உலகத்தில் அனைத்தையுமே அவன் தான் ஓட்டி, நடத்திச் செல்கிறான். ஆட்டி வைக்கிறான். அவன்சொன்னபடி அனைத்தும் ஆடுகிறது.

—வைரம்

வரை அழிப்பதற்காக அல்ல, நாம் அழியாமல் இருக்கவே.

தனிமனிதன் ஒவ்வொருத்தனுக்கும் சமயப்பற்று முக்கியம். எந்த ஆக்கிரமிப்பு வந்தாலும் அது நம்மை, நம் சமயத்தை, கலாசாரத்தை அழிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயப்பணி, சமயப்பணி என்று இரண்டு வகை, சமுதாயப் பணி அனைவருக்கும் பொது. அதில் பட்சபாதம் உதவாது உணவு அளிப்பது, உடை வழங்குவது, ஆபத்தில் உதவுவது போன்ற மனிதாபிமானம் உள்ள பணி. சமயப்பணி என்பது அவரவர் உள்ளத்தைப் பொறுத்தது வழிபாட்டு முறைபற்றியது. அது அதை வளர்த்துக் கொள்ள மற்றவர் இடைஞ்சலாக இருக்கக் கூடாது. மற்றச் சமயத்தினரும் இதை உணர வேண்டும்.

அத்வைதம் யாருக்கும் விரோதமல்ல என்கிறார் ஆதிசங்கரர். அது போல ஹிந்துக்களும் யாருக்கும் விரோதிகள் அல்ல. நம் கலாசாரத்தை வளர்க்க நாம் சமயப் பற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம் கலாசாரம் இப்போது மங்கிவருகிறது. மக்களிடையே அதை வளர்க்க வேண்டும். சமூகத்தின் பல நிலைகளிலும் அதை வளர்க்கவே 'குழந்தைகள் தினம், மகளிர் தினம், இளைஞர் தினம் என்று இங்கே கொண்டாடுகிறோம்.

ஹரிஜனங்களும் நம் சமயத்தைச் சேர்ந்தவர்கள் தாம், அவர்களுடைய முன்னேற்றத்துக்காகவே ஹரிஜன தினம் என்று வைத்து வேலை கிடைக்காத, ஊனமுற்ற ஒதுக்கப்பட்ட ஏழைகளுக்குச் சுய வேலை வாய்ப்புக்கான உதவிகளை அளிக்கிறோம்.

எல்லாரும் உயர்ந்த மனோதர்மத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். க்ஷேமமாக இருக்க வேண்டும் நாராயணா!

தொகுப்பு . ஏ.எஸ் எம், சென்னை.

குருவாயூரின் தலைவனே! உன் திருவடித் தாமரை மலர்களில் செலுத்தப்படும் பக்தியே எல்லா அச்சங்களையும் போக்கும்; விரும்பியவற்றையெல்லாம் கொடுக்கும் நீயே என்று எனக்கு உறுதியாக அறிவுறுத்தினாய

—நாராயணீயம்.

பகவான் நமக்குக் கொடுப்பதிலும் கருணையிருக்கிறது. அவர் கொடுக்க மறுப்பதிலும் கருணை இருக்கிறது.

—கிரீஷ் சந்திரகோஷ்.

திருமண பட்டு ஜவுளிகளுக்கு
சாரதா ஜவுளிக்கடை
ராஜ வீதி, கோயமுத்தூர்.
போன்: 23127

மந்த்ராலய மகானை தரிசியுங்கள்

37

ஆழ் கடலில் சஞ்சரிக்கும் முத்துச்சிப்பிகள் அனைத்திலும் முத்துக்கள் தோன்றுவதில்லை. அவைகள் மேலே மிதக்கும்போது கார்மேகத்தின் மழைத்துளிகள் அச்சிப்பிகளின் உள்ளே முத்துக்களாகின்றன. அம்மழைத் துளிகளுள்ளும் ஸ்வாதி நக்ஷத்திர வேளையில் முத்துச்சிப்பியில் புகும் மழைத்துளிகளே நன்முத்துக்களாகப் பரிணமிக்கின்றன. இது இயற்கையன்னையின் அற்புதமான செயல்.

அவ்வாறே, ஆழ்கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மஹான்கள் தோன்றுகின்றனர். அவர்கள் தாம் உணர்ந்த அதிசய உண்மைகளை மக்களுக்கு உபதேசித்து, அவர்களது அன்றாட இன்னல்களுக்கு அருமருந்தாகி நின்று, இம்மை மறுமை இரண்டினுக்கும் அவர்களுக்கு உறுதுணையாக உள்ள வழியை அருளுவர். தாமும் பிறவா முக்தி பெறுவர் இத்தகைய மகான்களது சரித்திரம் கேட்பவர் தம் மனத்துயரைத் துடைக்கும். பாகவதப் பிரியனான அப்பரந்தாமனின் திருவடிகளை உய்விக்கும்.

நம் ஸ்ரீ ராகவேந்திரர் இத்தகைய மஹான்களில் முதலிடம் பெறுபவர், ஜீவசமாதியாக எழுந்தருளியுள்ள இவரது சக்தி அளவிட வொண்ணாதது. வேண்டியன வேண்டியாங்கு அருளி, அன்பர்க்கு அருள்மழை பொழியும் அண்ணல்.

ஒரு முறை, முந்திரிகி என்னும் ஊரைச் சேர்ந்த வெங்கண்ணாச்சார் என்பவர் சூரிய கிரகணத்தைக் கண்ணாடியின்றிப் பார்த்தமையால் தனது பார்வையிழந்து விட்டார். ஷோலாப்பூரில் இருந்தபோது அங்கு ஸ்ரீ ஆதிகேசவாச்சாரியார் என்பவர் மூலம் மந்திராலய மகானின் பெருமைகளைக் கேள்வியுற்றார்.

தனக்குத் திரும்பவும் கண் பார்வை அளிக்கக்கூடியவர் அவர் ஒருவரே எனத்தெளிந்தார். மந்திராலயம் சென்று குருஜிக்கு சேவை செய்வதை ஒரு வியாழக்கிழமை முதல் ஆரம்பித்தார். பிருந்தாவன ம்ருத்திகையைக் குழைத்து இமைகளின் மேல் காலைவேளையில் தடவி பக்தியுடன் குருஸ்தோத்திரத்தையும் கூறுவார்.

இம்மாதிரி சிறிது காலம் கழிவதற்குள்ளாக அவர் தனது அலுவலக விஷயமாக ஒரு வைத்திய பரிசோதனைச் சான்றிதழ் பெறவேண்டி நேரிட்டது. என்ன ஆச்சரியம்! ஆஸ்பத்திரியினுள் நுழையுமுன்னமே அவரது கண்பார்வை பெற்

பி. எஸ். பரமேசுவரன், பி.ஏ., பி.எல்., சென்னை.

றது! மருத்துவச்சான்றிதழ் வாங்க வந்தவர் வேலையில் சேருவதற்கு வேண்டிய தகுதிச் சான்றிதழ் பெற்றுத் திரும்பினார். குருஸ்தோத்திரத்தில் பிறவிக்குருடன் பார்வை பெறுவான் என்று அப்பண்ணாச்சாரியார் பாடியபடி மந்திராலய மகானின் கருணை வெள்ளம் எந்த வேளையில் நம்மை நோக்கிப் பாயும் என்று சொல்ல முடியாது.

புனாவிலுள்ள ஸ்ரீ கண்டல்கர் என்னும் வியாபாரி திடீரென ஊமையாகி விட்டார். சிறந்த நிபுணர்களால் அவரை ஒன்றும் பேச வைக்க முடியவில்லை. வாழ்வில் நிராசையடைந்த கண்டல்கர் தம் ஆப்த நண்பரான என். டி. பப்பு என்பவரிடம் சென்று ஒரு தாளில் தம் நிலையை அவருக்குத் தெரிவித்துக் கண்ணீர் சிந்தினார். பப்பு அவர்கள் அண்ணல் மந்திராலய மகானின்பக்தர் அவர் தமது நண்பரிடம்குருஜியைவழிபடும்படிசொல்லி, மிகவும் மேன்மை வாய்ந்த தம் குருநாதருக்கு அவரது பேசும் சக்தியை அளிப்பது மிகச்சிறிய காரியமே என்றும் கூறினார்.

கண்டல்கர் குருஜிக்கு உள்ளார்ந்த அன்போடும், பக்தி சிரத்தையுடனும் ஸேவை செய்தார். அவரது படத்தை வைத்து மூன்று வாரங்கள் பூஜை செய்தார். 21வது நாள் விடியற்காலை கண்டல்கரது கனவில் குருநாதர் தோன்றி அவரது நாவில் ஏதோ எழுதிச் சென்றார்.

மறுதினம், கண்டல்கர் காலை ஸ்னானத்தை முடித்துக் கொண்டு பூஜாகிருகத்தில் நுழையும் தருணம் பேசும் சக்தியைத் திரும்பப் பெற்றார். மனம்கொள்ளா மகிழ்ச்சியுடன் தம் நண்பர் பப்புவிடம் சென்று அந்த அதிசயத்தைக் கூறினார். பிறகு மந்திராலயம் சென்று குருவிற்கு ஹஸ்தோதகம் கொடுத்துப் பிரசாதம்எடுத்துக்கொண்டார். அவரது மகிழ்ச்சிகரைபுரண்டோடியது.

வாயில்லா உயிர்களிடத்தும் கருணைகாட்டுவார் குருஸ்வாமிகள். ஹூப்ளியில் உள்ள ஒரு உரத் தொழிற்சாலை அதிபர்கம்பாவே என்பவர், மந்திராலய ஸ்வாமிகளின் அத்தியந்தபக்தர். அடிக்கடிமந்திராலயம் செல்லும் அவர் ஆங்கு நடக்கும்அற்புதங்களை வீடு திரும்பியதும் தமது இல்லத்தரசியிடம் கூறுவார். குருஜியிடம் நம்பிக்கை சிறிதும் அற்ற அவள் அவற்றை நம்பவில்லை. ஆயினும் அவள் தனது விருப்பு வெறும்புகளை வெளிக்காட்டவில்லை.

கம்பாவேயின் இல்லத்தில் விலை உயர்ந்த காளைமாடு ஒன்று இருந்தது. அதனை கம்பாவேயின் மனைவி தான் பராமரித்து அதன்மீது அன்பு செலுத்தி வந்தாள். ஒரு முறை கம்பாவே ஊரில் இல்லாத சமயம் ஒரு சர்ப்பம் தீண்டி அந்தக் காளை மயங்கிய நிலையில் கிடந்தது.

கம்பாவேயின்மனைவியார் அச்சமயம் திக்கற்ற நிலையில் குருஜியின் சக்தியைப் பரீட்சிக்க விரும்பினார். கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு சிறிது மிருத்திகையைப் பாத்திரத்திலுள்ள நீரில் கரைத்து அதனை அந்தக் காளை அருந்தும்படி செய்தார். பிறகு அதன் செயல்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். கால்நடை வைத்யருக்கும் ஆளனுப்பினார்

சிறிது நேரத்தில காளைமாடு நினைவு பெற்றது கண்களைத் திறந்தது அதற்குள் அங்கு வந்த கால்நடை வைத்திய நிபுணர் காளையின் அபாயகட்டம் தாண்டி விட்டதாகக் கூறினார். காளையும் பிழைத்தது.

ஊர்திரும்பியதும் இந்த விஷயத்தைக் கேள்வியுற்ற கம்பாவே தமது காளை உயிர் பிழைத்ததோடு தமது மனைவியின் மனநிலையிலும் பெருத்த மாறுதல் ஏற்பட்டிருப்பதை அறிந்துமனமகிழ்வுஎய்தினார்.

—தொடரும்

தத் - த்வம் - அஸி

பிருஹதாரண்யக உபநிஷத்தில் பரம்பொருளான இறைவனைப்பற்றி கூறும் பொழுது நேதி, நேதி அதாவது 'இது அல்ல, இது அல்ல என்று ஒவ்வொன்றாக விலக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இந்த பிரபஞ்சத்திலே மனிதனுடைய அனுபவத்தில் பார்க்கப்படுகின்ற ஒன்றும் மெய்ப்பொருளல்ல.

மெய்ப்பொருளான பரம்பொருளானவர் தூய அறிவும், அன்பும் தேஜோ வடிவமானவர், ஆதி அந்தமில்லாதவர், நித்தியமானவர், அழிவற்றவர். ஆனால் உலகத்தில் காணும் எல்லா பொருள்களும் காலத்தால் அழிபவை. இன்று தோன்றி நாளை மறைபவைகளாகும். எல்லா துன்பம் நிறைந்தவை. ஆகவே, இவைகளில் எதுவும் மெய்ப்பொருள் இல்லை என உபநிஷத் கூறுகிறது

ஆனால், உயிரும் மெய்ப்பொருளும் ஒன்றே. உடலோடும் மனத்தோடும் கலந்த ஏதோ ஒர் சிற்றுயிர் போல நாம் தோன்றுகிறோம். இந்த உடல், மனம், முதலியவைகளை நீக்கிப் பார்த்தோமானால் எஞ்சி நிற்பது மெய்ப்பொருளான ஜீவாத்ம சொரூபம் என்பதை அறியலாம் இவைகளை விளக்க நான்கு வேதங்களிலும் நான்கு மஹா வாக்கியங்கள் அமைந்திருக்கின்றன. அவையாவன : 1) தத்-த்வம்- அஸி 2) அஹம் ப்ரம்மாஸ்மி 3) ப்ரக்ஞானம் பிரம்ம. 4) அயம் ஆத்மா ப்ரம்ம-என்பவைகளாகும்.

இவைகளில் முதலாவதான தத்-த்வம்-அஸி என்ற மஹா வாக்கியத்தை எடுத்துக் கொண்டால் இதில் மூன்று சொற்களே உள்ளதை காணலாம். தத்-த்வம்-அஸி என்பதை கூட்டாக தத்வமஸி என்றும் கூறலாம். தத் என்ற சொல் நம்மைவிட எங்கேயோ வெகு தூரத்தில் உள்ள பரம்பொருளான இறைவனை அது என்று படர்க்கையாக கூறும் சொல்லாகும். த்வம் என்பது குரு சிஷ்யனை நோக்கி நீ என்று முன்னிலைப் படுத்தி கூறும் சொல்லாகும். அஸி என்னும் சொல் ஆத்மாவும் பரமாத்மாவும் ஒன்றாக இணைந்திருப்பதைக் கூறும் சொல்லாகும்.

அதாவது, உபநிடத காலத்தில் ஒரு மாணவன் தன் குருவை நோக்கி, நான் யார் என்று கேட்க, குருதேவர் அதுவே நீயாக இருக்கிறாய் என்பதாக கூறினார். நம்முன் பல பேருக்கு இதைப்பற்றிய ஐயம் எழக்கூடும். எங்கோ கண்ணுக்குத் தெரியாத வெகுதூரத்திலுள்ள பரம்பொருளும், நம் ஆத்மாவும் எப்படி ஒன்றாக இருக்கமுடியும்? என்பதே.

பரம் பொருளானவர் மனிதனுடைய கற்பனைக்கு எட்டாதவர், மிகவும் பெரியவர். கண்களுக்குப் புலனாகாதவர். அளவு கடந்த ஆற்றலுடையவர். ஆனால், மனித உயிரோ, சிற்றறிவோடு கூடிய குறைந்த ஆற்றல் உடையது. இறைவன் ப்ரபஞ்சத்தையும், எண்பத்திநான்கு லக்ஷம் ஜீவராசிகளையும் படைத்தவர். உயிர் இறைவனால் படைக்கப்பட்டது இறைவனுக்கு பிறப்பில்லை. உயிருக்கு பிறப்புண்டு. இரண்டும் எப்படி ஒன்றாக இருக்க முடியும் என்பது தான் இன்றைய மனிதனுக்குள்ள சந்தேகம்.

ஆத்மாவும், பரமாத்மாவும் ஒன்று என்று கூறும்பொழுது, பரமாத்மா என்ற பரம் பொருளில் எந்த தேஜோ மயம் என்ற உண்மை விளங்குகிறதோ, அதே

தேஜஸ் சிறு உடலும் சிற்றறிவும் கொண்ட மனிதனுடைய உள்ளத்திலும் தேஜோ மயமாய், சத்திய சொரூபமாய் விளங்குகிறது.

பரமாத்மாவிலும், ஜீவாத்மாவிலும் பிரகாசிப்பது அந்த மெய்ப் பொருள் தான். மெய்பபொருள் என்ற அளவில் இரண்டும் ஒன்ருக இருந்த போதிலும். மாயையின் காரணமாக மனிதன் தன் தெய்வத் தன்மையை உணரமுடிவதில்லை. பெரிய தீக் குண்டலத்திலிருந்து வெளிவரும் தீப்பொறி எவ்வாறு பெருந்தீப்பிழம்பிலிருந்து வந்ததோ, பெரிய பாத்திரத்திலுள்ள தண்ணீரிலிருந்து சிறுதுளி எவ்வாறு வந்ததோ அதுபோலவே ஆயிரம் கோடி. சூரிய பிரகாசமான பரம் பொருளிலிருந்து சிறு ஜ்வாலையான ஜீவாத்மா வேறுபடுவதில்லை, அளவில் தான் வித்தியாசம் உண்டு.

மெய்ப்பொருள் என்ற தத்துவம் பரமாத்மாவிலும் ஜீவாத்மாவிலும் ஒன்ருகவே காணப்படுகிறது.

மெய்ப் பொருளின் ஒரு தோற்றம் இறைவனுகவும், மற்ருெரு தோற்றம் உயிராகவும் விளங்குகிறது. மாயையோடு கூடிய மெய்ப் பொருள் இறைவனுகவும், அவித்யையின் விளைவான உடல், மனம், புத்தி இவற்ருேடு கூடிய மெய்ப் பொருள் உயிர் எனப்படுகிறது. மாயையின் சுத்த ஸத்வ குணத்தோடு கூடிய மெய்ப் பொருள் பரமாத்மா வென்றும், அசுத்த ஸத்வ குணத்தோடு கூடிய மெய்ப் பொருள் ஜீவாத்மா எனவும் கூறப் படுகிலது.

மெய்ப்பொருளானது வேற்றுமை களற்றது. அதுவே நான் என்பதாகும். ஆத்ம போதமானது.

நிர்க்குணோ நிஷ்கிரியோ நித்யோ நிர் விகல்போ நிரஞ்ஜன :
நிர்விகாரோ நிராகாரோ நித்ய முகத : அஸ்மி நிர்மல :

என்று மெய்ப்பொருளைப் பற்றிக் கூறுகிறது. அதாவது எது செயலற்று, குணங்களற்று, நிததியமாய், வேற்றுமையற்று, மாசற்று, மாற்றமற்று, வடிவமற்று என்றும் சுயேச்சையாய் தூயவனாய் இருக்கிறதோ, அதுவே நான் என்ற மெய்ப்பொருளாகும் என்பதாகும்.

ஆத்ம நிலையை உணர்ந்த, மெய்யறிவை அறிந்த யோகிகளும், மஹாத்மாக்களும் முனிவர்களும் மெய்ப்பொருளின் தன்மையை உணர்ந்தவர்களாவர். மெய்ப்பொருளான தத் என்ற பரம்பொருள் ஸதயம், ஞானம், அனந்தம் என்ற சொருப லக்ஷணங்களைக் கொண்டது. ஸத்யமே ஞானம், ஞானமே அனந்தம். அனந்தமே ஆனந்தமாகும்.

ஆகவே, உடலே நான் என்று வெகுகாலமாக ஊறிப்போன எண்ணத்தை, மெய்ப் பொருளே நான் என்ற இடையருத நினைப்பினுல் மாற்ற வேண்டும், மருந்து நோயை தீர்ப்பது போல், இந்த நினைவு அறியாமையின் விபரீதத் தோற்றங்களை மாய்த்துவிடும் மெய்ப்மொருளின் நினைவு என்ற மருந்தினுல் அறியாமை என்ற நோயை நீக்கி விட்டால், உயிர் தன் சொந்த நிலையை அடைகின்றது. ஸத்-சித்- ஆனந்தமே மனிதனின் உண்மை சொருபமாகும்.

மெய்ப் பொருளைத் தவிர மற்றவைகளை விலக்கி, பரம்பொருள் ஒன்றைப் பற்றிய நினைவை மனத்தில் நிரப்பிக் கொண்டிருக்கும் பொழுது, மனம் மெய்ப்பொருளின் வடிவமாக நிற்கிறது. அப்பொழுது ஜீவாத்மாவானது தத்-த்வம்- அஸி என்ற மஹா வாக்கியத்தை உணர்ந்து ஸத்-சித்-ஆனந்தத்தை அடைகிறது.—ஜி.என்.நாராயணன்

பெண்களுக்கு மட்டும்

நக்ஷத்திர குணங்கள்

A. ராகவய்ய ஜோஸ்யர் - திருவள்ளூர்

ஆயில்யம் நட்சத்திரம்

27 நக்ஷத்திரங்களுள் 9-வது இடம் பெற்றது ஆயில்ய நக்ஷத்திரம். இதற்கு அதிதேவதை நாக தேவதை, ஸ்ரீ நக்ஷத்திரம், ராக்ஷஸ கணம், யோனி பூனை, நக்ஷத்ராதிபதி புதன், ராஜஸ குணம். இத்தகைய நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்களைப் பற்றி ஆராய்வோம்.

முதலில் இந்நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்களைப் பற்றி தவறான கருத்தொன்று நம் மக்களிடையே நிலவிவருகிறது அதாவது ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்கள் என்றாலே ஏதோ பூகம்பம் வந்தது போல் அலறுகிறார்கள் அந்த பெண்ணால் நமக்கென்ன விளைவு வருகிறது? ஆயில்ய நக்ஷத்ரத்தில் பிறந்த பெண்கள் மாமியாரை மரிக்க செய்துவிடுவர் என்கின்றனர்.

ஆயில்யம் முதல் பாதமானால் தான் மாமியாரை மரிக்கச் செய்வர் என்பது சாஸ்திரவிதி. இவர்களே மாமியார் உயிருக்கு எமன் என சொல்லமுடியாது. இவர்கள் கணவன்மார்களுக்கு கர்மதசை வந்து மரணம் சம்பவிக்கக் கூடாதா என்ன? காக்காய் உட்கார்ந்ததால பனம்பழம் விழுந்தது என்பதைப் போல இவர்கள் மீது பழியைப் போடுவார்கள்.

முதல் பாதமாக இருந்தால்கூட மாமியாருக்கு மருமகளைப் பிடிக்காமலோ, தனித்து வாழ்வாச்களோ தவிர அவர்களால் எவ்வித துன்பமும்நேராது. இதுபோல பலமக்களை கண்கூடாக பார்த்து வருகிறோம்.

ஆதலால், ஆயில்யத்தில் பிறந்த பெண்கள் அவ்வளவு கொடுமையானவர்களல்ல. மாறாக யோகத்தைத் தரக்கூடியவர்கள். அசம்பாவிதங்களுக்கு கணவன்மார்களுடைய ஜாதகங்கள்கூட துணையாக இருக்கும். எனவே ஆயில்ய நக்ஷத்ர பெண்களை தைரியமாக திருமணம் செய்துக்கொள்ளலாம் அனாவசியமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையை வீணாக்கவேண்டாம்.

ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்கள் அரசிளங்குமரிகள், அழகுடையவர்கள். கணவனை கைப்பொம்மையாக ஆட்டி வைப்பார்கள். இவர்களுக்கு பச்சைகலர் பொன்கலர் ஆடைகளும் புதுவிதமான திலகங்களும் உபயோகிப்பார்கள். இவர்கள் கணவன்மார்கள் ஏழ்மையான நிலையுள்ளவர்கள் திருமணத்திற்கு பிறகு செல்வம் வாகன லாபமுடையவர். விருந்து பசாரத்தில் மிக்க சிரத்தையுள்ளவர்கள். அன்னதானத்தில் ஈடுபாடுடையவர். நடுத்தர கல்வியுடையவர்.

திருமணத்திற்கு பின் புதல்வர் தாய்க்கு எதிரிகளாகவும், புதல்விகள் தாயைவிடாமல் பாசமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். பச்சைக் கல் ஆபரணங்கள் பவழங்கள் மீது அதிக ஆசையுள்ளவர்கள் தெய்வ பக்தியைவிட சினிமா கொட்டகை பக்தி அதிகம். கல்வி மீது அதிகம்

அக்கறைகாட்டமாட்டார்கள். இவர்கள் கணவன்மார்கள் இவர்கள் மீது அதிக சந்தேகம் கொள்வார்கள் மனைவிகளை அடிப்பதும் திட்டுவதும் இவர்கள் வேலை அதிகமாக கடன்களை வாங்குவர். இவர்களின் சந்ததிகள் தாய் வீட்டில் வளர்ந்து வரும். தாய் வீட்டார்களுக்கு இவர்களால் பெரும் அவமானங்களும் மனவேதனைகளும் உண்டாகும்.

சிலர் பார்ப்பதற்கு விகாரமான சொரூபத்துடன் நாணயமின்றி கீழ்தரமான செயல்களை செய்துக்கொண்டு, ஊர் வம்புகளை இழுத்துக்கொண்டு ஆடவர்களை மதிக்காமல், மரியாதைகுறைவான வார்த்தைகளை பேசுவதும் தகாத செயல்களை செய்வதும் ஏவல் தேவதைகள் எந்நேரமும் அலைவது போல் கிழித்த ஆடைகளை அணிந்துக் கொண்டு அங்குமிங்கும் அலைந்துக் கொண்டும் திரிவர். இவர்கள் கணவன்மார்கள் கூலிவேலைகளைச் செய்துக் கொண்டு அதனால் வரும் பணத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்துவர் கூடைகள் பின்னுவது கிளினர் தொழில் போன்றவை இவர்களுக்கேற்றது.

முதல் பாதம்

நல்ல அழகுடையவர்கள். குணமுடையவர்கள், பரோபகாரிகள், தெய்வபக்தி. அதிதிகளை ஆராதிக்கும் தன்மை பூஜை புராணம் மீது அதிக ஆவல் இவர்களுக்கு வாய்க்கும் கணவன் உத்தமர். கல்வி பண்டித சிரோமணிகள், வைதீகத்தில் உயர்ந்தவர், மனைவி மீது அன்பும் ஆதரவு முள்ளவர்கள் உலக நன்மைக்கு பாடுபடும் உத்தம சிரேஷ்டர்கள். தர்ம சிந்தனை, தயாளகுணம் உள்ளவர்கள்.

இரண்டாம் பாதம்

முணுமுணுத்தல், பார்வையில் வெறுப்பு வீண் சஞ்சலம், சூது மார்க்கத்தில் செல்லும் எண்ணம். கணவன்மார்கள் துஷ்ட சேர்க்கையால் பணத்தைப் பாழாக்குவதும், வேலைக்கு செல்லாமல் திரிந்துக் கொண்டுவந்துமனைவியை அடிப்பதும் போன்ற காரியங்களை செய்வர்.

மூன்றும் பாதம்

டாம்பீக குணம், உரத்த குரல் ஆகாத்யம், கருநிறம், கோணலான பற்கள், கணவன்மார்கள் எந்நேரமும் வீட்டில் அகப்பட்டுக் கொண்டு மனைவியை அதிகாரம் செய்வார்கள், கிணற்றில் தவளை போல், தைரியத்தோடு செல்லாதவர்கள் துணைக்கு மனைவி வந்தால் ஆண்மையோடு பேசுபவர்கள். மனைவியின் சம்பாதனையால் வாழ்க்கையை சோபிக்க விரும்புவர்.

நான்காம் பாதம்

செல்வமுள்ளவர்கள், கணவன் உயர்ந்தநிலையிலுள்ளவன், ஸ்ரீகளின் சபலம் மனைவியை காணமாட்டார், அழகுள்ளவ கள் சீறும் சிறப்புமாக வாழ்வார்கள.

இந்த பெண்களுக்கு பிரதி மாதம் திங்கள், வெள்ளி, புதன் கிழமைகளும் 6, 1?, 24 தேதிகளும் 15, ?4, 3?, 42, 51, 60 வயதுகளிலும் கணவன்மார்களுக்கு உயர்ந்த நிலையும், வெற்றிகளும், தனலாபங்களும், காரிய சித்தியுமுண்டாகும். சூரியன், சந்திரன், செவ்வாய், ராகு, குரு தசைகளில் யோகம், சனி, புதன், சுக்ரன், கேது தசைகளில் இடையூறுகளுமுண்டாகும் இடையூறுகளுக்கு துர்காஜபம் ஹோமங்கள் செய்தல் நலம் பயக்கும்.

வாழ்க்கை என்பது இன்பம் நிறைந்த துன்பம். —பெர்னுட் மாலாமூட்.

பெண்ணின் பெருமை

அமரர் ஸ்ரீ சுவாமி சிவானந்தா

ஹிந்துப் பெண்களின் பக்திமயமான பண்பைப் பற்றிச் சில வார்த்தைகளைச் சொல்கிறேன். இந்தியாவில், பெண்மணிகளால் மாத்திரமே மதம் சம்ரக்ஷிக்கப்படுகிறது. அவர்களிடத்தில் இயற்கையாகவே மதாசார அறிவு விசேஷமாய் இருக்கிறது.

ஹிந்துப் பெண்கள் பக்தியில் சிறந்தவர்கள். தத்தம் தினசரி நடத்தையாலும், வாழ்க்கை அனுபவத்தாலும் அவர்கள் ஆடவர்களிடத்தில் மதாசார தத்துவத்தைப் புகட்டுகிறார்கள். அவர்கள் அதிகாலையில் எழுந்து வீடுகளைச் சுத்தம் பண்ணி, ஸ்நானம் செய்து ஜபிக்கிறார்கள் வீட்டில் ஒரு சிறு கோயிலைச் செய்து பகவானுடைய திருப்படங்களையும் பூஜைக்குரிய பாத்திரங்களையும் வைத்துக் கொள்கிறார்கள்.

அந்த இடத்தைப் புனிதமாக வைத்துக்கொண்டு, அந்திவேளையில் தீபாராதனையும் பிரார்த்தனையும் நடத்துகிறார்கள். வீடு முழுவதையும் ஆத்மீய அதிர்ச்சி அலைகளால் நிரப்புகிறார்கள். வீட்டிலுள்ள நாஸ்திக மனப்பான்மை கொண்ட ஆடவர்கள் அவர்களுடைய தூண்டுதலின் மூலம் அச்சத்தால் ஏதோ சில பிரார்த்தனைகளைச் செய்யும்படி வற்புறுத்தப்படுகிறார்கள்.

உண்மையில் வீட்டைப் பெண்களே ஆளுகின்றார்கள். அவர்கள் சக்தியின் தோற்றங்களாவார்கள் அவர்கள் ஆடவர்களை அடக்குகிறாகள்.

பெண்கள் அபலைகள் அதாவது பலமற்றவர்கள் என்று கூறப்படுகிறார்கள். ஆனால், உண்மை பார்க்குமிடத்து அவர்கள் பலமுள்ளார்கள். இந்து மதத்தின் தலைசிறந்த திறவுகோலை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சக்தி மாதாவின் தோற்றங்கள் பிரகிருதித் தத்துவம் அவர்களிடத்தில் பிரபலமாய்க் காணப்படுகிறது.

தற்காலத்தில் பெண் வக்கீல்களும், பெண் டாக்டர்களும் வெளிநாட்டு யோக்கியதாம்சங்கள் பெற்றவர்களாய் இருக்கக் காண்கிறோம். சட்டசபைகளில் பெண் அங்கத்தினர்களும், விமானங்களை ஓட்டும் பெண்டிரும் இருக்கிறார்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இங்ஙனம் பெண்கள் போட்டியிட்டால், ஆடவர்களின் எதிர்கால கதி என்ன ஆகும்? ஓர் பெண் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கிறவள், சம்ரட்சிக்கிறவள்.

ஆத்மீய நெறியில் உமது மனைவியைப் பயிற்றுவிக்க வேண்டும். அவளும்கூட கடுமையான சாதனைகளை பயிலல் வேண்டும்.

பக்கத்தில் மனைவியில்லாமல் மதாசாரக் கிரியை எதுவும் செய்வதற்குக் கணவனுக்கு உரிமை கிடையாது. எங்கு பெண்கள் மரியாதையாய் நடத்தப்படுகிறார்களோ, அங்கு தேவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். ஆனால், எங்கே பெண்கள் மரியாதையாக நடத்தப்படவில்லையோ அங்கே இயற்றப்படும் புனிதமான செயல் எதுவும் பயன் தராது என்று மனுஸ்மிருதி முழங்குகிறது இந்தியப் பெண்மணிகளின் பெருமை அவ்வளவு சிலாக்கியமானது.

நன்றி : தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
இராசிபுரம்

ஒற்றுமை

ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள்

ஒரு தடவை அசுரர்களும் பூதகணங்களும் சேர்ந்து துரியோதனனை அடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு போனார்களாம். "பொல்லாத துரியோதனன் நன்றாக அனுபவிக்கட்டும்" என்று தருமனைத் தவிர்த்துச் சகோதரர்கள் நான்கு பேர்களும் சிரித்தார்களாம். அப்போது தருமன் தடுத்துச் சொன்னானாம்.

"நமக்குள் ஆயிரம் பேதங்கள் இருக்கலாம், சண்டை போட்டுக் கொள்ளலாம். பாண்டவர்கள் ஐவராகவும், கௌரவர்கள் நூறு பேராகவும் நிற்கலாம். ஆனால் அந்நியன் யாரும் வரும்போது நாம் நூற்றைந்து பேர். ஞாபகமிருக்கட்டும். நமக்குள்ளே பேதங்களை மற்றவன் பயன்படுத்திக் கொள்ளவிடக்கூடாது" என்று அறிவுரை சொன்னானாம். பிறகு பீமனும் அர்ச்சுனனும் சென்று துரியோதனனை மீட்டதாகச் சொல்கிறது மகாபாரதம்.

அதேபோல நமக்குள் ஒற்றுமை, வேற்றுமைகள் இருந்தாலும் அதை மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்ள விடக்கூடாது. நம்முடைய பலவீனங்களைக் காட்டித் தோற்கக் கூடாது. நாமனைவரும் சகோதரர்களே

வழி விடு முருகா

மயிலம் முருகா வழிவிடு—உன்
மலையேறி வரவேண்டும் கைகொடு

குயிலம் கூவும் காலையிலே
　　கோயில் கதவைத் திறந்திடு—கை
கூப்பி வணங்கும் பக்தர்க்குக்
　　கோடி அருளைப் புரிந்திடு!

காவடிகள் தோளிருக்கக்
　　　கம்பிவேல் நாவிருக்க—அலை
　கடலென ஊர்வலங்கள்
　　　காட்சிதர வீதியிலே
பூவடிகள் பால்மணக்க
　　　பொன்மேனி பூமணக்க—நீ
　புறப்பாடு கொள்ளவேண்டும்
　　　பொற்கதிரோன் ஜோதியிலே!

—புதுவை ஆனந்தவல்லி

மகாகவி காளிதாசர் அருளிய

குமார சம்பவம்

ஸ்ரீ. குருவாயூரப்பதாசன் B. சுந்தரராமன், M A., B.Ed

1

கிழக்கிலும், மேற்கிலும் உள்ள கடல்களை அளக்கும் அளவுகோல் போன்றதும் தெய்வத்தன்மை உடையதும், ஹிமாலயம்எனப்புகழ் பெற்றதுமான சிறந்தமலை ஒன்று வடக்கு திசையில் உள்ளது. அம்மலைக்கு அதிதேவதையாக ஒரு தேவன் உண்டு. அவனுக்கு ஹிமவான் என்று பெயர். அவன் ஆதிக்கத்திற்கு உட்பட்ட இமயமலையில் சித்தர்கள் என்ற தேவ வகையினர் வசிப்பர். இவர்கள் உஷ்ணத்தை விரும்பினால் மேகங்கட்கு மேலும், குளிர்ச்சியை விரும்பினால் மேகங்கட்கு கீழும் ஸஞ்சரித்து இன்பமாகக் காலம் கழிப்போராவர். பல வகை ரத்னங்களும் மூலிகைகளும் விலைமதிப்பற்ற பொருள்கள் பலவும் இம்மலை தன்னுள் கொண்டுள்ளது.

இந்த இமயமலையில் வசிக்கும் இசையில் தேர்ந்த கின்னரர்கள் என்ற பிரிவினர் பாடத் தொடங்கியதும் இமயமலைக்குகைகளிலிருந்து வரும் காற்றானது மலைமூங்கில் குழாயின் துளைகளின் வெளியே வெளிப்பட்டு இயற்கையான புல்லாங்குழல் பக்கவாத்யமாக செயல்படுவது வழக்கம். இதை, இசை ரசிகனான ஹிமவான் நன்கு ரசிப்பான்.

இத்தகைய இமயமலையில் வசிக்கும் தேவர்கட்கு இரவு நேரங்களில் இயற்கையிலேயே ஒளிவிக்க மூலிகைகள் விளக்குகளைப் போல பிரகாசித்து வழிகாட்டி உதவும் தன்மையினவாகும். மலையரசனாகிய ஹிமவானைக் கவரிமான்கள் தமது வால்களால் சாமரம் வீசி கௌரவிக்கும் காதலர்களுடன் பெண்டிர் குலாவி மகிழும் போது குகை வாயிலை திரைபோல மேகங்களே மறைத்து நிற்கும்.

ஸப்தரிஷிகளும் தம் தவம் கருதி இமயமலையில் வசிக்கும் பெருமை இதற்கு உண்டு. பராக்கிரமசாலியான ஹிமவானின் பெருமை கருதி ஹிமவானுக்கு யாகங்களில் ஹவிர்ப்பாகம் பெறும் உரிமையை பிரம்ம தேவன் அளித்திருந்தார்.

முன்பொரு சமயம், அக்னிஷ்வர்த்தர் என்று பித்ருக்களால் மானஸீகமாக மேனா என்றஒப்புயர்வற்ற அழகி படைக்கபபட்டாள். ப்ரஹிஷதர் என்ற ஒருவகை பித்ருக்கள் தாரிணி என்ற பேரழகியைப் மானஸீகமாகப் படைத்தனர்.

தாரிணியை மேரு என்ற மலையரசனும், மேனையை ஹிமவானும் விரும்பித் திருமணம் செய்துகொண்டனர். (இந்த மேனா வேறு, அப்சரஸ் மேனகை வேறு வாசகர்கள் மனதில் கொள்ள வேண்டும்.)

ஹிமவானின் மனைவியான மேனா காலக்ரமத்தில் கருவுற்றாள். இவளுக்கு முதலில் மைநாகன் என்ற மகன் பிறந்தான். இவன் வளர்ந்து பாதாள லோகத்து நாக கன்னிகைகளை மணந்து கடலரசனுடன் நட்பு பூண்டு வசித்து வந்தான்.

முற்பிறவியில் தக்ஷப் பிரஜாபதியின் மகளாகவும், ஸதி என்ற திரு

நாமம் பூண்டவளாகவும், சிவ பிரானைக் கணவனாகப் பெற்றவளா கவும், யாகத்தில் தன் தந்தை தக்ஷன் சிவபிரானுக்கு உரிய மரி யாதை அளிக்காததால் யோகத் தால் உயிர் நீத்தவளாகவும் ஆகிய இத்தகைய அரும்பெருமைகளை உடைய பராசக்தி, மீண்டும் அதே சிவபிரானைக் கணவனாக அடைய விரும்பினாள். எனவே, கற்புக்கரசி யான மேனாவின் கர்ப்பத்தில் ஹிம வானின் மூலம் அடைந்தாள்.

இவ்விதம் உத்தமமான தாய் தந்தையரைத் தேர்ந்தெடுத்த பராசக்தி மேனாவின் கர்ப்பத்தில் வளர்ந்து உலகத்திற்கு நன்மை பயக்கும் ஒப்புயர்வற்ற ஒரு புண் ணிய தினத்தில் அவதாரம் செய் தாள். அம்மையின் பிறப்பால் எல்லா உலகங்களும் மகிழ்ச்சி யடைந்தன. தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். பர்வதங்களாகிய மலைகளின் அரசனான ஹிமவானின் மகள் என்பதனால் பெற்றோர்கள் அம்மைக்கு பார்வதி என்று பெய ரிட்டனர்.

மேகத்தின் கர்ஜனையால் இலங் கையில் உள்ள விதூரம் என்ற மலை விளையுயர்ந்த நீலரத்னங்களை உல கிற்கு அளிப்பதுபோல, உலக நல னுக்காக மேனா நீல நிறமான பார் வதி தேவியைப்பெற்றாள். வளர் பிறைச் சந்திரன் போல பார்வதி தேவி நாளுக்கு நாள் மிக்க ஒளியு டனும் அழகுடனும் வளர்ந்து வந் தாள். ஹிமவான் தன் குழந்தை களில் பார்வதி தேவியிடமே அதிக அன்பு வைத்தான்.

குழந்தை பருவத்தில் அம்மை தன் தோழியருடன் கங்கையில் மணல் வீடுகளைக் கட்டி விளையாடி னாள். பிறகு கல்வி கற்கத் தொடங் கியதும் எல்லா வித்தைகளும் தாம் அடைய வேண்டிய இடம் இது தான் என்று கருதி தேவியைச் சரணம் அடைந்தன. ஆசிரியர் களின் முயற்சிகள் வெறும் கடமை யாகவே முடிந்தன. நாளடை வில் ஜகன் மாதாவாகிய பார்வதி யம்மை திருமண வயதை அடைந் தாள் யௌவனமும் அழகும் அம் மையை அடைந்ததால், தாம் பெருமை பெற்றன

பார்வதி தேவியின் பாதங்கள் இயற்கையிலேயே மிகவும் சிவந் தவை. அவற்றின் நகங்களின் காந்தியோ அளவு கடந்தது. எனவே, அம்மை தனது பாதகமலங் களைத் தரையில் எங்கு வைத் தாலும் பாதத்தின் சிவந்த நிறம் தரை முழுவதும் பரவி பிரதிபலித் தது, அம்மையின் திருப்பாதங் களில் பூசப்பட்ட செம்பஞ்சுக் குழம்பு இயற்கையிலேயே உள்ள சிவப்பை மேலும் அதிகப் படுத் தியது. பூமியில் அன்னை நடந்து சென்றபோது ஆங்காங்கு செந் தாமரை மலரைப் பதிய வைத்தது போன்ற தோற்றத்தை உண்டாக் கியது.

ஓரிடத்திலும் நிலைத்து நிற்கா தவள் என்ற பெயரையும், தன்மை யையும் கொண்ட லஷ்மிதேவி, சந்திரனைப் போன்ற தன்மையும், தாமரைமலர் போன்ற மலர்ந்தது மான பார்வதிதேவியின் திருமுகத் தில் நிலைத்து வசித்துவரத் தொடங் கினாள். இதனால் நிலைபெறாதவள் என்ற அவப் பெயரைத் திருமகள் நீக்கிக்கொண்டகள்.

பவளத்தின் மேல் வைக்கப்பட்ட முத்துப் போலவும், சிவந்த தளிரின் மேல் வைக்கப்பட்ட வெண்ணிறப் பூக்கள் போலவும் அன்னையின் புன்னகை திகழ்ந்தது. தேவியின் குரலோசை அமுதம் போல இனி மையாக இருந்தது. அம்பிகையின் கூந்தல் கவரிமான்களின் வாலை பழிக்கும் இயல்புள்ளதாக இருந்தது. தனது கரும்பு வில்லின் அழகே மிகவும் சிறந்தது என்ற கர்வம் கொண்டிருந்த மன்

மதன், பார்வதியின் புருவ அழகையும் நீலோத்பல மலர் போன்ற கண்ணழகையும் கண்டு ஆணவம் நீங்கி வெட்கினான்.

இவ்விதம் பார்வதியம்மை இனிது வளர்ந்து வருகையில் ஒரு நாள், நாரதர் ஹிமவானின் வீட்டிற்கு வருகை தந்தார். அப்போது ஹிமவானுக்கு அருகில் பார்வதி தேவியும் நின்று கொண்டிருந்தாள். ஹிமவான் நாரதரை வரவேற்று உபசரித்தான். நாரதர் ஹிமவானிடம் அவன் மகள் பார்வதி பரமேச்வரனையே மணந்து, அவர் உடலில் பாதி இடத்தையும் பெறும் பெருமை மிக்கவளாக விளங்கப் போகிறாள் என்று கூறினார்

இதனால் மனம் பூரித்த ஹிமவான், அன்று முதல் தன் மகளுக்கு வரன் தேடும் வேலையையே நிறுத்தி விட்டான் ஆயினும், சிவபிரானிடம் சென்று தன்மகளை மணக்கும்படி எவ்விதம் கேட்பது என்று தயங்கினான் அவர் மறுத்து விட்டால் அது பிறர் நகைப்புக்கு இடமாகி விடுமே என்றும் அஞ்சினான்.

தக்ஷயக்ஞத்தின் போது ஸதீ தேவி யோகத் தீயில் தன் சரீரத்தைத் தியாகம் செய்தது முதல் சிவபிரான் எதிலும் பற்றின்றி இருந்து வந்தார். தேவதாரு மரங்களால் சூழப்பட்ட ஹிமாலயத்தின் ஒரு சமமான பகுதியில் யானைத் தோலை அணிந்தவராய் பரமேச்வரன் உலக நன்மைக்காகத் தவம் செய்து கொண்டிருந்தார் சிவசேவகர்களான பிரமத கணங்கள் என்னும் பிரிவினர், நமேரு என்னும் மலரை அணிந்தவர்களாய், மரவுரி உடுத்துத் தாமும் தவக்கோலம் பூண்டு பரமேச்வரனுக்கு பணிவிடை செய்தனர்.

சிவபிரான் தங்கி இருந்த அந்த வனத்தில் அவரது வாகனமாகச் செயல்படும் நந்தி தேவரும் தங்கி இருந்தார். தவத்திற்குப் பயனைத் தாமே தருபவரான சிவபிரான், தமது ஒரு ஸ்வரூபமான ஹோமாக்னி குண்டத்தைத் தம் முன்பு வைத்துக் கொண்டு உலகத்தவர்க்குத் தவம் செய்வது எப்படி என்பதைக் காட்டுபவராய் தவம் செய்து வந்தார்.

ஹிமவான் தனது இருப்பிடத்தில் சிவபிரான் தங்கி இருப்பதை அறிந்த உடனே, அங்கு சென்று அவரைப் பூஜித்தான் தொடர்ந்து தினந்தோறும் தன் மகளான பார்வதி தேவியைத் தோழியருடன் அனுப்பி அவருக்குப் பூஜைகள், மற்றும் பணிவிடைகள் செய்து வரும்படி கூறினன். பார்வதி தேவியும் அவ்விதமே செய்து வந்தாள்.

பார்வதி தேவியைப் போன்ற ஒப்புயர்வற்ற அழகியை அருகில் வைத்துக் கொள்வது தம் தவத்திற்கு இடையூறு என்ற போதிலும், தமது மனத்திண்மையில் நம்பிக்கை கொண்ட சிவபெருமான் தமக்குப் பணிவிடைகள் செய்யப் பார்வதியம்மையையும் தோழியரையும் அனுமதித்து வந்தார்.

பார்வதிதேவி பரமேச்வரனைப் பற்றி நாரதர் முன்பு கூறியதிலிருந்தே அவர் மீது எல்லையற்ற காதல் கொண்டு மனதிற்குள் அவரைப் பூஜித்து வந்தாள். எப்படியும் பரமேச்வரனை மணந்தே தீருவது என்ற திட ஸங்கல்பமும் கொண்டிருந்தாள் தற்போது பரமேச்வரனைக் கண்டது முதல் அம்மையின் அன்பு இன்னும் தீவிரமாகியது.

தினமும் சிவபிரான் தவம்புரியும் இடத்தை சுத்தி செய்வதும், பூஜைக்குப் புஷ்பங்களைச் சேகரித்தும், ஜலம், தர்ப்பம், ஸமித்து முதலியவற்றை கொண்டு வந்து கொடுத்தும் உதவினள். கண்ணினை இமை காப்பது போல சிவபிரானைக் காத்தும் வந்தாள் தியானம் நீங்கி ஈசன் கண் விழிக்கும் நேரமறிந்து உணவு, நீர் ஆகியவற்றை அன்புடன் தேவி அளித்து வந்தாள். தன் பசி, தூக்கம், களைப்பு இவற்றை அறியாது சிவ கைங்கர்யத்தில் ஈடுபட்ட பார்வதியம்மையின் உடல் சோர்வுக்கு, சிவபிரானின் தலையில் அழகுற அமைந்திருந்த சந்திரனின் குளிர்ந்த கிரணங்களே களைப்பைப் போக்கும் மருந்தாய் அமைந்தது.

(தொடரும்)

லக்ன பலன்

குண்டுசி ஜோஸ்யர்

(16 - 9 - 83 முதல் 15 - 10 - 83 வரை)

மேஷம்

குடும்பத்தில் அமைதியற்ற சூழ்நிலை காணப்படும். சொத்துக்களின் மீது கடன் வாங்க வேண்டிய நிர்பந்தம் உண்டாகும் உத்தியோகஸ்தர்கள் பிறருடைய பொறுப்புகளையும் ஏற்க நேரிடலாம். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு லாபங்களும் முன்னேற்றமும் நிறைந்து காணப்படுகிறது. மாணவர்கள் மற்ற விஷயங்களில் நாட்டம் செலுத்தி மகிழ்ச்சி அடைவார்கள். அரசியல்வாதிகள் வெளியூர்ப் பயணங்கள் மேற் கொண்டு சிரமங்கள் அடைய வாய்ப்பு உண்டு.

ரிஷபம்

வருமானம் தாராளமாக இருந்தாலும் சிலவு அதிகம் ஏற்படும் உத்தியோகஸ்தர்கள் நல்ல செல்வாக்கு அடைவார்கள். தொழில் வியாபாரத்துறையில் உள்ளவர்கள் தங்கள் துறையில் அதிக கவனம் செலுத்த நேரமும் மாணவர்கள் தங்கள் கல்வியில் அதிக முயற்சி மேற்கொள்ள வேண்டும் அரசியல் வாதிகள் பிரயாணங்களை மேற் கொள்ளாமல் தாமதப் படுத்துவது உசிதமாயிருக்கும் கலைத் துறையில் இருப்பவர்களுக்கு புகழுடன் பணமும் சேரும்.

மிதுனம்

குடும்பத்தில் திருமணமாகாதவர்களுக்கு நல்ல சம்பந்தம் எளிதில் வந்து சேரும். பொருளாதாரம் சீரான நிலையில் இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வெளியூர்ப் பிரயாணம் ஏற்படலாம். தொழில் வியாபாரத் துறையில் இருப்பவர்களுக்கு நல்ல லாபங்கள் ஏற்படும். புதிய முயர்ச்சிகளுக்குத் தடையும் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வக் குறைவினால் ஆசிரியர்களின் அதிருப்திக்கு ஆளாகக்கூடும். அரசியல் வாதிகள் தீவிர சிந்தனைகளைத் தவிர்த்தல் நலம்.

கடகம்

நீண்டகாலமாக இருந்து வந்த தோல்வி முதலிய மந்த நிலைமாறி சீரான நிலையில் நண்பர்களின் உதவியுடன் வளமான வாழ்க்கை அமையும். பெண்களுக்கு குடும்ப வாழ்க்கை உல்லாச மிகுந்ததாயும் ஆடை ஆபரணச் சேர்க்கை முதலியவற்றால் மனமகிழ்ச்சியும் ஏற்படும். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்கள் பண முடக்கம் ஏற்படுவதால் சிலவு அதிகரித்தல் எதிர்பார்க்க இடமுண்டு. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரி

டலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்துவதன் மூலம் தொடர்ந்து தேர்வு முதலியவற்றில் வெற்றி யடைய வாய்ப்புண்டு. அரசியல் வாதிகளுக்கு நிலைமையை சமாளிக்கவும் தூரப்பிரயாணங்களால் தேக நிலை பாதிப்பும் ஏற்பட இடமுண்டு.

சிம்மம்

மனஅமைதியின்மையும் பொருளாதார குறைவும் ஓரளவு அதிகமாகவே இருக்கும். உத்தியோகஸ்தர்கள் உடனிருப்பவர்களுடன் ஒத்துழைத்துப்போக வேண்டிவரும். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்கள் கூட்டாளிடம் மிகுந்த எச்சரிக்கையாக இருத்தல் நலம் மாணவர்கள் கல்வியில் சிறந்து பாராட்டுகளையும், பரிசுகளையும் பெறுவர். பெண்களுக்கு வாழ்க்கையில் சந்தோஷம் ஏற்பட்டு கலகலப்பான உற்சாகத்துடன் இருப்பார்கள். அரசியல் வாதிகளுக்கு எதிர்பாராத சிலவுகளும் ஏற்படலாம். தெய்வபக்தி வாழ்க்கையில் நல்ல திருப்பத்தை உண்டாகும்.

கன்னி

பணச்சிலவு அதிகம் ஏற்படும். சில சமயங்களில் அதிர்ஷ்டம் இவர்களைத் தேடிவரும் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு பதவி உயர்வும் கிடைக்கும். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு வருமானங்கள் தாராளமாக இருப்பினும், அலைச்சலும் வீண்குழப்பங்களும் இருந்து வரும். மாணவர்கள் வெளியூர் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டிவரும். அரசியலில் உள்ளவர்களுக்கு பொதுமக்களின் ஆதரவு நிறைந்து இருக்கும்.

துலாம்

குடும்பத்தில் பொருளாதார நிலை பொதுவாக அபிவிருத்தியடையும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் தொல்லைகளுக்கு உட்பட நேரிட்டு அதிக பொறுப்புகளை ஏற்க நேரிடும். வேலைவாய்ப்பு பெற நினைப்பவர்களுக்கு சுமுகமான நிலையும் காணப்படுகிறது தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். மாணவர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டு கல்வியில் தடைகள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. அரசியல் துறையில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத புகழ் வந்தடையும். கலைத்துறையிலும் விளையாட்டுத் துறையிலும் உள்ளவர்களுக்கு எதிர்பார்க்கும் இனங்களில் வெற்றி கிடைத்து புகழும் வருமானமும் வந்து சேரும்.

விருச்சிகம்

பொருளாதார நிலையில் அனுகூலமான மாறுதல் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு ஏற்பட்டாலும பொறுப்புகளை சமாளிப்பதில் சிரமமான நிலையும் ஏற்படும் தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு மந்தமான போக்கு காணப்படுகிறது. அரசியல் துறையில உள்ளவர்களுக்கு சுலபமாக நன்மைகளை அடைய வாய்ப்பு உண்டு. பொதுக் காரியங்களில் வெற்றி ஏற்பட இடமுண்டு

தனுசு

குடும்பவாழ்க்கையில் திருப்தியும் சுகமும் இருக்கும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவர் குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் ஏற்படும். தொழில் வியாபாரத்துறை

யில் உள்ளவர்கள் விசேஷ தன லாபம் அடைய அதிர்ஷ்டம் உள்ளது. அரசியல் ஈடுபாடு அனுகூலமான நிலையில் உள்ளது பெண்களுக்கு இதுவரை இருந்து வந்த சங்கடங்கள் நீங்கி சுகம் ஏற்படும

மகரம்

தொழில் வியாபாரம் முன்னேற்றமான நிலையில் சென்று கொண்டிருக்கும். உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகள், சகதொழிலாளர் ஆகியவர்களுடன் ஆதரவுடன் அலுவல்களை மேற்கொள்ளுவர் மாணவர்கள் உல்லாச உணர்வுடன் இருப்பார்கள். கலைத்துறையில் பெண்கள் நன்கு பிரகாசிப்பார்கள். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். அரசியல் ஈடுபாடு அனுகூலமாகயிருக்கும்.

கும்பம்

குடும்பத்தில் உறவினர் வருகையால் மகிழ்ச்சியும் சுப நிகழ்ச்சிகளும் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு ஏற்படும். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு சிறு தொல்லைகள் ஏற்பட்டாலும் நல்ல வருமான வாய்ப்பும் ஏற்படும் மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை உண்டாகும் அரசியல் ஈடுபாடு அலைச்சலும் சிலவும் ஏற்படும் ரேஸ் போட்டி, லாட்டரி இவற்றில் பலன் இராது

மீனம்

பொருளாதாரம் திருப்திகரமாயிருக்கும். தொழில் சம்பந்தமாக தூர பிரயாணம் ஏற்படும் மாணவர்களின் கல்வி நிலை சிரமமாக இருக்கும் மிகுந்த பிரயாசை மேற்கொள்ள நேரிடும். உறவினர் உதவி கூடிவரும். உடனடியாக முடிக்க வேண்டிய விஷயங்களை தள்ளிப் போடுவது நல்லது. கலைஞர்களுக்கு சுமாரான பணவரவு இருக்கும். அரசியல் ஈடுபாடு பிரயாணத்துடன் மிகுந்த சஞ்சலத்தைத்தர ஏதுவுண்டு.

உலகப் புகழ் பெற்ற ஸ்ரீகணேஷ்ராம்ஸ் 777 பிராண்ட்
உணவுப பொருள்கள உங்கள் அருகாமையில உள்ள
கடைகளில் இப்பொழுது கிடைக்கிறது.

- திடீர் புளியோதரை பேஸ்ட்
- திடீர் வத்தல குழம்பு பேஸ்ட்
- திடீர் மிளகு ரசம் & தக்காளி ரசம் பேஸட்
- டாம்-எகஸ் (TAM-EX) &
- கார்லிக்ஸ (GARLIX)
- கரகரப்பான, முறமுறப்பான அப்பளம் மற்றும் ஊறுகாய்

(REGD)

ஸ்ரீ க ணே ஷ் ரா ம் & கோ.,
சென்னை -600 001. போன் : 20401 & 20402

கேள்விச் செல்வம்

ஒருவன் எவ்வளவு தான் படித்தாலும், அறிவாளியாய் இருந்தாலும் அவனுக்கு இன்றியமையாத தேவை ஒன்று இருக்கிறது. அது தான் கேள்விச் செல்வம் வள்ளுவர் மிக அழகாக இதை செவிச் செல்வம் என்று அழைக்கின்றார். கேள்வியின் சிறப்பை நன்றாக உணர்ந்ததால்தான் அவர் அப்படிக் கூறுகின்றார்.

கேள்வி என்ற ஞானத்தால் ஒருவன் பல செய்திகளைப் பலரிடமிருந்து அறிந்து கொள்கிறான். ஒரு விஷயத்தைப் பற்றிய பல செய்திகளையும் அறிகிறான். புத்தகங்கள் துணைகொண்டு மாணவர்கள் 'படிக்கலாம் என்றாலும் ஆசிரியர்கள் பாடம் நடத்துவது அவசியமாகிறது. இதற்குக் காரணம்? . மாணவர்களுக்குக் கேள்வி என்ற அனுபவம் கிடைக்கிறது படிப்பதைவிடக் கேட்பதில் அவர்கள் அதிகப் பயன் அடைகிறார்கள்.

படிப்பு அதிகம் இல்லாதவர்கள் கூட வெறும் கேள்வி ஒன்றாலேயே மிகப்பெரிய அறிவாளிகளாகி இருக்கிறார்கள். கேள்வி அறிவினால் நன்றாக விஷயங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது கூட்டங்கள் காலட்சேபங்கள் விரிவுரைகள், மேடைப் பேச்சுகள், இவை போன்றவைகளால் மக்களுக்கு நல்ல நன்மைகள் உண்டாகிறது.

ஆனால், நான்கு பேரிடையே ஏற்படும் பேச்சுக்களில் பலர் வம்பு, சண்டை, அநாவசியமான பேச்சுக்கள் இவைகளையே பிரதானமாகக் கொள்கின்றார்கள். எவ்வளவோ உபயோகமான விஷயங்களைப் பிறருடைய பேச்சுக்களிலிருந்து கற்றுக் கொள்ளலாம். அனுபவம் என்ற ஒரு பெரிய நண்பன் கேள்வி மூலமும் ஒருவனுக்குக் கிடைக்கிறான்.

தங்களுடைய தவறுகளையும் தவறான அர்த்தங்களையும் திருத்திக் கொள்ளவும் மாற்றிக் கொள்ளவும் கேள்வி ஞானம் ஒருவனுக்கு உதவி செய்கிறது. கல்வி என்ற பெரிய சொத்து ஒருவனுக்குக் கேள்வியினாலேயே அதிகமாகக் கிடைக்கிறது. எந்தவிதக் கஷ்டமுமில்லாமல், பணச்செலவு எதுவுமில்லாமல் உடம்பை அலட்டிக் கொள்ளாமல் ஒருவன் கேள்விச் செல்வத்தைப் பெற முடியும்.

ஒருவனுக்குப் பல சந்தேகங்கள் இருக்கலாம் பல கேள்விகள் எழலாம். ஆனால், ஒருவருடைய பேச்சைக் கேட்கும்போது அவனுடைய சந்தேகங்கள் நிவர்த்தி அடையும் கேள்விகளுக்கு பதில் கிடைக்கும் மேலும் பேசுபவர்களின் நோக்கமும் கேட்பவர்களுக்கு உபயோகமாகவும் தெளிவு தருவதாகவும் இருக்கவேண்டும் என்பதே உண்மையாகப் பேசுபவர்கள் அப்படித் தான் பேசுவார்கள்.

ஒரு சராசரி மனிதனும் எழுதப் படிக்கத் தெரியாத பாமரனும் கேள்வியால்தான் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும் ஆகவே, அனைவரும் கேள்வி என்ற செல்வத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

ஆனால், ஒரே ஒரு விதி உண்டு. கேட்பவர்கள் பேசுபவர்களை நன்றாக எடைபோட்டு அன்னம் போல் நல்லது, கெட்டது, அறிவுக்குப் பொருத்தியது, அறிவுக்குப் பொருந்தாதது, அறிவுக்கு அப்பாற்பட்டது இப்படி வெவ்வேறு விதமாகத் தாங்கள் கேட்டவைகளைப் பிரித்துக் கொள்ள வேண்டும். பிறகு தங்

கள் சொந்த அறிவோடும் அனுபவத்தோடு பொருத்திப் பார்க்க வேண்டும் இது முக்கியமானது.

காரணம் என்னதான் கேள்வி என்று அதற்கு மதிப்புக் கொடுத்தாலும், தவருன பேச்சுக்களைக் கேட்டுச் சிலபேர் மாறுபட்ட வழிகளுக்கும், சிந்தனைகளுக்கும் அடிமையாகி விடுகிருர்கள் ஆகவே கேள்வியால் நமக்கு நன்மை ஏற்படவேண்டுமே தவிர, தீமை ஏற்பட நாம் அனுமதிக்கக் கூடாது.

பேச்சு என்பது எவ்வளவு பெரிய சக்தியோ, கேள்வி என்பது அவ்வளவு பெரிய சக்தி அதனுல் பேசுகிறவர்கள் கேள்வி பெற விரும்புகின்றவர்களின் அறியாமையையும், பலவீனத்தையும் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்தலாம். ஆகவே, கேள்வி என்ற சக்தியை விளுக்காமல், நல்ல வழிகளுக்கும் சிந்தனைகளுக்கும் பயன்படுத்துவதே அறிவுக்குப் பொருந்திய கேள்வியாகும்.

கேள்வி ஞானத்தை ஒருவன் அடைவதால் அவனுக்கு மேலும் மேலும் விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும், ஆசை அதிகமாகிறது: இதனுல் அவன் இன்னும் சிறந்த அறிவாளியாகவும் சிந்தனுவாதியாகவும் ஆக அவனுக்கு முடியும்.

இந்தக் கேள்விச் செல்வத்தைப் பற்றி வள்ளுவரின் ஒரு குறளைப் படியுங்கள்.

செல்வத்துள் செல்வம் செவிச்
செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

—வே. சு, ஸ்ரீதரன்

அழியாச் செல்வம்

ஒருவன தான் நினைத்தால் எல்லாச் செல்வங்களையும் அழித்துவிடலாம். அழிக்க [முடியாத செல்வம் அறிவுச் செல்வம். தன்னிடம் பல லட்ச ரூபாய் இருந்தால் உடனடியாக அழித்து சிலவு செய்ய முடியும். ஆனுல், பி. ஏ., எம். ஏ., எம். டெக., பி. எச்.டி. என்று தான் பெற்ற கல்வியை நாம் எவ்வளவு முயன்றுலும் அழிக்க முடியாதல்லவா! ஆகவே, அறிவுச் செல்வத்தை வளர்க்க உதவுங்கள். [ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்விக்கு வேண்டிய உதவியை முடிந்தவரை செய்யுங்கள். உங்களுக்கு நற்கதி கிடைக்கும. —குகதாசர்.

சாட்சிகள் பதினுன்கு

மனிதன் எதையும ரகசியமாக செய்யமுடியாது. பதினனகு சாட்சிகள மனிதனுடைய நடவடிககைகளைச சதா பார்த்துக கொண்டிருக்கிறாகள், அவர்கள சூரியன், சந்திரன், காற்று, நெருப்பு, வானம், நிலம், நீர், இதயம், யமன், பகல, இரவு, இரண்டு சந்தியா காலங்கள், தர்மம் இவை அனைத்தும மனிதனுடைய அலுவலகளைச சதா கவனித்தவண்ணம் இருக்கின்றன. ஆகவே, ரகசியம் எதுவும் கிடையாது —சாரு சுலோகம.



உதைப்பட்ட வள்ளல்

வல்லத்தில் வாழ்ந்திட்ட கச்சி யப்பர்
வாரிவாரிக் கொடுக்கின்ற வள்ளல். நல்ல
வெல்லத்தில் மொய்க்கின்ற ஈக்கள் போல
விரும்பிவந்து பாடுகின்ற புலவர்க் கெல்லாம்
பள்ளத்தில் வீழ்கின்ற வெள்ளம் போல
பரிசளிப்பார் பசும்பொன்னை. தமிழின் மீதில்
உள்ளத்தில் தீராத ஆசை. அந்த
உயர்தமிழுக்கு உயிர்விடவும் தயங்க மாட்டார்

வீரனெனும் பெரும்புலவர் அந்த நாளில்
வீரமுடன் பெயர்க்கேற்ப விளங்கி வந்தார்.
தீரமுடன் இருந்ததுபோல் அன்னார், கல்வித்
திறமையிலும் சிறந்தவராய் இருந்து வந்தார்
ஆரெனினும் அஞ்சிடவே மாட்டார் எந்த
அரசனென்ன? ஆண்டியென்ன? கலங்க மாட்டார்
ஊரார்கள் அவர்செருக்கை சினத்தைக் கண்டே
ஓடிடுவார், வசைபாடி விடுவார் என்றே

தம்முன்னே வருபவர்கள் யாரென் ருலும்
தமைககண்டு வணங்கிடவே வேண்டும் அன்றி,
தம்முன்னே வணங்காதார் யார் இருப்பினும்
தணியாத சினம்கொள்வார். சினமே கொண்டே
எம்முன்னே மதியாதார் ஒழிக என்றே
எடுத்தவுடன் வசைபாடித் தீர்ப்பார். இன்னம்
நம்முன்னே இவரிருக்க லாமோ? என்றே
நன்ருகப் புடைத்திடவும் செய்வார் அன்னர்.

பல்லாக்கின் மீதேறி ஓர்நாள் சோற்றுப்
பள்ளிகளைப் பார்வையிடப் போனுர் வள்ளல்
சொல்வாக்கில் மிகுந்திருந்த புலவர், வெள்ளை
சூரியன்போல் எதிரினிலே நடந்து வந்தார்
செல்வாக்கில மிகுந்திருந்த கச்சி யப்பா
சிறிதேனும் கவனியாமல் போகக் கண்டு,
பல்லாக்கை நிறுத்துங்கள்! என்று கோபப்
பார்வையுடன் குரலகொடுத்தே அருகில சென்ருர்

என்செய்வேன்? எனநடுங்கிக் கொண்டே வள்ளல்
இறங்கிவந்து புலவர்க்கு வணக்கம் சொன்னார்.
என்னதிமிர் என்னெதிரில் சிவிகை விட்டே
இறங்காமல் வருவதறகே? என்று வீரன்
விண்ணதிரக் கேட்டபடி காலால் எட்டி
வேண்டுமட்டும் வள்ளலாரை உதைக்க லானார்.
கண்ணெதிரே பார்த்திருந்த காவ லர்கள்
கண்கலங்கக் கோபத்தால் துடிக்க லானார்.

புலவரெனை உதைக்கவில்லை. நானன் பாலே
போற்றுகின்ற தமிழ்உதைத்திற் றென்று கூறிப்
பலநாளும் நடக்கின்றீர். இனிமேல் என்றன்
பல்லாக்கில் செல்லுங்கள் ஐயா! என்று
புலவனாரின் கால்களிலே வீழ்ந்து, குற்றம்
பொறுத்தருள்க! எனவேண்டிக் கொள்ள லானார்.
புலவர்க்குக் கச்சியப்பர் செய்த செய்கை
புதுவியப்பைக் கொடுத்திற்று மலைத்துப் போனார்.

—பண்ணுருட்டி பரமசிவன்

குண்டூசி
வருட சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 20
தனிப் பிரதி ரூ. 1-20

பாம்புக் கொல்லி மூலி

வைத்திய மேதை - அமரர் சுவாமி ஹரியானந்தா, லக்ஷ்மிபுரம், கீழக்கரை

இம்மூலிகை செடி இனத்தைச் சேர்ந்தது. இம்மூலிகை அடர்ந்த காடுகளிலும்—செம்மண்டியதேறிக் காடுகளிலும் செடி கொடிகள் அடர்ந்த மலை உச்சியிலும் இந்த பாம்புக் கொல்லி மூலி தென்படுகிறது இம்மூலிகை இருக்கும் இடத்தைச் சுற்றி இரு மைல் தூரத்திற்கு விஷ ஜந்துக்களோ, நாகங்களோ தென்படாது இதன் இலையை ஒடித்தால் இரத்தம் போன்ற திராவகம் வடியும். இத்திராவகத்தைச் சேகரித்து வைத்திருந்தால் பல நூறு ஆண்டுகள் கெட்டுப் போகாது வருடங்கள் செல்லச் செல்ல திராவகத்தின் சக்தி அதிகரிக்கும் பாம்பு தீண்டி இறந்தவர்களின் கண்களில் இத்திராவகத்தை ஒரு துரும்பினால் தொட்டு கண்ணில் விட, உடனே விஷம் அமிர்தமாகி எழுந்திருப்பான்.

இம்மூலிகை குற்றாலமலைகளிலும், கொல்லிமலை, மருந்து வாழ் மலைகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. செம்மண் பகுதிகளிலும் அதிகமாக இருக்கிறது ஒரு அடி முதல் இரண்டு அடி உயரம வரை இம்மூலிகை வளரும். இதன் இலை வேம்பின் இலையைப் போலவும், மலர் விஷ்ணுகிரந்தியின் நீலமலரை யொத்தும் இருக்கும்.

இதன் வேரையும், மைக்கொன்றை வேரையும் சம அளவு எடுத்து வஸ்திர காயம் செய்து குழி அம்மியிலிட்டு வல்லாரை இலைச்சாற்றால் நன்கு அரைத்து சிறு பயிறு அளவு மாத்திரையாக்கி போகம் நீக்கி உண்டுவர முடக்கு வாதம், ஒரு கால் கையை முடமாக்கும் பக்கவாதம், இடுப்புக்கு கீழ் முடமாகிய வாதம், இவைகள் குணமாகும். தேகத்தின் நாடிநரம்பு இக்குளிகையை உண்டுவர ஒப்பற்ற வீரிய சக்தி பிரகாசிக்கும்,

இதன் மலரையும்-ஆவாரையின் மலரையும் சமமாக எடுத்து அரைத்து பாக்களவு மாத்திரையாக்கி காலை மாலை உண்டுவர இரத்தம் சுத்தமாகும், தேகத்தில் உள்ள உப்புநீர், வாதநீர், சர்க்கரைச் சத்து குறைந்து தேகம் வனப்புடன் மிளிரும். பெண்கள் இக்குளிகையை உண்டுவர அழகுடன் மிளிர்வர், தேகம் பொன்நிறமாகும். அங்கங்கள் அழகுபெறும்.

இம்மூலிகையின் சமூலம் ஒரு பங்கு, நெய்கொட்டான் சமூலம் ஒரு பங்கு, பூரசுமூலம் ஒரு பங்கு, இந்த மூன்று சமூலங்களையும் சமமாக எடுத்து நிழலில் உலர்த்தி-இடித்து வஸ்திரகாயம் செய்து அமிர்தப் பாலால் அரைத்து சுண்டைக்காய் அளவு மாத்திரை நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு காலை மாலை ஒரு மாத்திரை வீதம் உண்டுவர, யானைக்கால் வியாதி ஆறு மண்டலத்திற்குள் குணமாகும். சாக்கை வலிப்பு, பித்தபைத்தியம் இவைகள் மூன்று மண்டலத்தில் தீரும். இது ஒரு சித்திதரும் குளிகை.

இதை ஆறுமண்டலம்தொடர்ந்து உண்பவர்கள் பூரண ஆயுள் வரை சமதிடத்துடனும், இளமையுடனும், மகா வீரியத்துடனும், அங்கம் தளராத நிலையிலும் இருப்பர். கறுத்த தேகம்உடையவர்கள் பொன்கலரில் பிரகாசிப்பார்கள். காட்டுகற்பமூலிகைகளில் மகா சக்தி படைத்தது இது போகம் நீங்கி உண்டு பெரு நிலையடைந்து இறைத் தொண்டு புரிந்தால் மூலிகையின் சக்தி அதிகரிக்கும்.

நடராஜா அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர் : கே. ராதாகிருஷ்ணன்
அலுவலகம்: நெ. 78, டாக்டர் பெஸண்ட்சாலை, சென்னை-14, தமிழ்நாடு. போன்: 84463.